www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

மே.04–10,1997

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 203

# வன்னியில் சூழும் அபாயம்!

## யாழில் மீண்டும் 87

## தந்திரமான தாக்குதல்கள்



## சினிமா உலக இரகசியங்கள்!

## அருணாச்சலம் எப்படி?



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## இதுவும் ஒரு 'ராக்கிங்'

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

யாழ்ப்பாணத்தில்
நடைபெற்ற கூத்து
வேதனையான வேடிக்கை!

மாணவர்கள் மத்தியில்தான்
'ராக்கிங்'
நடப்பது வழக்கம்!

மக்களையே
'ராக்கிங்' செய்யலாம்
என்பதை
படையினர் யாழ்ப்பாணத்தில்
நடத்திக் காட்டியிருக்கிறார்கள்!

'அழகு ராணிப் போட்டி',
'அழுகைப் போட்டி'
என்று யாழ்ப்பாணத்தில்
களியாட்ட விழா நடத்தியது
மக்களை 'ராக்கிங்' செய்ததுபோலத்தான்!

அல்லல்படும் மக்களிடையே
அழகு ராணிகளை
தெரிவு செய்யும்
அவசரம் ஏன் வந்தது?

இழவு வீட்டில் போய்
அழுகைப் போட்டியும்
அழகு ராணிப் போட்டியும்
நடத்தியது போலாகிவிட்டதே!

படை உயரதிகாரிகள்
எவ்வாறு அனுமதித்தார்கள்
என்பது தெரியவில்லை!

மக்களை மகிழ்விக்க விரும்பினால்
விளையாட்டுப் போட்டிகள்,
கலை நிகழ்ச்சிகள்
என்பவற்றோடு நிறுத்தியிருக்கலாம்!

படையினரில் ஒரு சாரார்
பெண்களுடன்
நடந்துகொள்ளும் முறைகள்
தொடர்பாக புகார்கள்
தெரிவிக்கப்பட்டு வருகின்றன!

இந்நிலையில்
அழகு ராணிப் போட்டிகள்
நடத்துவது
மக்களிடம் படையினர்
மதிப்பைப் பெறவும் உதவாது!

எதனைச் செய்ய வேண்டுமோ
அதனைச் செய்யாது,
எதனைச் செய்யக்கூடாதோ
அதனைச் செய்வதுதான்
எந்தப் பிரச்சனையும் இங்கே
தீராமல் தொடரக் காரணம்!

மக்களின் மனங்களை
வென்றெடுப்பதாகச் சொல்லிக்கொண்டு
படையினர் நடத்திய
களியாட்ட விழாவும்
அதே ரகம்தான்!

இனிமேலாவது இவ்வாறான
கூத்துக்கள் தொடராமல்
பார்த்துக் கொள்ள வேண்டியது
படைத் தலைமையின் பொறுப்பாகும்!

மக்களைக் கவர
களியாட்ட விழா நடத்துவதைவிட
கெடுபிடிப் போக்குகளை
தளர்த்துவதே பயன் தரும்.

களியாட்ட விழாக்களை
காணாதவர்களல்ல யாழ் மக்கள்.
போர் வெடிக்க முன்னர்
எத்தனையோ களியாட்டங்கள்
யாழில் நடந்ததுண்டு!

அப்போதெல்லாம்
பொலிஸ்காரர்கள் சிலரின்
நடவடிக்கைகளால்
களியாட்ட விழாக்கள்
கலவரமாக முடிந்ததும் உண்டு!

அதெல்லாம் ஒரு காலம்.
யாழ்ப்பாணம் யாழ்ப்பாணமாக
பொலிவுடன் திகழ்ந்த காலம்!

கடும் உழைப்பால் சிறந்த
யாழ் மக்கள்
கையேந்தாமல் வாழ்ந்த காலம்!

போர் இப்போது
அந்த யாழ்ப்பாணத்தை
உருத்தெரியாமல் ஆக்கிவிட்டது.
மண்ணை மட்டுமா? மக்களையும்
கந்தல் துணியாய்
கிழித்துப் போட்டிருக்கிறது!

மாபெரும் இடம்பெயர்வின்
சோகங்கள் இன்னமும் ஆறவில்லை.
இடிபாடுகளும்,
உடமை இழப்புக்களும்
வரலாற்றுச் சோகத்தின்
சாட்சியங்களாக உள்ளன.

இந்நிலையில்-அந்த மண்ணில்
அழகுராணிப் போட்டியும்
அழுகைப் போட்டியும் நடத்தியது
'வெந்த புண்ணில்
வேல் பாய்ச்சுவது' போலத்தான்!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## பரிசுத்தமுள்ள வாழ்க்கை

பிரியமானவர்களே! நம்முடைய ஆண்டவர் பரிசுத்தமுள்ளவர். நம்மிடத்தில் அவர் எதிர்பார்க்கின்ற முதல் தகுதி பரிசுத்தமுள்ள வாழ்க்கையைத்தான். உங்களுக்காக மரித்த அவர் உங்கள் ஒவ்வொருவரிடத்திலும் பரிசுத்தமுள்ள வாழ்க்கையைத்தான் எதிர்பார்க்கிறார்.

புதிய ஏற்பாட்டில் பவுல் சொல்கிறார்: "ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக்கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்." (1 கொரி 3:17)

அன்பான, சகோதரனே! சகோதரியே!

ஆலயமாகிய நம் சரீரம் பரிசுத்தமடைவதற்காகத்தான் தம்முடைய விலையேறப் பெற்ற இரத்தத்தை சிலுவையிலே சிந்தினார். அவருடைய இரத்தத்தால் கழுவப்படும்போது சரீரம் முழுவதும் பரிசுத்தமாக்கப்பட்டு இரட்சிப்பின் சந்தோஷம் கிடைக்கிறது. இச் செய்தியை வாசிக்கிற உங்களிடத்தில் கர்த்தர் எதிர்பார்ப்பது பரிசுத்தமுள்ள வாழ்க்கையைத்தானே?

தி.பெ.தேவபாலன், மட்டக்களப்பு.



## சிந்தனைக்குச் சில அறிவுரைகள்

'தௌராத்' வேதத்தில் இறைவன் அருளியுள்ளதாவது:-

"ஓ! ஆதமின் மகனே! நான் உனக்குக் கொடுத்தவற்றைக் கொண்டு நீ திருப்தி கொள்வாயானால் உனது உள்ளத்தை அமைதி பெறச் செய்வேன்: அவ்வாறின்றி, நான் உனக்குக் கொடுத்தவற்றில் நீ திருப்தியடையவில்லையானால் (துன்யா) உலகத்தை உன்மீது சாட்டிவிடுவேன். இவ்வுலகம் எனும் மாயையில் காட்டு விலங்குகள் அசைபோடுவது போன்று நீ அலைந்து திரிவாய்.

எனது அடியானே! எனது கண்ணியத்தின்மீதும், வல்லமையின்மீதும் ஆணையிட்டுக்கூறுகிறேன். நான் உனக்கென்று விதித்துள்ளதைத் தவிர மேலதிகமாக உலகில் நீ எதையும் பெற்றுக் கொள்ள மாட்டாய். வானத்துக்கும் பூமிக்கும் இடையில் சிறகுகட்டிப்பறந்து நீ முயற்சி செய்தாலும், உனக்கெனப் பங்கிடப்பட்டதைவிட ஒரு முடக்கு நீரைக்கூட நீ அதிகமாகப் பெற்றுக்கொள்ளமாட்டாய்!

ஆதாரம்:- "நூருல்பயான்"

திஹாரிய-ஹாரித்.

## கவிதைப் போட்டி இல.200

### பரிசுக்குரிய கவிதை



### புரிகிறதா?

போரென்றால்
போரென் போர்க்குப்
புரிகிறதா–
புலம் பெயர்ந்தோர்
அவல வாழ்வு?

காரைதீவூர் சிவம்–
குருக்கள்மடம்.

## இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

### பகலுமிங்கு இருளாக...

சொந்தமிழந்து சொத்துமிழந்து
விழிகளையும் சேர்த்திழந்து
பாறை பிளந்து பார்த்த நீர் சுமைகள்
கோலமிழந்து கோர்த்த சோகங்கள்..
வடித்திடும் கஞ்சியை
குடித்திடும் வாழ்வினதாய்..
சிரித்தாடிய சித்திரைகளின்று
எப்படி மாறிச்சித்திரவதையானதோ?

தெ.றஞ்ஜனா- இறம்பைக்குளம், வவுனியா.

### மாறாத நிலை

தாய் மடியில் கண்திறந்து,
போர் மடியில் செயலிழந்து,
அகதி முகாம் தேடி வந்து,
புத்தாண்டு பல கண்டும் இன்னும்
புதுக்கஞ்சி கிடைக்கவில்லை!

ஆ.ஜெகதீஸ்வரன்-புசல்லாவ.

### பிச்சை!

யுத்ததேசம்
எனக்கிட்ட
மிகப் பெரிய பிச்சை!

சி.ஸ்ரீரவி- இரத்தினபுரி.

### சக்கரம்

எட்டுத் திசையையும்
கட்டி ஆண்ட
பரம்பரை-இன்று
வட்டில் ஏந்துது.....!

சுபா வரன்-கண்டி.

### தாகம்

'நீர்'- தாகத்தை
மோர்வகை தீர்க்கலாம்...!
'போர்'- தாகத்தை
யார்தான் தீர்ப்பார்...?

"பூநோனா" பஹ்மிதா வாஹிட்-
பதுளை.

### வறுமை

போர் இங்கே
அமைக்குது பார்..!
இங்கும் ஒரு-
எதியோப்பியா!

எஸ்.மதன்ராஜ்-நுவரெலியா.

### வாழ்க்கை

பாழும் போரில் தேசம் இருள் நோக்க,
பட்டினிச் சாவினை நம் வாழ்வு நோக்க,
நடைப்பிணமாக நாங்கள் ஏந்தும்
கஞ்சிச்சோற்றில் வாழ்வு எத்தனை நாள்???

தெ.லோஜனா–கொழும்பு-15.

### காலக் கோலம்

கட்டவிழ்ந்த காடைத்தனம்
கட்டியம் கூறியதால்-
இனவாதம் நோயாகி
மணித்தீவை வாட்டுவதால்-
கூழுக்கும் கையேந்தி
குடிசையிலே வாழுகின்றோம்!

க.சுசிலா-கல்லடி வேலூர்,
மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.203



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 10.05.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.203
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

அன்பின் தினமுரசே,

நான் கொழும்புக்கு வந்ததிலிருந்து கடந்த நான்கு வருடங்களாக உன்னுடைய வாசகி. நீ எங்கள் வீட்டுக்கு வந்ததும் ஒரே மூச்சில் ஒரு எழுத்து விடாமல் படித்து முடித்துவிடுவேன்.

கதைகளிலும், சினிமாவிலும் வருபவர்களுக்குத்தான் மல்லாவின் அன்புள்ளம் இருப்பதை வாசித்திருக்கிறேன். ஆனால் இந்த நூற்றாண்டில் இப்படி ஒரு ஆண் தனக்குப் பசிக்க, பெண்ணுக்கு ஊட்டுபவன் விக்ரம் மல்லாவாகத்தான் இருக்க வேண்டும். சபாஷ், பூலான் கொள்ளை ராணியானாலும் கொடுத்து வைத்தவள்.

செல்வி அனோஜிகா, தர்மிஹரன், கொழும்பு-06.

என் இனிய முரசே,

உனது வாயிலாக வெளிவரும் அனைத்து அம்சங்களும் திருப்தியானவையே. அவற்றில் 'பாப்பா முரசு'ம் ஒன்று. இதில் வரும் அனைத்து விடயங்களும் என்னைப் போன்ற மாணவிகளுக்கு மிகவும் உகந்தவை. இராமாயணமும் எனக்கு மிகவும் பிடிக்கும். என்றும் உனது முரசொலிகளுக்கு எனது இனிய வாழ்த்துக்கள்.

செல்வி அ.தர்மிதா, மண்டூர்-1

'அல்பிரட் முதல் காமினி வரை' அற்புதன் தரும் தொடர் சென்ற வாரம் உச்சக் கட்டத்தை எட்டிவிட்டது. தினமுரசின் மிக முக்கியமான பகுதியாக நான் அதை வாசிப்பதுண்டு. இந்தியப் படைகளின் கொடூரமான செயல்களை யாராலும் மன்னிக்க முடியாது.

டக்ளஸ் ஏபிரகாம், வெளிசற, ராகம.

முரசில் வரும் எல்லா ஆக்கங்களையுமே படித்து வருகிறேன். அதிலும் குறிப்பாக அரசியல் தொடரை தொடர்ந்து வாசிப்பதன் மூலம் எமக்கு தெரியாத பல விசயங்களை அறியக் கூடியதாக உள்ளது. அத்துடன் பூலான்தேவி தொடர், இலக்கிய நயம் என்பன வெகுசிறப்பாக உள்ளன. இலக்கிய நயத்தை வள்ளுவனின் குறளை எடுத்துக் காட்டி உள்ளங்கை நெல்லிக் கனி போல புரிய வைப்பது ரசிகனின் தனிப்பாணியே. அவருக்கு எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

பொ.சுகந்தி, கொழும்பு-11.

'கனவு மெய்ப்பட வேண்டும்' கதை மிகவும் விறு விறுப்பாக செல்கின்றது. அதிரடி அய்யாத்துரை வெகு ஜோர். சுஜாதாவின் கை வண்ணம் முரசில் தொடர்வதையிட்டு மிகவும் சந்தோசம்.

திருமதி.சீத்தா இராமையா,
ஒல்டன் த.வி. சாமிமலை.

# வாசக(ர்) சாலை




அன்பின் முரசே!

இது வெறும் உதட்டளவிலான பாராட்டல்ல. உள்ளத்தால் உள்ளபடியே கூறும் வார்த்தைகள். ஆளும் அணி- எதிரணி இனப்பிரச்சனை ஒத்துழைப்புக்கு பாராட்டுக்கள் ஒருபுறம். இனவாதிகளின் வசைகள் மறுபுறம். இந்த இரு தரத்தாருமே அந்த ஒத்துழைப்பு இணக்கத்தின் உண்மையை அறிந்திலர். எம்மையும் அன்றோ குழப்பினர். முரசே! நீ மட்டும் விருப்பு வெறுப்பு அற்று நேர்நின்று உண்மை உரைத்தாய்! அந்த உண்மை உறுதியாவதைக் கண்டுவருகிறோம். வாழைப்பழத்தில் ஏற்றப்படும் ஊசியையும் கண்டுபிடித்துச் சொல்லும் எக்ஸ்ரே கண்கள் முரசுக்கு!

சி.நவரத்தினராசா, வவுனியா.

## எத்தனை காலம்?

எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே? நம் நாட்டிலே? இணக்கம் என்பார்கள், பின்னர் சுணக்கம் செய்வார்கள். இறுதியில் பிணக்குப்படுவார்கள்! தெரியாதா எமக்கு. வதந்திகளுக்கு சாட்டையடி கொடுத்த ஒரே பத்திரிகை நீதான்!

என்.முருகையன், நீர்கொழும்பு.

## கற்பனையல்ல

காதிலை பூ கந்தசாமி குத்துக்கரண அரசியல்வாதிகளுக்கு அல்வா கொடுத்து வருகிறார். நடப்பதையும் நடக்கப் போவதையும் நகைச்சுவையாய் சொல்வதை கற்பனை என்று ஒப்புக்கொள்ள மாட்டேன். காதில் பூ வைப்பது கந்தசாமியல்ல, நம் அரசியல்வாதிகள்தான். அதனை வெளிச்சம் போட்டுக்காட்டி நகைச்சுவையாகச் சொல்வது எப்படிக் கற்பனையாகும்? கை கொடுங்கள் கந்தசாமி.

வீ.பஷீர்கான், கம்பளை.

முரசை ஆரம்பம் முதலே படித்து வருகிறேன். பெண்கள் தொடர்பான- காலத்திற்கு ஒவ்வாத கருத்துக்களை மதிப்பிழக்கச் செய்வதில் 'முரசு' நன்கு பங்காற்றியுள்ளது. பெண்களுக்கு புத்தியில்லை, பெண் விடுதலை என்றால் ஆண்கள் சேலை துவைப்பது, கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன், மிருகங்கள் பெண்ணை வதைத்தால் அதனால் கற்பே அழிந்துவிடும் போன்ற புற்று நோய்க் கருத்துக்களை முரசு தாங்கிவருவதில்லை. அதே முரசில் பெண்களின் உணர்வுகளை கௌரவிக்கும் பிரபஞ்சனின் தொடர் வருவது மகிழ்ச்சிக்குரியது. பாராட்டுக்கள்.

செல்வி ரேணுகா, கொழும்பு-06.

என் இனிய முரசே!

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் அருமையிலும் அருமை. ரசனை நிறைந்த படைப்புக்கள் தரும் ரசிகனுக்கும் முரசுக்கும் என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

சா.காந்தன், கரிசல், பேசாலை.

## கறைபடிந்த வரலாறு

அன்பின் முரசே!

உனது நீண்டகால வாசகர்களில் நானும் ஒருவன். எத்தனையோ மாணவர்களை இச்சமூகத்திற்கு நிறைவானவர்களாக ஆக்கிய புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் ஜேம்ஸ் அருமைநாயகத்தின் மாணவன் நான். என்னைப்போல எத்தனையோ மாணவர்களின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் வழிசமைத்த, அந்த தெய்வத்தினை எம் கண்முன் கொண்டு வந்த அற்புதனுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

இந்திய இராணுவத்தின் கறைபடிந்த வரலாறில் இப்படுகொலை ஒரு அத்தியாயமே. எம் மனங்கவர்ந்த ஆசானின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ளக்கூட இயலாமல் போனதை நினைக்கையில் மனம் வேதனையில் வேகுகின்றது. அவரின் புன்னகை ததும்பும் முகமும் எமக்குக் காட்டிய பாதைகளும் நாம் அவர் மேல் கொண்ட பாசமும் என்றும் அழியாது.

பெனில்டஸ் ஜோன்சன், கதிரேசன் மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி.

## கண்ணெதிரே நடந்ததுபோல்....

என் இனிய தினமுரசே!

'முரசின்' அரசியல் விமர்சனங்கள், அலசல்கள், கடந்தகாலத்தை நினைவூட்டுவதுடன் எதிர்கால நடப்புக்களையும் முன்னறிந்து தரும் துல்லியம்தான் எம்மை எல்லாம் வியக்கவைக்கிறது.

இலங்கையின் வட பகுதியில் 1990ம் ஆண்டு வரை வசித்தும், உன்னை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. இந்திய அமைதிப்படை அங்குவந்து இழைத்த கொடுமைகளையும் அடாவடித்தனங்களையும் வாசித்தபோது அவை கண்ணெதிரில் நடந்தவை போலிருந்தது. என்னைப்போல, உன்னில் பிரியமுள்ள ஒரு நண்பர் கிழமை தவறாமல், உன்னை எனக்குக் கொண்டு வந்து தருவார். அது உனக்குக் கிடைக்கும் தனிமரியாதை.

அன்பின் முரசே! வாரத்தில் ஒரு நாள் உன்னைப் பார்க்கத்தவறினால், தவியாய் தவிக்கும் நெஞ்சங்களில் நானும் ஒருவன். மென் மேலும் தொடரட்டும் உன்பணி. எனது வாழ்த்துக்கள்.

எம்.எஸ்.கந்தசாமி, NSW-2140, அவுஸ்திரேலியா.

நீ வாரம் தோறும் சுமந்துவரும் கொள்ளைராணி பூலான் தேவியின் கதை என்னை மிகவும் கவர்ந்துள்ளது. அத்தோடு கனவு மெய்ப்பட வேண்டும் இனிய விருந்து.

சி.செல்வராணி, வெட்டுவாய்க்கால் வீதி, காரைதீவு-12.



படிப்பகம்

www.padippakam.com

# முன்னேற அனுமதித்துவிட்டு முற்றுகை!

# வன்னியில் புலிகள் ஆயத்தம்!

**வன்னியில் படையினரின் புதிய நடவடிக்கையை தமது தளப்பகுதியில் எதிர்கொள்ள புலிகள் இயக்கத்தினர் தயாராகியுள்ளனர். வவுனியா–கிளிநொச்சி றோட்டில் படையினர் முன்னேறுவதைத் தடுப்பதிலேயே புலிகளின் முழுக்கவனமும் குவிந்திருக்கிறது.**

(வன்னியில் இருந்து விவேக்)

"படையினரின் முன்னேற்றத்தை முறியடிக்க புலிகளின் அணிகள் தயார் நிலையில் இருக்கின்றன. மக்கள் பீதி கொள்ளத் தேவையில்லை" என்று புலிகள் வன்னியில் கூறிவருகின்றனர்.

"வவுனியா-கிளிநொச்சி றோட்டில் படையினர் முன்னேறிவந்தால் உள்ளே இழுத்து விட்டு முற்றுகையில் சிக்க வைப்போம்!" என்று புலிகள் இயக்கப் பிரமுகர்கள் மக்களிடம் தெரிவித்துள்ளனர்.

## பல முனைகளில்

வவுனியா–கிளிநொச்சி றோட்டில் மோதல் தீவிரமாக நடைபெறக்கூடிய பகுதிகளில் உள்ள மக்களை வேறு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு புலிகள் கூறியுள்ளனர்.

எந்த முனையில் இருந்து பிரதான முன்னேற்றம் நடைபெறும் என்று புலிகள் ஊகிக்க முடியாதவகையில் பல முனைகளில் இருந்து படையினர் முன்னேறலாம் என்று கருதப்படுகிறது.

கனரக வாகனங்கள், உழவு இயந்திரங்கள் போன்றவை படையினரால் வன்னிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

மன்னார்-பூநகரி வீதி கடற்கரைப் பகுதி சார்ந்ததாக இருப்பதால் அங்கு பயன்படுத்தவே உழவு இயந்திரங்கள் கொண்டு செல்லப்படுகின்றன என்றும் கூறப்படுகிறது.

அதனால் மன்னார்-பூநகரி றோட்டை கைப்பற்றி அதன்மூலம் வவுனியா யாழ்ப்பாண தரைப்பாதையைத் திறப்பதுதான் படையினரின் நோக்கம் என்று இராணுவ ஆய்வாளர்கள் கணிப்புக் கூறியுள்ளனர்.

மன்னார்-பூநகரி றோட் மூலமாக படையினர் முன்னேறினால் புலிகள் மிதமான தாக்குதல்களையே நடத்துவர். புலிகளின் பிரதான கவனம் வவுனியா-கிளிநொச்சி றோட்டில் இருப்பதால் மன்னார்- பூநகரி றோட் தமது கையில் சுலபமாக விழுந்துவிடும் என்று படையினர் நினைப்பதாகத் தெரிகிறது.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி 73 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. மன்னாரில் இருந்து பூநகரி 75 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது.

## மக்கள் வெளியேற்றம்

மன்னார்-பூநகரி றோட் மூலமாக படையினர் முன்னேறலாம் என்று எதிர்பார்த்து அங்குள்ள மக்கள் வேறு பகுதிகளுக்கு செல்லத் தொடங்கியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் குருநகர் போன்ற பகுதிகளில் இருந்து படகுகள் மூலம் இடம் பெயர்ந்த மக்கள் மன்னார் மாவட்டத்திலேயே தங்கியிருந்தனர்.

படையினர் முன்னேறிச் செல்லக் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் பாதைகளை ஒட்டியே அவர்கள் தங்கியிருந்தனர்.

அந்த மக்கள்தான் தற்போது யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். மேலும் பலர் யாழ் செல்ல காத்திருக்கின்றனர்.

படையினர் முன்னேறிச் செல்லத்தக்க பகுதிகள் என்று கருதப்படும் இடங்களிலுள்ள புலிகள் இயக்க உறுப்பினர்களின் குடும்பத்தினரும் முல்லைத்தீவு மாவட்டத்திற்குள் பாதுகாப்பான பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

## போர்க்கால சூழல்

போர்க்கால சூழலில் வன்னிப்பகுதி காணப்படுகிறது. படையினரின் நடவடிக்கை ஆரம்பமானால் தமது நிலை மேலும் மோசமாகும் என்று வன்னியில் உள்ள மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

வவுனியா-கிளிநொச்சி றோட்டில் புலிகள் பாரிய பதுங்கு நிலைகளை அமைத்து வருவதுடன், தாக்குதலுக்கான தயாரிப்புக்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான மோட்டார் ஷெல்கள் புலிகளின் வாகனங்களில் முன்னரங்க நிலைகளுக்குக் கொண்டு செல்லப்படுவதை அவதானிக்க முடிகிறது.

படையெடுப்பை முறியடிக்க புதிய உறுப்பினர்கள் தம்முடன் இணையுமாறும் புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இதேவேளை, படையினரின் புலனாய்வுப்பிரிவினர் புலிகளின் நடமாட்டங்கள் பற்றி வவுனியா வரும் மக்களிடம் தகவல்களைச் சேகரிக்கின்றனர். புலிகளின் கவனம் எங்கு குவிந்துள்ளது என்பதையும், புலிகளின் பலம் என்னவென்பதையும் நாடிபிடித்தறிந்துவிட்டு தமது நகர்வை மேற்கொள்வதே படையினரின் நோக்கம் என்று தெரிகிறது. அதற்காகவே படைக் குவிப்பின் பின்னரும் தாமதம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# மட்டு–மோதல்கள்

கடந்த 21.04.97 அன்று மட்டக்களப்பு வாழைச்சேனையில் இராணுவ அணிமீது நடத்தப்பட்ட தாக்குதலில் தமது தரப்பில் இரண்டுபேரே பலியானதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர். இத்தாக்குதலின் பின்னர் புலிகளை சுற்றிவளைக்கும் முயற்சியில் ஈடுபட்ட படையினருடனான மோதலில் தமது தரப்பில் மூவர் பலியானதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

25.04.97 மட்டக்களப்பு கொட்டடி இராணுவ முகாமருகே நடைபெற்ற தாக்குதலில் 4 படையினர் பலியாகினர். தமது தரப்பில் எவ்வித இழப்பும் இல்லை என்று புலிகளின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ் நகரில் கைக்குண்டுத் தாக்குதல்கள்!

யாழ்ப்பாண நகரப்பகுதியில் கைக்குண்டுத் தாக்குதல்களில் ஈடுபட புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

யாழ்ப்பாண நகரப் பகுதி படையினரின் தீவிர கட்டுப்பாட்டில் இருப்பதால் பாரிய தாக்குதல்களில் புலிகள் இயக்கத்தினர் ஈடுபடமுடியாதிருக்கிறது.

ஒருவர் அல்லது இருவர் பங்குகொள்ளும் தாக்குதல்களில்தான் புலிகள் அங்கு ஈடுபடக்கூடும் என்று படையினர் எதிர்பார்க்கின்றனர்.

யாழ் நகரில் புலிகள் இயக்கத்தினர் மறைத்துவைத்துள்ள கைக்குண்டுகளை புதிய தாக்குதல்களுக்கு அவர்கள் பயன்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாண நகருக்குள் சில பகுதிகளில் புலிகள் கைக்குண்டுகளை வீசியபோதும் அவை வெடிக்கவில்லை. மறைத்துவைத்த போது சரியான முறையில் வைக்கப்படாமையால் குண்டுகள் பழுதடைந்துவிட்டமையே வெடிக்காமைக்கான காரணமாகும்.

இதேவேளை யாழ் குடாநாட்டில் படையினரின் சுற்றி வளைப்புக்களின்போது புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஒருவாரத்தில் குறைந்தது இரண்டு பேராவது பலியாகின்றனர்.

கடந்த 24.04.97 அன்றும் யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் படையினர் மறைந்திருந்து தாக்கியதில் கப்டன் வெள்ளை என்னும் புலிகள் இயக்க உறுப்பினர் பலியானார். அதற்கு முன்னர் கேண்டாவில் பகுதியில் சுற்றிவளைப்பு ஒன்றில் மேஜர்வசி (நவரத்தினம் சிவகுமார்-யாழ்ப்பாணம்) என்பவர் பலியானார்.

# திருமலையில் புலிகள் தாக்குதல்!

## ஆயுத விபரங்கள் தெரிவிப்பு!

புல்மோட்டை 10ம் கட்டை முகாமில் இருந்து றோந்து சென்ற இரண்டு இராணுவ அணிகள் 27.04.97 அன்று புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகின. காலை 8.53 மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதலில் 22 படையினர் பலியாகினர். புலிகள் தரப்பில் இரண்டாம் லெப்டினன்ட் எழில் வேந்தன், இரண்டாம் லெப்டினன்ட் ராசன் ஆகியோர் பலியாகினர்.

இத்தாக்குதலில் தம்மால் கைப்பற்றிய ஆயுதப்பட்டியலை புலிகள் வெளியிட்டுள்ளனர். ஏ.கே.எல்.எம்.ஜி-01, 60 எம்.எம். மோட்டார்-01, ரி.56-02 ரக துப்பாக்கிகள்-10, ரி.56 பட்மொடல்-01, தொலைத் தொடர்பு சாதனம்-01, ஏ.கே ரவைக் கூடுகள்-72, 60 எம்.எம்.எறிகணைகள்-11, நடுத்தர ரவைகள் 816 ஆகியன கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேதினம் தோப்பூர் பொலிஸ் காவலரண்மீதான தாக்குதலில்: 40 எம்.எம். சிங்கப்பூர் டொல்சான்-01, ரி.56-03, தொடர்பு சாதனம் 01, ரவைகள் 20 ஆகியன கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். இத் தாக்குதலில் தமது தரப்பில் இரண்டாம் லெப்டினன்ட் மது என்றழைக்கப்படும் செந்தில்குமாரன் பலியானதாகவும் தெரிவித்துள்ளனர். ஆறு பொலிசார் இத் தாக்குதலில் பலியாகினர்.

# வியாபாரிபோல வந்த புலிகள்

மட்டக்களப்பு- முறக்கொட்டாஞ்சேனையில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் பலியானார். படையினர் மீது தாக்குதல் நடத்துவதற்காக உரப்பை ஒன்றுக்குள் துப்பாக்கியுடனும், கைக்குண்டுகளுடனும் மூன்று புலிகள் இயக்க உறுப்பினர்கள் காத்திருந்தனர்.

முறக்கொட்டாஞ்சேனையில் இறைச்சி வியாபாரி ஒருவர் வழக்கமாக இருக்கும் இடத்தில்தான் புலிகள் இயக்க உறுப்பினர்கள் நின்றனர். அப்போது அவ்வழியாக வந்த படையினருக்கு அவர்கள்மீது சந்தேகம் எற்பட்டது. அருகில் சென்று "பையில் என்ன இருக்கிறது?" என்று கேட்டனராம். "இறைச்சி இருக்கிறது" என்றாராம் புலிகள் இயக்க உறுப்பினர். "எங்கே காட்டு பார்க்கலாம்?" என்றதும் பையை திறந்த வேகத்தில் துப்பாக்கியை எடுத்தார் புலிகள் இயக்க உறுப்பினர். ஆனால் அதற்குள் முந்திக் கொண்ட படையினர் அவரைச் சுட்டுவிட்டனர்.

அப்போது ஏனைய இரண்டு புலிகள் இயக்க உறுப்பினர்களும் தற்பாதுகாப்புக்காக கைக்குண்டை வீசிவிட்டு தப்பி ஓடிவிட்டனர். படையினர் எவரும் காயமடையவில்லை.

# மூவர் கைது!

யாழ்ப்பாணம் நாகர்கோவில் பகுதியில் 17.04.97 அன்று குண்டுவெடிப்பு ஒன்று நடைபெற்றது. இச் சம்பவத்தை அடுத்து அப்பகுதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

சுற்றி வளைப்பில் கைதுசெய்யப்பட்டோர் தலையாட்டிகள் முன்பாக நிறுத்தப்பட்டனர். தலையாட்டி தலையை பலமாக ஆட்டியதை அடுத்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அரியரத்தினம் செல்வகுமாரி (23) அரியரத்தினம் அருள்மதி (21) பெரியதம்பி அமல்தாசன் (31) ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

# அனுமதி வழங்க 2 ஆயிரம்

பருத்தித்துறையில் இருந்து கொழும்பு செல்ல விண்ணப்பிக்கும் மக்களுக்கு உடனடியாக அனுமதி கிடைப்பதில்லையாம். இடைத்தரகர்களின் தலையீடே அதன் காரணம் என்று தெரிகிறது. விரைவாக அனுமதி பெற வேண்டுமானால் இரண்டாயிரம் ரூபா இடைத்தரகர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

பணம் உள்ளவர்கள், போனால் போகட்டும், என்று கொடுக்கிறார்கள். வசதி இல்லாதவர்கள் பாடு திண்டாட்டம்தான்.

# தேடுதல் நடவடிக்கையா? ஈ.பி.டி.பி. மறுப்பு!

மட்டக்களப்பில் தேடுதல் நடவடிக்கை ஒன்றில் தமது கட்சியின் பெயர் பயன்படுத்தப்பட்டதாக ஈ.பி.டி.பி. குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 19ம் திகதி மட்டக்களப்பு வாழைச் சேனைப் பகுதியில் படையினருடன் இணைந்து தமிழ் இயக்கமொன்றின் உறுப்பினர்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். குறிப்பிட்ட இயக்க உறுப்பினர்கள் தம்மை ஈ.பி.டி.பி. என்று அறிமுகம் செய்து கொண்டு மக்களுடன் தவறான முறையில் நடந்து கொண்டுள்ளனர். மட்டக்களப்பிலோ அல்லது நாட்டின் வேறு எப்பகுதியிலோ படையினருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கைகள் எவற்றிலும் எமது கட்சி உறுப்பினர்கள் ஈடுபட்டது கிடையாது.

மட்டக்களப்பில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்று தம்மை அழைத்துக் கொள்ளும் குழுவினர்தான் குறிப்பிட்ட சம்பவத்தில் ஈடுபட்டதாக தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறு ஈ.பி.டி.பி. மட்டக்களப்பு அமைப்பாளர் இராசமாணிக்கம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

# பாடசாலைச் சீருடையில் புலிகள்

## வடமராட்சியில் திடீர்த் தாக்குதல்!

இந்திய அமைதிப்படைக் காலத்தில் பாடசாலைச் சீருடையில் சென்று பல தாக்குதல்களை புலிகள் இயக்க உறுப்பினர்கள் நடத்தியிருந்தனர். தற்போது மறுபடியும் அத்தகைய தாக்குதல்களை யாழ்குடாநாட்டில் புலிகள் ஆரம்பித்துள்ளனர். 22.04.1997 அன்று வடமராட்சியில் பருத்தித்துறையில் உள்ள மாலுச்சந்தியில் புலிகளின் தாக்குதல் ஒன்று இடம்பெற்றது.

முற்பகல் 11.30 மணியளவில் மாலுச்சந்தி இராணுவ முகாமுக்கு அருகே மூன்று இராணுவத்தினர் காவல் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பாடசாலைச் சீருடையில் வந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் இராணுவத்தினரை நோக்கிக் கைக்குண்டுகளை வீசினார்கள். பின்னர் துப்பாக்கிப் பிரயோகங்களும் செய்யப்பட்டன. அத்தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் பலியாகினர். அவர்களிடமிருந்த ஆயுதங்களையும் கைப்பற்றிக் கொண்டு புலிகள் தப்பிச் சென்றனர்.

சத்தம் கேட்டு முகாமில் இருந்த இராணுவத்தினர் வருவதற்கு இடையில் துரிதமாக தாக்குதல் நடத்திவிட்டு புலிகள் தப்பிச் சென்றனர். பின்னர் படையினர் அப்பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினார்கள். அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்களை பிற்பகல் நாலு மணிவரை தடுத்துவைத்துவிட்டு விடுவித்தனர்.

# "மின்சாரக் கனவு நனவாகுமா?"

## "தண்ணீர்த்தேவை நிறைவேறுமா?"

(மன்னார் நிருபர்)

மன்னார் நகரில் தற்போது குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே மின் விநியோகம் இடம் பெற்று வருகின்றது. இது இப் பகுதி மக்களுக்கு எவ்விதத்திலும் போதியதாக இல்லை.

இதனால் தற்போது வவுனியாவிலிருந்து பறையனாளங்குளம் வரை விஸ்தரிக்கப்பட்டு வரும் நீர், மின்சாரத் திட்டத்தை மன்னார் வரை நீடிக்குமாறு இப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டளவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் மதவாச்சியிலிருந்து மன்னார் வரை மின்சாரம் வழங்க சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகி இருந்தன. எனினும் அக்காலப் பகுதியில் ஏற்பட்ட வன்செயலைத் தொடர்ந்து மின்விநியோகம் சாத்தியப்படவில்லை.

தற்போது செட்டிகுளம் முதல் உயிலங்குளம் வரை சுமார் 150 மின்கம்பங்கள் தகர்க்கப்பட்ட நிலையில் உள்ளன.

இதனால் வவுனியாவிலிருந்து இவ்விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும், இது பறையனாளங்குளம் வரையே நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் மன்னார் மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர்கூட போதியதாக இல்லை. தினமும் 45 நிமிடங்கள் வரை மட்டுமே நடைபெறும் நீர் விநியோகம் கடந்த 6 ஆண்டுகளாக இதே நிலையிலிருக்கிறது.

# கைமாறியுள்ள ஆதிக்கம்!

கிழக்குப் பகுதியில் புலிகள் இதுவரை தக்க வைத்துக் கொண்டுள்ள பிரதேசங்களில் மேலும் பல புலிகளின் அணிகள் குவிக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக, வட பகுதியிலிருந்து வந்துள்ள புலிகளின் புது முகங்களான அணிகள் நாளாந்தம் வந்து சேர்வதாகவும் கணிசமான அளவு புலிகள் அப்பகுதியில் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதுவரை படையினரின் கண்காணிப்பின் கீழ் இருந்து வந்த வாழைச்சேனைப் பகுதியைப் புலிகள் தமது பலப்பரீட்சை நடத்தும் களமாக மாற்றியுள்ளனர். அப்பகுதியில் மக்களோடு மக்களாகக் காணப்படும் புலிகள் பாதுகாப்புப் படையினரை தமது பொறிக்குள் இழுத்துத் தாக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியுள்ளனர். வழக்கமாக இயல்பாகக் காணப்படும் அப்பகுதியில் படையினரின் வருகையைக் கேள்வியுற்றதும் மக்கள் ஓடி ஒழிந்து கொள்வதோடு நகரப் பகுதி வெறிச்சோடி விடுகிறது.

# சடலங்களைக் கையேற்கப் புலிகள் மறுப்பு!

## தாக்குதல் திருமலையில்–உடல் மட்டக்களப்பில்!

கடந்த 21.4.97 மட்டக்களப்பு- கும்புறுமூலையிலும், வாழைச்சேனையிலும் இடம் பெற்றதான வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களின் போது பலியானவர்களில் 5 பேரின் சடலங்களைப் படையினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் கையளித்தனர். அச்சடலங்களில் ஒன்று 60 வயதைத் தாண்டிய முதியவருடையதாகக் காணப்பட்டதால் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினர் அதைப் பொறுப்பேற்கவில்லை.

ஏனைய 4 சடலங்களையும் புலிகளின் இலுப்படிச் சேனையிலுள்ள காரியாலயத்தில் ஒப்படைப்பதற்காக எடுத்துச் சென்று கொண்டிருக்கும்போது செங்கலடி கறுப்புப் பாலத்தடியிலுள்ள படையினர் ச.செ.சி. சங்கத்தினரை இலுப்படிச் சேனைக்குச் செல்ல அனுமதி வழங்கவில்லை. அதனால் ச.செ.சி. சங்கத்தினர் அப்பிரேதங்களை ஏறாவூர் வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

4 தினங்களின் பின்னர் யாருமே உரிமை கோராமல் துர்நாற்றமெடுத்த நிலையில் அரச செலவில் அவை அடக்கம் செய்யப்பட்டன.

இதனிடையே கடந்த 26.04.97 அன்று வாழைச்சேனையில் இடம்பெற்ற சம்பவமொன்றில் புலிகள் இருவர் தப்பியோட முயற்சித்தபோது சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. அந்தச் சடலங்கள் ச.செ.சி. சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு புலிகளிடம் எடுத்துச் செல்லப்பட்டன. ஆனால் இறந்த இருவரும் தமது உறுப்பினர்களல்ல, எனக்கூறி சடலங்களைப் பொறுப்பேற்கப் புலிகள் மறுத்து விட்டார்கள்.

பின்னர் அவை மீண்டும் வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன. அவற்றை உறவினர்கள் வந்து கையேற்றதாக அறியப்படுகிறது. இறந்தவர்கள் வாழைச்சேனை- கண்ணன் கிராமத்தைச் சேர்ந்த ப.சங்கர் (20). வே. சுதர்ஸன் (20) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த 25.04.97 அன்று திருமலையில் உள்ள மாவில் ஆறு குளக்கட்டைப் படையினர் செப்பனிட்டுக் கொண்டிருந்தபோது புலிகள் தாக்கியதில் படையினர் தரப்பில் ஐவரும், குடிமக்கள் தரப்பில் இருவரும் பலியாகினர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட ஒரு படைவீரரின் சடலத்தையும் ஆயுதங்களையும் புலிகள் அன்றையதினம் மட்டக்களப்பிலுள்ள வாகரைக்கு எடுத்து வந்து பொதுமக்களின் பார்வைக்கு வைத்திருந்தனர். ச.செ.சி. சங்கத்தினரிடம் சடலத்தை ஒப்படைக்க ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

# விபத்தில் சிக்கிய நாலாவது அன்ரநோவ்!

## பாதை தெரியாமல் விமானி தடுமாற்றம்!

ஏப்ரல் மாதம் 21ம் திகதி திங்கட்கிழமை இரவு மற்றுமொரு அன்ரநோவ் விமானம் விபத்துக்குள்ளாகியது. இரத்மலானை விமான நிலையத்தில் விபத்துக்குள்ளான விமானத்தில் 50 துருப்புக்களும் உக்கிரேன் நாட்டைச் சேர்ந்த விமான ஓட்டியும், சிறிலங்கா விமானப்படை விமானிகள் இருவரும் சிப்பந்திகள் உட்பட மொத்தம் 59 பேர் இருந்தனர். விமானத்தின் அடிப்பாகம் மோசமாகச் சேதமடைந்ததெனினும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இரவு 8.00 மணியளவில் இரத்மலானை ஓடுதளத்தில் இறங்குவதற்காக முயற்சித்தபோது விமானியின் கண்களுக்கு ஓடுதளம் தென்படவில்லையாம்.

உடனடியாக விமானத்தை மேலே கிளப்பி கொழும்பு நகரை பலதடவை வட்டமிட்டார். மீண்டும் கட்டுப்பாட்டறையிலிருந்து சமிக்ஞை கிடைத்ததும் காலிவீதி மார்க்கமாக உள்ள திசையில் விமானம் இறக்கப்பட்டது.

விமானியின் கண்களுக்கு ஓடுபாதை விளக்குகள் நன்றாகத் தெரிந்தன. ஆனால், விமானம் நன்றாகப் பணிந்ததும் பாதை திடீரென மறைந்துவிட்டது போன்ற பிரமையே விமானிக்கு ஏற்பட்டதாம். இருப்பினும் விமானம் தரையில் தட்டி மீண்டும் மேலே கிளம்பி மறுபடியும் தரையில் தட்டி, மேலெழுந்து இறுதியில்-அடிப்பாகம் உடைந்துபோன நிலையில், விமானம் தரையில் நின்றது.

இரவு 8.00 மணிக்குத் தொடங்கிய முயற்சி 8.45க்குத்தான் முடிவடைந்தது. அந்த 45 நிமிடங்களும் சுமார் 1000 அடி உயரத்தில் விமானம் கொழும்பு நகரை பல தடவைகள் வலம் வந்தமையினால் அதன் பேரொலியால் சுற்று வட்டாரத்திலிருந்த மக்கள் பெரிதும் பயந்து போனார்கள்.

அன்ரநோவ் விமானம் ஒன்றின் விலை 39 இலட்சம் அமெரிக்க டொலர். இவ்வாறு 7 விமானங்கள் வாங்கப்பட்டன. கடந்த 21ம் திகதி விபத்துடன் இவற்றில் 4 விமானங்கள் சேதமடைந்துவிட்டன. மேலும் 3 அன்ரநோவ் விமானங்கள் மட்டுமே விமானப்படையிடம் உள்ளன.

அடிப்பக்கம் சேதமடைந்த விமானத்தைத் திருத்துவதற்கு இவ்விமானத்தின் விலையில் அரை வாசிப் பெறுமதிப்பணம் செலவாகும் என்றும் ஒன்றரை வருடங்கள் இப்பணிக்குத் தேவைப்படும் என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

# விமானத்தளத்துக்கு பாதுகாப்பு வேலி!

திருகோணமலை- சீனக்குடாவிலுள்ள விமானப்படைத் தளத்தைப் பாதுகாக்க பல கோடி ரூபாய் செலவில் மின்சாரவேலி அமைக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. இஸ்ரேலைச் சேர்ந்த ஒரு நிறுவனம் இப்பணியைத் தொடங்கியிருக்கிறது.

கடந்த மார்ச் மாதம் 6ம் திகதி அதிகாலை- உச்சக்கட்டப் பாதுகாப்புக்குள்ளான சீனக்குடாவிலுள்ள இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விமானத்தளத்தை ஊடுருவிய விடுதலைப் புலிகள், சீனத் தயாரிப்பான வை-12 ரக விமானத்தை நிர்மூலமாக்கியதுடன் ஸற் வி-23 ரக விமான எதிர்ப்புப் பீரங்கிகள் இரண்டையும் நாசமாக்கினர்.

இதன் பின்னரே சீனக்குடாத்தளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நவீன மின்சார வேலி அமைக்கும் முயற்சி நடைபெறுகிறது.


படிப்பகம்

www.padippakam.com

# தலையாட்டி முன் நிறுத்தப்படும் மக்கள்!

## வீட்டிலுள்ளோர் விபரப் பட்டியல் தொங்கவிடவேண்டும்!

வலிகாமத்திலிருந்து வெளியேறி மீண்டும் வலிகாமம் திரும்பி ஒருவருடமாகின்றது. எமது வாழ்க்கையில் இன்னமும் விடிவு ஏற்படவில்லை. சில கிராமங்கள், ஆலயங்களுக்கு இன்னும் மக்கள் செல்லவில்லை. பாதுகாப்புப் பிரதேசமெனச் சொல்லிக் காலத்தைப் போக்குகின்றார்கள்.

புதிய புதிய சென்றிகள் ஆங்காங்கே ஆக்கப்படுகின்றன. யாழ் நகர் செல்வதற்கு 12 மைல் தூரத்திலிருக்கும் பொன்னாலை, மூளாய் மக்கள் இன்னமும் யாழ் தட்டாதெரு சந்தியாலேயே யாழ் செல்லவேண்டியுள்ளது.

வீட்டிலிருப்போர் விபரம் தொங்கவிடப்பட்டுள்ளது. அதனால் உறவினரோ நண்பரோ வீடுகளுக்கு வந்து தங்கிப் போக முடியவில்லை.

போக்குவரத்தும் சீர் செய்யப்படவில்லை. கப்பலில் போவதற்காக மக்கள் தினமும் தவமிருக்கிறார்கள்.

### சுற்றிவளைப்பு

கிழமை தோறும் சுற்றிவளைப்புக்கும் குறைவில்லை. தலையாட்டி முன் நிறுத்தப்படுவதும் சிலர் கைது செய்யப்படுவதும் வழக்கமாகிவிட்டது.

சில பாதைகளுக்கு சீரான போக்குவரத்திற்கு பஸ்கள் விடப்படவில்லை. முக்கியமான சந்தைகளான பண்டத்தரிப்பு, சுன்னாகம் சந்தைகள் சரியாக இயங்கவில்லை. விலைவாசிகளும் ஏறி வருகின்றன. இப்போது நாட்டு அரிசி 36 ரூபா விற்கிறது. ஒரு ஜோடி பற்றறி ரூபா 42 விற்கிறது. பென்ரோச் பற்றறி 1ஜோடி நூறு ரூபாவரை உயர்ந்துவிட்டது.

இப்படியாக மக்கள் இயல்பு வாழ்க்கையிலிருந்து பல விதத்திலும் மாறுபட்டிருக்கிறார்கள்.

27.3.97 அன்றைய 'உதயன்' பத்திரிகைச் செய்தி ஒன்று மக்களைச் சிந்திக்க வைத்துள்ளது. இடம் பெயர்ந்து சொந்த இடத்தில் குடியேறியோருக்கு ஆரம்பத்தில் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு ஏழாயிரம் என்றார்கள். தற்போது அது ஐயாயிரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் இக் கொடுப்பனவு சில பிரதேச செயலர் பிரிவுகளிலேயே கொடுக்கப்பட்டது. தற்போது இரண்டாம் தடவையாகக்கொடுபடாத சிலருக்குக் கொடுக்கப்படுகின்றன. இதுபற்றி அரசாங்க அதிபர் ஒரு அறிக்கையை 27.03.97 ல் வெளியிட்டிருக்கிறார்.

மீளக் குடியமர்வுக் கொடுப்பனவான 5000ம் ரூபாவைப் பெற்றுக் கொண்டவர்களின் உணவு முத்திரைகள் மூன்று மாதகாலத்தில் நிறுத்தப்படக்கூடும் என்பதே அவரது செய்தியாகும். மீளக் குடியமர்வுக்கு-கொடுப்பனவுக்கும், உணவு முத்திரைக்கும் உள்ள தொடர்பு விளக்கப்படவில்லை.

மீளக் குடியமர்ந்தோர் வீடுகளைத் திருத்த, உடைந்த கதவு, யன்னல்களைப் போட, ஓடு, சீற்றுகளைப்போடவே இப் பணம் போதுமானதாக இல்லை. வீடு வாசல்களைத் துப்பரவு செய்து இயல்பு வாழ்க்கையைத் தொடரவே இது போதுமானதாக இல்லை. அப்படி இருக்க உணவு முத்திரை நிறுத்தம் பற்றிய அறிக்கை உண்மையானால் இது கண்டிக்கத்தக்கதொரு நடவடிக்கையாகும்.

இப்பணம் 5000 ரூபா உணவு முத்திரைக் காரருக்கு மட்டும் கொடுபடவில்லை. அரச ஊழியர், பென்ஷன்காரர் போன்றோருக்கும் இக் கொடுப்பனவு கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு உணவு முத்திரை இல்லை. அவர்களுக்கு இக்கொடுப்பனவு கொடுப்பதானால், அவர்களிடம் எதை நிறுத்த முயற்சிக்கப் போகிறார்கள்? அவர்கள் மாதாமாதம் பெறும் வாழ்க்கைப் படியையா?

அரசாங்கம் ரூ. 5000ஐக் கொடுத்து உணவு முத்திரையை வெட்டுவதை உடன் நிறுத்த தமிழ் எம்.பிக்கள் முன்வர வேண்டும். ஐந்து குடும்பங்கள் ஒன்றுக்கு நிவாரணமாக மாதமொன்றுக்கு ஆயிரம் ரூபாவுக்கு மேலாக பொருட்கள் கிடைக்கின்றன. இந்த ஐயாயிரத்தை விட நிவாரணத்தைப் பெறவே அவர்கள் விரும்புவார்கள். ஐயாயிரம் கொடுப்பதற்கு முன் இந்த அறிவித்தல் வந்திருக்கவேண்டும். இப்போ திரிசங்கு நிலையில் அவர்கள் செய்வதறியாது விழிக்கிறார்கள்.

ஐயாயிரம் பெறுவதற்காக உணவு முத்திரையை நிறுத்துவதை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும். பூனைக்கு மணி கட்டுபவர் யாரோ?

ந. சிவபாதம், புத்தொளி.

# அதிகாரியின் சுருட்டல்

யாழ்-கொழும்பு கப்பல் பிரயாணத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவமொன்றை உங்கள் பத்திரிகை வாயிலாக, அனைத்து மக்களுக்கும் அறிவிக்கவேண்டுமென்பதில் அவாவாக உள்ளேன்.

22.02.97 அன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வர அனுமதிகிடைத்த நாள். நாம் அனைவரும் யாழ் மத்தியகல்லூரியில் கப்பல் கட்டணம் கட்டுவதற்காக வரிசையில் நின்றோம். எங்களுடன் அண்ணளவாக முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க- மார்பில் புற்று நோயால் பாதிக்கப்பட்ட யுவதி ஒருவர் தனது 9 மாத கைக்குழந்தையுடன் நின்றிருந்தார்.

ஒருவருக்கு கப்பல் கட்டணமாக 750/- வீதம் அறவிடப்படுவது யாவரும் அறிந்ததே. ஆனால், அன்று மத்திய கல்லூரியில் பயணசீட்டு வழங்கிய ஓர் அதிகாரி அப்பெண்ணிடம் குழந்தைக்கும் சேர்த்து 1500/- கேட்டார். இதை முற்றிலும் எதிர்பார்க்காத அப்பெண் தன்னிடம் 1000/- மட்டும் தான் இருப்பதாகவும் வெளிநாட்டிலுள்ள உறவினர் ஒருவரின் பண உதவியுடன் தனது புற்று நோய்க்கு சிகிச்சை பெறுவதற்காகத்தான் கொழும்புக்கு போவதாகவும் கண்ணீரும் கம்பலையுமாக நின்று அதில் உள்ளவர்களிடம் உதவி கோரினார்.

அவரின் பரிதாப நிலமையைப் பார்த்த ஒருவர் தான் பண உதவி செய்ததுடன், பயணச்சீட்டு அதிகாரியிடம் 'இது ஒரு முறையற்ற செயல்' எனக் கூற முற்பட்டபோது, அவர் மிகுந்த அதிகார தொனியில் "இஷ்டம் என்றால் போங்கள் கஷ்டம் என்றால் வீடு செல்லுங்கள்!" என்று கூறினார்.

இவ்வாறான அதிகாரிகளின் நடத்தையை யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனத்தில் கொள்வார்களா? இவர் போன்று இன்று யாழ் கச்சேரியில் பல ஊழல் நாயகர்களும் பணிபுரிகிறார்கள். இவ்வாறான ஒரு கசப்பான அனுபவம் இனியும் நிகழாது இருக்க, மனிதநேயம் கொண்ட பொறுப்பான அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கையை, சொல்லொணா துயரங்களை அனுபவிக்கும் யாழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

சி. தவராசா, வெள்ளவத்தை.

# அக்குறணையில் மீண்டும் வெள்ள அபாயம்!

## கடை உரிமையாளர்களின் அசமந்தப் போக்கு!

(அக்குறணை நிருபர்)

அக்குறணை பஸாரை அண்மித்ததாக அமைந்திருக்கும் ஆற்றுநீர் பெருக்கெடுத்ததால் கடந்த வருட இறுதியில் பெரு வெள்ள அபாயம் ஒன்றில் முழு பஸாரில் உள்ள கடைகளுமே நீரில் மூழ்கியது.

அதனாலுண்டான பொருள், பணச் சேதம் சுமார் ஒரு கோடிக்கும் அதிகமாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் இப்பொழுது பெய்யும் மழையின் காரணமாக மீண்டுமொரு வெள்ள அபாயம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் அக்குறணை வாசிகளிடையே மீண்டும் ஏற்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, பஸார் பகுதியில் பெருந்தெருக்கள் திணைக்களத்தினால் பிரதான பாதையை புனரமைக்கும் பாரிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட கடந்த வருட நடுப்பகுதியில் பாதையோரக் கடைகள் உடைக்கப்பட்டு பிரதான வீதிக்காக இடம் விசாலமாக்கப்பட்டபொழுது கடைச் சொந்தக்காரர்கள் ஆற்றைமறித்து கொங்கிறீட் சுவர்களை எழுப்பி அதன் மேல் கட்டடங்கள் கட்ட ஆரம்பித்தனர்.

இதனால் ஆற்றுநீர் பெருமளவில் தேக்க மடைந்து வந்தது. அத்தோடு, ஆறும்- மண், குப்பை கூழங்களை இடுவதனால் தூர்ந்து போயுள்ளது.

மீண்டுமொரு வெள்ள அபாயத்தினைத் தடுப்பதற்காக அக்குறணை வர்த்தகர் சங்கமும், அக்குறணை அஸ்னா பள்ளிவாசல் நிர்வாக சபையினரும், அக்குறணை பிரதேசசபை அங்கத்தினரும் பகீரதப் பிரயத்தன முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனாலும் கடை உரிமையாளர்கள் ஆற்றை மறித்து பாரிய தூண்கள் சுவர்கள் எழுப்புவதனால் எந்த நடவடிக்கையும் பலனற்றதாகவே இருந்து வருகிறது.

மீண்டுமொரு வெள்ள அபாயத்தையும் பல இலட்சம் ரூபா நஷ்டத்தினையும் தடுக்க கடைச் சொந்தக்காரரின் பொறுப்பான தன்மை இங்கு அவசியமாகின்றது. எனவே அவர்களின் ஒத்துழைப்பை அக்குறணை வர்த்தக சங்கம் வேண்டி நிற்கின்றது.

# 'ஆறுதல் கரம் நீட்டுக'

வன்னிப் பெரு நிலப்பரப்பில் இருந்து வருவோருக்கு ஐயாயிரம் ரூபாவும் மீளவும் குடியிருப்பதற்கான வசதிகளும் செய்து தரப்படும் என அரசு செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் இடம் பெயர்ந்து அகதிகளாக வந்து மீளக்குடியமரும் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்தோருக்கு எவ்விதமான நிவாரணமோ, ஆதரவுக் கரமோ, பிரதேச செயலகங்களிலோ, அரச சார்பற்ற நிறுவனங்களிலோ அரச செயலகத்தினாலோ வழங்கப்படவில்லை.

"இழப்பதற்கு எதுவுமில்லாமல்" வறுமைப் பிணியில் வாழும் மக்களுக்கு சமையல் உபகரணங்கள், வீடுகள் அமைப்பதற்கான மரம், கிடுகுகள், வழங்க இந்நிறுவனங்கள் கை கொடுக்குமா? அல்லது அவர்கள் இங்கும் உறவினர் வீடுகளில் தங்கி அல்லலுறுவதா? சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கைகொடுத்து உதவுமா?

வறுமையோடு வாழ்ந்தவர்களின் வீடுகள் அழிந்துள்ளன. மீளப் புனரமைப்பதற்கு எவ்வித வசதியுமின்றி மிகவும் மனவிரக்தியோடு வாழும் எம்மவர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்ட மனிதாபிமான நிறுவனங்கள் கண் விழிக்கவில்லையே? பல குடும்பங்கள் உதவிகள் எதுவும்பெற முடியாமல் அவதிப்படுவது எவ்வகையில் நியாயமானதாகும்.

ந. சிறிதரன், கைதடி மேற்கு.

# தண்ணீர் - தண்ணீர்

மலையகத்தின் சனநெருக்கமுள்ள நகரங்களில் பொகவந்தலாவை நகரமுமொன்று. இந் நகரமானது அம்பகமுவ பிரதேசசபையின் நிருவாகத்தின் கீழமைந்துள்ளது. இந்நகரத்தில் நிலவுகின்ற குடிநீர்ப் பிரச்சனையை எந்தவொரு அரசியல் அமைப்பும் தீர்த்து வைப்பதாகயில்லை.

இந்நகரத்து மக்கள் கடந்த ஆறு மாதங்களாக மிக மோசமான குடிநீர்ப் பிரச்சனைக்கு ஆளாகியுள்ளனர். தினந்தோறும் வாளிகளையும் குடங்களையும் எடுத்துக் கொண்டு இந் நகரவாசிகள் தண்ணீருக்காக அல்லல்படுவதைப் பார்க்கும் போது பரிதாபமாகவுள்ளது.

இந்நகர சுற்று சூழலில் சுத்தமான நீர் இருந்தும், ஒழுங்கான குடிநீர் விநியோகத் திட்டமிடலை, கடந்த அம்பகமுவ பிரதேச சபையின் நிர்வாகம் செய்யாததன் காரணமாகவே இத்தகைய குடிநீர் பிரச்சனை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.


விளம்பரப் பகுதி

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

**பழுது பார்த்தல்**

வீடியோ கமெரா,
போட்டோ கமெரா
திருத்திக்கொடுக்கப்படும்

**நியூ விக்ரேஸ்**
**New Victors**
40 1/3, Galle Road, Colombo-06.
(Hongkong bank அருகாமையில்)
T.P-594492

**பிறந்த நாள் வாழ்த்து**



**செல்வி ஹம்ஷத்வனி**
சுன்னாகம்-கந்தரோடையைச் சேர்ந்த கோபால சர்மா-பவானி தம்பதியினரின் செல்வப்புதல்வி செல்வி ஹம்ஷத்வனி தனது பிறந்த நாளை 10.05.97ல் கொண்டாடுகிறார். தினமுரசு உடையணிந்து குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை பல்லாண்டு வாழ்கவென எல்லோரும் வாழ்த்துகின்றோம்.

**SPOKEN ENGLISH**
**தபால் மூலம் கல்வி**

மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க தபால் மூலம் கற்றுத் தரப்படும். விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
P. O. BOX -162, COLOMBO.

**றெறாசோ ஷிப்ஸ்**
**(TERRAZZO CHIPS)**
★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு. கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411





**மலையாள மாந்திரீக சக்தி**

சாஸ்திரம் இதர்மத்திற்கு இணையானது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாமராஜ்யம் மலையாளம், மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர் பி.கே.சாமி அவர்கள். பிரிந்த காதல் ஒன்று சேர, பிரிந்து சென்றவரை அழைப்பித்து எடுக்க, இருவருக்கும் திருமணம் நடைபெறாதென் முடிவெடுத்த திருமணம் நடைபெறவும், ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன் என முடிவெடுத்து வாழ. திடீர் வியாபார விருத்தி அடைய, தீராநோய்களை தீர்த்துக் கொள்ள, வீடு வளவு பாதுகாப்பு செய்ய, சூனியங்களை அகற்றி பழி அடிக்க, செவ்வாய் தோசம் நிவர்த்தி பெற, அதி விசேடமாக வெளிநாட்டவர்களின் பிரச்சினைகளுக்கு அவர்கள் பிரச்சினைதீர 3 நாளில் அவ்வவ் ஊரில் எமது அங்குள்ள நிர்வாகம் மூலமாக தங்களுக்கு பார்சல் உடன் அனுப்பப்படும். அத்துடன் பிறந்த திகதி, மாதம், இலைகளை அறிவித்து ரூ.1500 அனுப்பி வைத்தால் 30 நிமிடத்தில் உங்கள் ஆயுள் ஜாதகத்தை கண்ணாடிபோல தெட்டத் தெளிவாக கணித்து அனுப்பிவைப்போம்.

வாரம் தோறும் சன் ரீவியில் 'ஜோதிட உலகம்' என்ற நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது. இந்நிகழ்ச்சியில் நேயர் கேட்கும் கேள்விகளுக்கு பி.கே. சாமி அவர்கள் பதிலளிப்பார்.

தொடர்புகளுக்கு–

| தலைமை காரியாலயம் | உப காரியாலயம் |
|---|---|
| P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.<br>ஸ்ரீ துர்கா தேவி ஆலயம்<br>[மாந்திரீக பிரிவு]<br>உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி<br>பி.கே. சாமி (J.D.G.A.N.)JP<br>NO.162, MAY FIELD ROAD<br>KOTAHENA, COLOMBO-13 | P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.<br>ஸ்ரீ துர்கா தேவி ஆலயம்<br>[மாந்திரீக பிரிவு]<br>உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி<br>NO. 33, DAILY FAIR BUILDING<br>NUWARA - ELIYA.<br>நுவரெலியா. |
| தொலைபேசி வரிசைகள்:<br>342463-344831-344832-431137-07841571<br>பெக்ஸ்–342464 | தொலைபேசி வரிசைகள்:<br>052.2508, 3336, 3570, 3093<br>பெக்ஸ்– 0523336 |

எந்த மாத கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் உச்சாட்ட பூஜை காலை 09 மணி முதல் மாலை 06 மணி வரை விஷேச பூஜையில் கலந்து குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். கேட்டபடி கேட்டவரம் தரும் தேவி ஸ்ரீ துர்க்கை அம்மனே.
மாந்திரீகத்திலும் ஜோதிடத்திலும் தனக்கென ஒரு தனி இடத்தை பெற்ற ஒரே நிறுவனம் எமது பி.கே.சாமி அசோஸியட் வரையறுக்கப்பட்ட பிரைவட் நிறுவனமே.

குறிப்பு–1.
எமது அனைத்து தொலைபேசி எண்களும் தொடர்பில் இருந்தால் தாங்கள் எம்முடன்: PAGER மூலம் தொடர்பு கொள்ளலாம்.
PAGER CENTRE NO-TEL 588407-PAGER NO-972

குறிப்பு–2
வெளிநாட்டில் உள்ளவர் எமது சேவையை அறிந்துகொள்ள வெளிநாட்டு
COMPUTER INTERNET, NO., E/MAIL/ SAMY 1.2 @SLT.LK WWW LGO SLT.LK

நேரில் அப்பாயின்ட்மெண்ட் பெற்று சந்திக்கும் நேரம்

| காலை | மாலை | வெள்ளிக்கிழமை |
|---|---|---|
| 9மணி முதல் 12.00மணி வரை | 3மணி முதல் 6.30 மணிவரை. | விடுமுறை |

**மட்டக்களப்பு மாந்திரீகம்**

உங்கள் கஷ்ட நஷ்டங்கள் நீங்கவும் எண்ணங்கள் நிறைவேறி எதிர்கால நலன் பெறவும் தொன்மையும் பழைமையும் வாய்ந்த மட்டக்களப்பு மாந்திரீக பரம்பரை வைத்திய நிபுணர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள்.

டாக்டர். ஏ.பி.எஸ்.குட்டி
50, தியேட்டர் றோட், நிந்தவூர்–21.
கோட் நம்பர் – 32340

DR.A.P.S. KUTTY,
NO-50, THEATRE ROAD,
NINTAVUR-21, SRI LANKA.
Code No - 32340

**உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**
+
எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி உடனே என்னை சந்தியுங்கள்



**K. சிவசுப்பிரமணியம்**
M.I.H. Ind. S.M.P.

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி. காலதாமதம் செய்யாமல் கீழ்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, ரோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல்வாய்வு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை வைத்தியரை சந்திக்கலாம்.

**முருகானந்தா வைத்தியசாலை**
No. G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கெட், (நிலமாடி) மீன்கடை மேல், கொழும்பு - 11.




படிப்பகம்

www.padippakam.com

# வன்னியில் விரியும் போர் அபாயம்!

## திசை எங்கே? உத்தி எது?

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

வன்னியில் படை நடவடிக்கை தொடரும் என்பது எதிர்பார்க்கப்பட்டது தான்.

புதிய படை நடவடிக்கையின் பாதை எது, எத் திசை வழியாக படைகள் நகரப் போகின்றன? என்பதுதான் கேள்வி.

புதிய படை நடவடிக்கையின் நோக்கங்கள் இரண்டு.

ஒன்று: வன்னியில் புலிகளை மேலும் பலவீனப்படுத்துவது.

இரண்டு: படை முகாம்களுக்கான தரைவழி விநியோகத்துக்கான தரைப் பாதையைத் திறப்பது.

தற்போது படையினர் வவுனியாவில் இருந்து மன்னார் வரை நிலைகொண்டுள்ளனர். வவுனியா மன்னார் நெடுஞ் சாலை படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

மறுபுறம் வவுனியா–கிளிநொச்சி பாதையில் நொச்சிமோட்டை வரை படையினர் நிலைகொண்டுள்ளனர்.

வன்னியில் புலிகளின் பிரதான தளம் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கிறது. அடர்ந்த காட்டுப் பகுதிகள் கொண்ட பகுதியாக அது அமைந்துள்ளது.

புலிகளின் பிரதான தளப்பகுதிகளை படையினர் ஊடறுத்துச் சென்று கிளிநொச்சி வரை தரைப்பாதையை அமைக்க வேண்டுமானால் இரண்டு மார்க்கங்கள் உள்ளன.

வவுனியாவில் இருந்து மன்னார் செல்லும் மடுறோட்டில் மடுச்சந்தியில் படையினர் தற்போது நிலைகொண்டுள்ளனர். மடுச்சந்தியில் இருந்து உள்நோக்கி படையினர் முன்னேறினால் மடுவுக்கு முதலில் செல்லலாம்.

மடுவில் அகதி முகாம் இருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஸ்தானிகராலயம் (யூ.என்.எச்.சி.ஆர்) அதனை நிர்வகித்து வருகிறது.

மடுவை நோக்கிச் செல்லும் படையினர் ஷெல்வீச்சுகளையும், கனரக வாகனங்கள் மூலமான தாக்குதலையும் மேற்கொண்டபடி முன்னேறினால் மடு அகதி முகாமிலுள்ள அகதிகளின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகும். மடு அகதி முகாமில் உள்ள 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் நிலை அபாயத்துக்கு உள்ளாகும்.

மடுவுக்கு சென்ற பின்னர் மேற்கொண்டு படையினர் முன்னேறவேண்டுமானால் அடர்ந்த காட்டுப் பகுதிகள் ஊடாகவே செல்ல வேண்டியிருக்கும் மடுவில் இருந்து 65 கிலோ தூரத்தில் கிளிநொச்சி இருக்கிறது.

காட்டுப்பகுதிக்குள் படையினரை உள்ளே இழுத்துவிட்டு புலிகள் தாக்குதல் நடத்த வாய்ப்பு இருக்கிறது. அது தவிர அப்பாதையில் நீண்டகாலம் நிலை கொள்வதும் கடினமாக இருக்கும். எனவே அந்த மார்க்கத்தில் படையினர் முன்னேற முனைவார்களா என்பது சந்தேகமே.

### இரண்டாவது மார்க்கம்

புலிகளின் தளத்தை ஊடறுக்கும் இரண்டாவது மார்க்கம் வவுனியா கிளிநொச்சி பாதையாகும்.

• இப் பாதை வழியாக படையினர் முன்னேறுவதாக இருந்தால் ஓமந்தை வரை படையினர் சுலபமாகச் செல்ல முடியும். ஓமந்தையின் பின்னர் தரையமைப்பு மாறுதலடைகிறது. காடும், காடு சார்ந்த பகுதிகளும் அங்கிருந்து ஆரம்பமாகிறது.

வவுனியாவில் இருந்து ஓமந்தை 10 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஓமந்தை வரை படையினர் சென்றால் அங்கிருந்து கிளிநொச்சி 63 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது.

வவுனியா–கிளிநொச்சி நெடுஞ்சாலை முல்லைத்தீவு மாவட்டத்தையும் மன்னார் மாவட்டத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குப் பகுதியையும் குறுக்காகப் பிரித்துச் செல்கிறது.

மன்னாரும், கிளிநொச்சியும் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக அரசாங்கம் கூறிக்கொண்டாலும், உண்மையில் மன்னார் மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் பெரும்பகுதியில் புலிகள்தான் நிலை கொண்டுள்ளனர்.

மன்னார் பெரு நிலப்பரப்பு தற்போது புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. அடர்ந்த காடுகளும் அங்கு உள்ளன. வவுனியா- மன்னார் தரைப்பாதையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் படையினர் மன்னார் நகரிலும், அங்கிருந்து உயிலங்குளம் வரையுமே தற்போது நிலைகொண்டுள்ளனர்.

இந்த நிலையில் படையினர் வவுனியா–கிளிநொச்சி றோட்டின் வழியாக முன்னேறினால் படையினர்மீது புலிகள் இரு முனைத் தாக்குதலை தொடுப்பர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புலிகளும், மன்னார் பெருநிலப்பரப்பிலும், கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலும் உள்ள புலிகளின் அணிகளும் முன்னேறி படையின்ரின் இடது புறமும், வலது புறமுமாக தாக்குவர்.

மன்னார் பெருநிலப்பரப்பிலும், கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கிலும் உள்ள புலிகள் இடது புறமாகவும், முல்லை மாவட்டத்தில் உள்ள புலிகள் வலது புறமாகவும் தாக்குதல் தொடுப்பர். முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து ஆட்டிலெறித் தாக்குதலிலும் புலிகள் ஈடுபடுவர்.

### சாதக–பாதகம்

வவுனியாவில் இருந்தும், கிளிநொச்சியில் இருந்தும் படையினர் இருமுனைகளில் ஒரே நேரத்தில் புறப்பட்டால் புலிகளின் பலம் இரு முனைகளுக்கு தோதாக பிரிய வேண்டி ஏற்படலாம். அதனால் புலிகளின் தாக்குதல் மூர்க்கம் சற்றுக் குறைய நேரிடும்.

வவுனியா–கிளிநொச்சி றோட்டை கடும் யுத்தத்தின் பின்னர் படையினர் கைப்பற்றி நிலை கொண்டால் யுத்த தந்திரரீதியாக படையினருக்கு சாதகம் அதிகம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புலிகளுக்கும், மன்னார் பெருநிலப்பரப்பிலும், கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குப் பக்கம் உள்ள புலிகளுக்கும் இடையிலான தரைத்தொடர்பு துண்டிக்கப்படும். விநியோகமும் தடைப்படும்.

அதனால் மன்னார் பெருநிலப்பரப்பிலும், கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கு பகுதியிலும் உள்ள புலிகளின் இயங்கு திறன் பலவீனப்படும்.

வன்னியில் முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் மட்டுமே புலிகளின் பலம் முடக்கப்படுவதாகிவிடும்.

எனவே வன்னியில் புலிகளின் பலத்தை பாரியளவு முடக்கவேண்டுமானால் வவுனியா– கிளிநொச்சி றோட்டை படையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே யுத்த தந்திர ரீதியில் முக்கியத்துவம் உடைய நடவடிக்கையாகும்.

ஆனால், அத்தகைய நடவடிக்கையில் பாரிய இழப்புக்களுக்கும் தயாரான நிலையிலேயே படையினர் சென்றாக வேண்டும்.

புலிகள் தமது தளப் பகுதியின் பாதுகாப்புக்காக மூர்க்கமாகப் போரிடுவர். படையினரை முன்னேற அனுமதித்துவிட்டு தாக்கும் உத்திகளைத் தொடருவர். ஆட்டிலெறிகளால் ஷெல் மழை பொழிவர்.

காடு சார்ந்த, காடுகள் நிறைந்த பகுதி என்பதால் கெரில்லாக்களுக்கு சாதகம் அதிகமிருக்கும்.

அதனை முறியடித்து தமது கட்டுப்பாட்டை நிலைநிறுத்த வேண்டுமானால் வன்னியில் தொடர்ச்சியான படை நடவடிக்கைகளை காடுகளுக்குள்ளும் மேற்கொள்ள வேண்டியிருக்கும். அத்ாவது ஓய்வே இல்லாத யுத்தத்துக்கும், இழப்புக்களை ஈடுசெய்யும் படைப் பல பிரயோகத்துக்கும் அரசு தயாராக இருக்க வேண்டும்.

அவ்வாறான நடவடிக்கைக்கு அரசு உடனடியாக முன்வருமா என்பது கேள்விக் குறிதான்.

எடுத்த எடுப்பிலேயே புலிகளின் பிரதான தளத்துக்குள் புகுந்தால் சில சமயங்களில் புதைசேறில் கால்வைத்த கதையாகியும் விடும்.

இந்தியப் படையினரால்கூட வன்னிக் காடுகளுக்குள் புலிகளை எதிர்த்து போரிட முடியவில்லை. காட்டுக்குள் புகுந்த கூர்க்கா படையினர் திசை தெரியாமல் திண்டாடினார்கள். தோல்வியுடன் திரும்பினார்கள்.

எப்போதுமே காட்டுக்குள் நடைபெறும் யுத்தங்கள் கெரில்லாக்களுக்கே சாதகமாக முடிவதுண்டு. ஏனெனில் மரபுப் போர் முறையில் பிரதான பலமாக உள்ள கனரக வாகனங்கள், ஆட்டிலெறிகள், விமானத் தாக்குதல்கள் போன்றவை காட்டு யுத்தத்தில் பயன் கொடுப்பதில்லை.

யுத்த தந்திரரீதியிலும், படைக்கல ரீதியிலும் மிக முன்னேறிய அமெரிக்கப் படைகள்கூட வியட்நாமின் கெரில்லாக்களிடம் காடுகளுக்குள் தோல்வியை சந்தித்தன.

எனவே–காட்டுப்புற யுத்தத்திற்குள் கால் வைக்கும் முடிவை படையினர் எடுக்க மாட்டார்கள் என்றுதான் தெரிகிறது.

குறைந்த இழப்புடன் மரபுப் போர் முறையில் சுலபமாக முன்னேறக் கூடிய திசையில் செல்ல படையினர் நினைத்தால், படையினருக்கு உள்ள ஒரே மார்க்கம் மன்னாரில் இருந்து கிளிநொச்சி நோக்கி முன்னேறுவதுதான்.

மன்னாரில் படையினர் நிலைகொண்டிருக்கும் உயிலங்குளத்தில் இருந்து 75 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது பூநகரி.

மன்னாரில் இருந்து வடக்குக்கும், வடகிழக்குக்கும் இடைப்பட்ட கோணத்தில் மன்னார்–பூநகரி றோட் அமைந்துள்ளது.

இந்த றோட் பெரும்பாலும் நேராகவே காணப்படுகிறது. இந்த றோட்டின் இடது புறம் கடற்பரப்பு விரிந்து கிடக்கின்றது. இக் கடற் பரப்பானது குமுளமுனைவரை நீண்டு அமைந்துள்ளது. குமுளமுனைவரை சென்றுவிட்டால் அங்கிருந்து 28 கிலோ மீட்டர் தூரத்தில் பூநகரி வந்துவிடும்.

மன்னார் பூநகரி றோட் வழியாக முன்னேறும் படையினரை புலிகள் தடுத்து தாக்குவது கடினம்.

நீண்ட நேரான றோட் என்பதால் றோட்டின் இருபுறமும் கவசவாகனங்கள் யானைகள் போல் நகர, பீரங்கிகள் ஷெல்களை வீசிக் கொண்டிருக்க அவற்றின் பாதுகாப்போடு படையினர் முன்னேறிச் செல்ல முடியும். றோட்டின் இடதுபுறம் கடல் இருப்பதால் புலிகள் அங்கிருந்து தாக்க முடியாது. றோட்டின் வலது புறம் உள்ள மன்னார் பெருநிலப்பரப்பில் இருந்து மட்டும் புலிகள் தாக்குவார்கள்.

### உக்கிரம் இருக்குமா?

எனினும் புலிகளின் தாக்குதல் உக்கிரமாக இருக்காது. ஏனெனில் புலிகளின் கவனம் முழுவதும் வவுனியா–கிளிநொச்சி றோட்டிலேயே இருக்கும். ஆட்டிலெறிகள் இரண்டையும் தமது தள பாதுகாப்புக்காக மட்டுமே புலிகள் உபயோகிப்பர். அதனை மன்னார் பெரு நிலப்பரப்புக்கு எக்காரணத்தினாலும் கொண்டு வரமாட்டார்கள். அது தவிர மன்னார்–பூநகரி றோட்டில் செல்வதாக போக்குக் காட்டி தம்மை அங்கு இழுத்துவிட்டு, படையினர் வவுனியா–கிளிநொச்சி றோட்டில் முன்னேறவும் கூடும் என்பதால் புலிகளின் முக்கிய அணிகள் வவுனியா–கிளிநொச்சி றோட்டைவிட்டு நகரப்போவதில்லை.

எனவே மன்னார் உயிலங்குளத்தில் இருந்து குமுளமுனைவரை மளமளவென்று படையினர் முன்னேறிச் செல்ல முடியும். யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் முன்னேறியதுபோல, அதைவிட வேகமாகக்கூட படையினர் குமுளமுனைய் அடையலாம்.

மன்னாரில் இருந்து குமுளமுனை வரையான 47 கிலோ மீட்டரை படையினர் சென்றடைவது முதல் கட்டம். இரண்டாவது கட்டம் குமுளமுனையில் இருந்து பூநகரியை சென்றடைவது. அதாவது 27 கிலோமீட்டர் தூரத்தை தாண்டுவது.


குமுளமுனையில் இருந்து பூநகரிக்கு செல்லும் றோட்டின் இரு புறமும் நிலப் பரப்பு காணப்படும். இடது புறம் உள்ள நிலப்பரப்பு 25 சதுர கிலோமீட்டர் பரப்பளவு இருக்கிறது. அதன் பின்னர் பூநகரிக் கடல் வருகிறது.

குமுளமுனையில் இருந்து முன்னேறும் போதுதான் படையினர் புலிகளிடம் இருந்து இருபுறத் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

பூநகரி மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் உள்ள புலிகள் றோட்டின் இடது புறம் இருந்தும் வலது புறம் இருந்தும் ஊடறுத்து தாக்க முற்படுவர். அல்லது மோட்டார் ஷெல்களை ஏவித் தாக்குவர்.

குமுளமுனையில் இருந்து பூநகரி செல்லும் றோட்டின் வடது புறம் காடுகள் மற்றும் வயல் சார்ந்த பகுதிகள் உள்ளன. எனவே புலிகள் காடுகளுக்குள் பதுங்கி இருந்து தாக்குவர். இடதுபுறம் கட்டிடங்கள், குடிமனைகள் உள்ள பகுதியாகும். அங்கிருந்தும் புலிகள் தாக்குதல் தொடுப்பர்.

ஆயினும் அத் தாக்குதல் பாரிய அளவினதாக அமைவது சந்தேகம்தான். ஏனெனில்




படையினர் கிளிநொச்சியில் இருந்தும் பூநகரி நோக்கி புறப்பட்டால் புலிகள் இரு புறத் தாக்குதலை கைவிட நேரலாம்.

கிளிநொச்சியில் இருந்து செல்லும் படையினரும், குமுளமுனையில் இருந்து செல்லும் படையினரும் பூநகரியில் சந்திப்பர். அப்படிச் சந்தித்தால் மன்னார் பூநகரி றோட் முழுவதும் படையினரின் கட்டுப்பாட்டில் வந்துவிடும். அவ்வாறு கட்டுப்பாட்டில் வந்துவிட்டால் றோட்டின் இடது புறம் உள்ள புலிகள் தப்பிச் செல்ல வழியிருக்காது.

அதனால் குமுளமுனையில் இருந்து படையினரை தடுத்து நிறுத்த முடியாது என்று தெரிந்தவுடன் றோட்டின் இடதுபுறப் பகுதிகளான நாவலடி, பாலாவி, பொன்னாவெளி, வலைப்பாடு, பேய்முனை போன்ற பகுதிகளில் உள்ள புலிகள் றோட்டின் வலதுபுறம் உள்ள பகுதிகளை நோக்கி தப்பிச் சென்றுவிடுவர்.

அதன் பின்னர் மன்னார்–பூநகரி றோட்டில் உள்ள படையினர்மீது பூநகரி காட்டுப் பகுதிகளில் இருந்தே புலிகள் கெரில்லாத் தாக்குதல்களை தொடரவேண்டியிருக்கும்.

மன்னார்–பூநகரி றோட் கைப்பற்றப்பட்டவுடன் பூநகரியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதையையும் படையினர் திறந்துவிடுவர்.

### கடற் போக்குவரத்து

மன்னார்–பூநகரி றோட் படையினரின் கட்டுப்பாட்டில் செல்வதாலும், யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதை (சங்குப்பிட்டி–கேரதீவு வழியாக) திறக்கப்படுவதாலும் புலிகளின் தளப் பகுதிக்கு பாதிப்பு ஏற்படாது. ஆனால் யுத்த தந்திர ரீதியில் புலிகளுக்கு சில நெருக்கடிகள் ஏற்படும். பலவீனங்கள் தோன்றும்.

மன்னார்–பூநகரி றோட்டின் இடதுபுறம் தான் இரணைமடுவுக்கான கடல்வழி இருக் கிறது. புலிகள் அக் கடல்வழியைப் பயன் படுத்தியே யாழ் குடாநாட்டுக்கும், இந்தி யாவுக்கும் படகுகள் மூலம் சென்று வருகின்றனர்.

மன்னார்–பூநகரி றோட் படையினரின் கட்டுப்பாட்டில் சென்றுவிடுவதால் அந்த கடல் வழிக்கு புலிகள் செல்ல முடியாது.

இதுவரை முல்லைத்தீவில் இருந்து லொறிகளில் படகுகளை ஏற்றி மன்னார் பூநகரி றோட்டைக் கடந்து சென்று இரணைதீவு கடல் வழியாக படகு போக்குவரத்தை கடற்புலிகள் நடத்தினர். மன்னார்–பூநகரி றோட் தடைப்பட்டால் புலிகள் யாழ் கடல் நீரேரியையும் பயன்படுத்த முடியாது. மன்னார், கிளிநொச்சி, பூநகரி கடற்பிராந்தியம் புலிகளின் கையை விட்டுப் போய்விடும்.

பின்னர் முல்லைக் கடற் பிராந்தியம் ஊடாக புலிகள் யாழ் செல்வதும், இந்தியா செல்வதும் நீண்ட தூர சுற்றுப் பாதையாக இருக்கும்.


மன்னார் கடற்பிராந்தியத்தில் கடற் படையினருக்கு கடற்புலிகளின் அச்சுறுத்தலும் இருக்காது. தலை மன்னாரில் உள்ள கடற்படைத் தளத்தில் இருந்து யாழ்ப்பாணம் யாழ் குடாநாடுவரை கடற் படையினர் சென்றுவர– முடியும்.

எனவே– சாதக பாதகங்களை ஆராயும்போது மன்னார்– பூநகரி றோட்டில் படையினர் முன்னேறுவதுதான் படையினரின் திட்டமாக இருக்கும் என்று தெரிகிறது.

ஆனால், அதுதான் படையினரின் திட்டம் என்று ஒரேயடியாக முடிவு செய்து புலிகள் தமது சக்தியை அந்த முனையில் குவித்தால், அதுதான் தருணம் என்று படையினர் வவுனியா–கிளிநொச்சி பாதையில் செல்லத் தொடங்கிவிடுவர். அதனால் புலிகள் தற்போதைக்கு வவுனியா–கிளிநொச்சி பாதையில் படையினர் முன்னேறினால் தடுப்பதில் மட்டுமே முழுச் சக்தியையும் குவித்து வைத்துள்ளனர்.

மன்னார்–பூநகரி றோட்டை இழந்தாலும், முல்லைத் தளப் பகுதிக்குள் படையினரை விடாமல் தடுப்பதுதான் புலிகளின் பிரதான நோக்கம். ஏனெனில் முல்லைத் தளத்துடன் ஒப்பிடும்போது மன்னார்–பூநகரி றோட்டை இழப்பதும், கடற்பிராந்தியத்தில் சிலவற்றை இழப்பதும் ஒப்பீட்டளவில் பாதகம் குறைந்தது என்றே புலிகள் நினைப்பர். அதற்கேற்பவே புலிகளின் வியூகமும் வன்னியில் வகுக்கப்பட்டுள்ளது. ■

## அதிரடி அய்யாத்துரை



**கூட்டான கட்சி** உயிர் பிழைத்திருப்பதே கிழக்கின் சிங்கத்தாரின் தயவில் தான். இப்போது அவரை ஓரம் கட்டுகினமாம். அதிகாரத் தரப்பிடமும் 'அவா ரெண்டு எழுத்து சப்போட்டர்' எண்டு கோள் மூட்டியிருக்கினமாம். உள்ளூராட்சித் தேர்தல் விடயத்தில் ஆதரவு அறிக்கை விட்டது கிழக்கு முக்கியஸ்தர்களுக்கு பிடிக்கேல்லையாம். "என்னிடம் கேட்காமல் எப்படி முடிவெடுத்தீர்கள்?" என்று சிங்கத்தார் கேட்டாராம் தலைவரை. "நீங்கள் ஊரில் இல்லை. அதுதான் கேட்கமுடியவில்லை" எண்டாராம் தலைவர். "உது நொண்டிச்சாட்டு" எண்டு மனம் நொந்து போயிருக்கிறார் சிங்கத்தார். நல்ல காலம் அவர் கையெழுத்துடன் அறிக்கை விடேல்லை. அதுக்காக எண்டாலும் சந்தோசப்பட வேண்டாமோ?!

**யாழ்ப்பாணம்** வடமராட்சியில் 'அநியாய'த்தின் அநியாயம் தாங்க முடியெல்லையாம். தனக்கு வேண்டாத ஆட்களையெல்லாம் மாட்டி விடுவதில் அவர் சூரராம். அதுதான் அவர் பெயரையே 'அநியாயம்' எண்டு சனங்கள் மாற்றிப்போட்டுதுகள். பெண்கள் விஷயத்திலும் அநியாயம் வரம்பு மீறுகிறாராம். சந்தோசப்படுத்தும் காரியங்களுக்காக பெண்களை சேகரிக்க முற்படுகிறாராம். அதனால் "மாமா அநியாயம்" எண்டும் புதுப்பெயர் சூட்டலாம்.

**அவர்** ஒரு முக்கிய அதிகாரி. யாழில் அவர்தான் முதல் அதிகாரி. அவரது ஊழல்- சுருட்டல் விவகாரம் சக அதிகாரிகளுக்குத் தெரிஞ்சு போச்சுது. அதனால் கதை ஒன்றை அவிழ்த்து விட்டிருக்கிறாராம். ரெண்டு எழுத்தாருக்கு கொடுக்கத்தான் இவ்வளவு பாடுபட்டு சுருட்டுகிறாராம். "மாதா மாதம் ரெண்டு எழுத்தாருக்கு சுளையாக தள்ளிக் கொண்டிருக்கிறேன்" எண்டு சக அதிகாரிகளுக்கு சொல்லியிருக்கிறாராம். ரெண்டு எழுத்தாருக்கு கொடுக்கிறார் எண்டால் சக அதிகாரிகள் மூச்சுவிட மாட்டினமல்லோ! நாதா! நாதா!

**அழகுராணிப்போட்டி** அழகிகளை பூட்டிய அறைக்குள் வைத்துத்தான் 'செலக்ட்' பண்ணினவையாம். அது ஒரு பக்கமிருக்க, அரண் ஒன்றில் சில பெண்களை மறித்து "உங்களை அழகு ராணிப்போட்டிக்கு சிபாரிச பண்ணலாம் போல கிடக்கு, எப்படி வசதி?" எண்டு கேட்கப்படுவதாகவும் தகவல்.

**தொண்டர் நிறுவனம்** ஒன்றைச் சேர்ந்த வெள்ளைக்காரப் பெண் ஒருவரும் 'ஜாலி மூட்' வந்து மேடையில் ஆடினவராம். அவருடன் சேர்ந்து ஆடுவது மாதிரி ஆடிக்கொண்டு வம்புப் பொடியள் சிலர் கைகாலை கண்டாமாதிரி நீட்டியிருக்கினம். 'ஒ.வெரி பாட் வெரி பாட்' எண்டு கூவிக் கொண்டு மேடையை விட்டு இறங்கி ஓட்டம் பிடிச்சாராம் பெண்மணி. யாழ்ப்பாண களியாட்ட விழாவில் நடந்த கூத்துத்தான் அது.

**"எங்கடை விமர்சகர்கள்** சிலர் முழுப் பூசணிக்காயை ஒரு கோப்பைச் சோற்றில் மறைப்பதிலே கில்லாடிகள் பாருங்கோ. தீர்வு யோசனை வந்தவுடனே "ஆஹா வந்திரிச்சு" எண்டு எழுதியதும் அவைதான். சமீபத்திலே 'அரசாரும், எதிரணியாரும் ஒண்டுபட்டனர் காணீர்! ரெண்டு எழுத்தாரும் பின்னணியில் நிற்பதைப் பாரீர், பாரீர்!" எண்டு எழுதியதும் அவைதான். பின்னர் நிலமை தாங்கள் நினைச்சதுக்கு நேர் எதிர் எண்டு தெரிஞ்சவுடனே, முந்திச் சொன்னதும், வாழ்த்தியதும் தாங்கள் இல்லையெண்டமாதிரி, "உந்த தமிழ்க் கட்சிகள் நம்பி ஏமாறலாமோ? எல்லாம் கானல் நீரல்லோ," எண்டு ரெக்கோட்டை மாத்திப் போடுவதும் அவைதான். தமிழ் கட்சிகள் பிழை விடுகினம் எண்டதுக்காக தாங்கள் பிழை விட்டுக் கொண்டே தங்கள் பிழைகளையும் தலையில்கட்ட தமிழ் கட்சிகள்தான் கிடைச்சுதோ?"

இதெல்லாம் என் கேள்வியல்ல. ஒரு தமிழ்க் கட்சித் தலைவர் என்னிடம் கேட்டுத் துளைத்த கேள்விகள். நான் மூச்! பதிலையும் அவரே சொன்னார்: "கொஞ்சம் பொறுங்கோ எல்லாருக்கும் விளங்குவது மாதிரி விலாவாரியான பதிலடிகளுடன் ஒரு பத்திரிகை வாயிலாக சந்திக்கிறோம்!" எண்டார் மர்மச் சிரிப்புடன். 'சங்கநாதம்' எண்ட பெயரில் விரைவில் ஒரு பத்திரிகை வருதாம்.

**புத்தாண்டை முன்னிட்டு** 'அரண்களில்' இறங்கிச் செல்லாமல், சைக்கிள் ஓடிச் செல்லலாம் எண்டு யாழில் சில அரண்களில் சலுகை காட்டப்பட்டதாம். அப்படிச் சொல்லியும் சிலர் இறங்கித்தான் உருட்டினவையாம். ஏன் எண்டு கேட்டதற்கு அவை சொன்ன விளக்கம்: "இதே பழக்கத்திலை நாளைக்கும் ஞாபக மறதியாக இறங்காமல் நாங்கள் செல்ல, அவை சந்தேகத்திலை ஏதாவது இடக்கு முடக்கா செய்து தொலைக்க.. ஏன் பாருங்கோ வீண் வம்பு?"

**திருமலையில்** லிங்கநகரில் தடை அரணில் சைக்கிளை உருட்டி நடந்துசெல்வது விதி. புதிதாக மாறிவந்த சீருடையினருக்கு அந்த விதி தெரியாதாம். ஓடிச் செல்லலாம் எண்டு விட்டுப்போட்டினம். சனத்துடன் நல்லாகப் பழகினவையாம். செந்தமிழர் ஒருவருக்கு இது பொறுக்கவில்லை. விறு விறுவென்று போய் சீருடையினருக்கு அன்பாக புத்தி சொன்னாராம். உப்பிடியேவிட்டால் சனம் மரியாதை தராது. ஒரு பயபக்தி இருக்காது!" எண்டு நீளமாக உபதேசித்தாராம். இப்போது சைக்கிளில் செல்வோர் இறங்கி உருட்டுகினம்.

இந்தவாரம் ஒரு குறும்புக் கவிதை:

"காதலியின் தாவணியைவிட
மனைவியின் சேலைக்கு
மகத்துவம் அதிகம்!
முன்னது செலவழிக்கும்
பின்னது சேமிக்கும்!" ■



படிப்பகம்

www.padippakam.com

## காட்டு வாழ்க்கை

இந்தியப் படையினர் யாழ் குடா நாட்டை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்த பின்னர் பிரபாகரனும், புலிகள் இயக்க முக்கிய தளபதிகளும் வன்னிக்காட்டுக்கு சென்றனர்.

யாழ் குடாநாட்டில் இருந்த வாழ்க்கை முறைக்கும் பின்னர் காட்டுக்குள் ஏற்படுத்திக் கொண்ட வாழ்க்கை முறைக்கும் இடையே வித்தியாசம் இருந்தது.

ஆரம்பத்தில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலருக்கு காட்டு வாழ்க்கைக்கு பழக்கப்படுவது சிரமமாகவே இருந்தது. நகரப்பகுதியிலும், மக்கள் மத்தியிலும் இயங்கிப் பழக்கப்பட்ட உறுப்பினர்கள் புதிய சூழலுக்கு படிப்படியாக பழக்கப் படுத்தப்பட்டனர்.

இந்தியப் படை வடக்கு-கிழக்கு முழுவதையும் கைப்பற்றி நிலை கொண்டு விட்டது.

படைபலமும் பயங்கரமாக இருக்கிறது. இனிமேல் போரிடுவது முடியாத காரியம் என்று நம்பிக்கையிழந்து இயக்கத்தில் இருந்து வெளியேறியவர்களும் இல்லாமல் இல்லை.


ரோகனவிஜயவீர மனைவி பிள்ளைகளுடன்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# தென்னிலங்கையில் பீதிகிளப்பிய பச்சைப் புலிகள்!

அரசியல் தொடர் — எழுதுவது: அற்புதன்

முக்கிய உறுப்பினர்கள் சிலரே இந்தியப் படையினரிடம் சரணடையத் தொடங்கியதால் புலிகள் இயக்க கீழ்மட்ட உறுப்பினர்கள் பலருக்கு குழப்பமான நிலை ஏற்பட்டது.

சூழல் மாற்றத்தின்போது ஏற்படக் கூடிய நெருக்கடிகளையும், நம்பிக்கை யீனங்களையும் புலிகள் அமைப்பினரும் அப்போது சந்தித்துக் கொண்டிருந்தனர்.

புலிகள் இயக்கத்தின் கதை இத்தோடு முடிந்தது. இந்தியப் படையினர் எப்பாடுபட்டாவது புலிகளை ஒழித்துக்கட்டியே தீருவர் என்றுதான் பெரும்பாலான மக்களும்கூட நினைத்தனர்.

இச் சூழ்நிலையில் பிரபாகரனுக்கும்

127

புலிகள் இயக்கத் தலைமைக்கும் பல்வேறு சவால்கள் காத்திருந்தன.

முதலில் இயக்கத் தலைமையை பாதுகாத்து தமது புதிய தளப்பகுதியை கெட்டிப்படுத்துவது.

அடுத்ததாக மக்களுக்கும், இயக்க உறுப்பினர்களுக்கும் நம்பிக்கையூட்டக் கூடிய வகையில் தாக்குதல்களை நடத்த வேண்டும்.

தொடர்பற்றுப்போன இயக்க அணிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது, புத்துணர்ச்சி ஊட்டுவது போன்ற பணிகளும் இருந்தன.

காட்டுக்குள் இருந்த உறுப்பினர்களுக்கு உணவுப் பற்றாக்குறையும் ஆரம்பத்தில் இருந்தது.

குடிதண்ணீருக்காக காட்டுப்பகுதியில் கிணறுகள் தோண்டவேண்டியிருந்தது. இருப்பிடங்களையும் அமைக்க வேண்டியிருந்தது.

வன்னி காட்டுப் பகுதிகள் மாத்தையாவுக்கு நன்கு பரிச்சயமானவை. அப்போது பிரபாகரனுக்கும், மாத்தையாவுக்கும் இடையே விரிசலுக்கான அறிகுறியே தோன்றாத காலம்.

## பிரபாகரனின் குடும்பம்

இந்தியப் படையோடு மோதல் தொடங்கி பிரபாகரன் வன்னிக் காட்டுப் பகுதிக்கு சென்றபோது பிரபாகரனின் குடும்பத்தினர் என்ன ஆகினர்?

அதுபற்றிப் பிரபாகரனே பின்னர் ஒரு முறை இவ்வாறு கூறியிருக்கிறார்: "இந்திய இராணுவம் எங்களை தீவிரமாக வேட்டையாடியபோது என் மனைவி மதிவதனியையும், குழந்தைகளையும் உறவினர் வீடுகளில் போய் இருக்கும்படி எவ்வளவோ கூறினேன். ஆனால் அவள் கேட்கவில்லை. என்னுடனேயே இருப்பேன் என்று பிடிவாதம் பிடித்தாள். பின்னர் குழந்தைகளை மட்டும் இயக்க ஆதரவாளர்களிடம் ஒப்படைக்க முடிவு செய்தோம்.

ஒரே இடத்தில் இரு குழந்தைகளையும் வைத்திருக்க விரும்பவில்லை. ஒன்றுக்கு ஏதேனும் நேர்ந்தால் மற்றொன்றாவது பிழைத்திருக்கட்டும் என எண்ணி மூத்தவனான சார்ள்ஸை ஒரு இடத்திலும், இளையவளான துவாரகாவை வேறு இடத்திலும் வளர்க்க ஏற்பாடு செய்தோம்.

முதலில் அதற்கு ஒப்புக்கொண்டு என்னுடன் வந்த மதிவதனி நாட்கள் செல்லச் செல்ல குழந்தைகளை எண்ணி புலம்பத் தொடங்கினாள். ஆயிரக்கணக்கான தமிழீழக் குழந்தைகளின் எதிர்காலம் என்னாகுமோ என்று தெரியாத நிலையில் உள்ளது. அவர்களுக்கு நடப்பதே நம் குழந்தைகளுக்கும் நடக்கட்டும் என்று கூறினேன். ஆனாலும் சில வேளைகளில் இரவு நேரங்களில் திடீர் என்று எழுந்து குழந்தைகளை நினைத்துக் கதறி அழுவாள்.

என்னைப் பிடிக்க முடியாத இந்திய இராணுவம் மதிவதனியையும், குழந்தைகளையும் எப்படியாவது கைது செய்ய வேண்டும் எனப் பெரு முயற்சி செய்தது" என்று கூறியிருக்கிறார் பிரபாகரன்.

பிரபாகரனின் இரண்டாவது குழந்தையான துவாரகா வயிற்றுப் போக்கு நோயினால் மரணமானதாகக் கதைகள் பரவியிருந்தன. அவை தவறான செய்திகளாகும்.

## பொறுப்பாளரின் சரணடைவு

கிட்டுவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தவர்களில் ஒருவர் அரியாலை, பாஷையூர் போன்ற பகுதிகளுக்கு பொறுப்பாக இருந்த மலரவன்.

இவர்தான் முன்னர் கிறிஸ்தவ மதகுரு ஒருவர் மூலமாக தன்னிடம் சரணடைந்த எட்வேர்ட் என்பவரை சித்திரவதை செய்து கொலை செய்தவர். அச் சம்பவம் தொடர்பாக முன்னர் குறிப்பிட்டிருக்கிறேன்.

இந்தியப் படையினர் யாழ்நகரைக் கைப்பற்றியவுடன் மலரவன் தன் குடும்பதினருடன் போய்ச் சேர்ந்து கொண்டார்.

இந்திய இராணுவத்தினர் முன்னேறிக் கொண்டிருந்தபோது நல்லூர் கந்தசாமி கோவில் அருகே தனது குடும்பத்தினருடன் ஒரு காருக்கு பின்னால் மக்களோடு மக்களாக மலரவன் ஒளிந்து கொண்டிருந்தார்.

பின்னர் வெளிநாடொன்றுக்கு தப்பிச் செல்வதற்காக தனது குடும்பத்தினருடன் புறப்பட்டார் மலரவன். மலரவனை இனம் கண்ட சிலர் இந்தியப் படையினருக்கு தகவல் கொடுத்தனர். மலரவன் கைது செய்யப்பட்டு இந்தியப் படையினரின் சிறையில் வைக்கப்பட்டார்.

இந்தியப் படையினர் மலரவனை விடுதலை செய்த பின்னர் தனது உயிருக்கு புலிகளால் ஆபத்து ஏற்படும் என்று பயந்து அவர் வெளிநாட்டுக்கு ஓடிவிட்டார்.

## பச்சைப் புலிகள்

1988ன் ஆரம்பத்தில் ஜே.வி.பி. இயக்கத்தினரின் நடவடிக்கைகள் தென்பகுதியில் தீவிரமாகின.

இராணுவத்தினரையும், பொலிசாரையும் மட்டுமல்லாமல், தங்கள் இயக்கத்தினருக்கு எதிரான அரசியல்வாதிகளையும் ஒழித்துக்கட்டத் தொடங்கியது ஜே.வி.பி.

இதேவேளையில் மற்றொரு திகில் செய்தியும் வெளியாகிக் கொண்டிருந்தது.

ஜே.வி.பி. உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் ஒரு குழுவினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். வீதிகளில் பிணமாக வீசப்பட்டுக் கொண்டிருந்தனர்.

ஜே.வி.பி.யினரை வேட்டையாடுவோராக தம்மைக் கூறிக்கொண்ட அக்குழுவினர் தமது இயக்கத்தின் பெயர் 'பச்சைப் புலிகள்' என்று அறிவித்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் கொடியின் நிறம் பச்சை. எனவே பச்சைப் புலிகளுக்கும் ஆளும் கட்சிக்கும் இடையே நிச்சயம் தொடர்பிருக்க வேண்டும் என்று சந்தேகம் எழுந்தது.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் மகனான ரவி ஜெயவர்த்தனாதான் விசேஷ அதிரடிப்படைக்கு பொறுப்பாக இருந்தார்.

அதனால் விசேஷ அதிரடிப்படையினர்தான் 'பச்சைப் புலிகள்' என்ற பெயரில் செயற்பட்டு சந்தேகப்படும் நபர்களை தீர்த்துக் கட்டுகிறார்கள் என்றும் கதைகள் உலாவத் தொடங்கின.

ஜே.வி.பி.யினரால் இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கொலை செய்யப்பட்டனர். அதனால் இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த ஒரு பிரிவினர் இணைந்து மக்கள் புரட்சிகர செம்படை என்ற அமைப்பை உருவாக்கினார்கள். அந்த அமைப்பே 'பரா' என்று சுருக்கமாக அழைக்கப்பட்டது.

சுதந்திர மாணவர் இயக்கம் என்னும் அமைப்பைச் சேர்ந்தவர்களே 'பரா'வின் முக்கிய உறுப்பினர்களாகவும் இருந்தனர். ஜே.வி.பி.க்கு பதிலடி கொடுக்கும் புரட்சிகர இராணுவ அமைப்பு தாங்கள்தான் என்று 'பரா' கூறிக்கொண்டது.

## பாதுகாப்பு

தென்னிலங்கை இடதுசாரி கட்சிகளுக்கு இயக்கங்களில் இருந்து வெளியேறிய தமிழ் இளைஞர்களும் பாதுகாப்பாளர்களாக செயற்பட்டனர்.

சுவரொட்டிகள் ஒட்டுவது போன்ற பணிகளில் இடதுசாரிக் கட்சியினர் ஈடுபடும்போது பாதுகாப்பளிப்பதும் அந்த இளைஞர்கள்தான். அரசியல் கட்சிகளின் பாதுகாப்புக்காக அரசாங்கம் கொடுத்த ஆயுதங்களை பயன்படுத்துமளவுக்கு தேர்ச்சி பெற்றவர்கள் இடதுசாரிக் கட்சிகளில் இருக்கவில்லை. அதனால் இயக்கங்களில் இருந்து வெளியேறி உதிரிகளாக கொழும்பில் நின்ற தமிழ் இளைஞர்களை அக்கட்சிகள் பயன்படுத்திக் கொண்டன.

ஜே.வி.பி.யினரும் தமிழ் இளைஞர்கள் சென்று இடதுசாரிக் கட்சிகளுக்காக சுவரொட்டிகள் ஒட்டியபோது தாக்குதல்களில் ஈடுபடாமல் தவிர்த்துக் கொண்டனர்.




அப்போதெல்லாம் கொழும்பில் சோதனைச் சாவடிகளில் சிங்கள இளைஞர்கள், யுவதிகளுக்குத்தான் கெடுபிடி.

அடையாள அட்டையில் தமிழர் என்று இருந்தால் சோதனையே கிடையாது.

## காட்டுக்குள் ஜே.வி.பி.

வடக்கு-கிழக்கில் புலிகள் எப்படிக் காட்டுப் பகுதிகளை நோக்கி பின்வாங்கினார்களோ, அதேபோல ஜே.வி.பி.யினரும் தென்னிலங்கைக் காட்டுப்பகுதிகளுக்குள் பதுங்கியிருந்தனர்.

ஜே.வி.பி. இயக்கத் தலைவரான ரோகன விஜய வீர தாடி மீசை எல்லாவற்றையும் மழித்துக்கொண்டு காட்டுப் பகுதிகளில் தலைமறைவாக இருந்தார்.

அப்போது புலிகளுக்கும், ஜே.வி.பி.க்கும் இடையே ஒரு ஒற்றுமை இருந்தது.

இரண்டு இயக்கங்களுமே இந்தியப் படையை வெளியேறுமாறு கோரிக் கொண்டிருந்தன.

(தொடர்ந்து வரும்)


காட்டுக்குள் தலைமறைவு வாழ்க்கை. வெள்ளைச் சட்டையுடன் இருப்பவர்தான் ரோகனவிஜயவீர.

# ஐ.நா சபையில் அதிரடிப் பாய்ச்சல்!

இம்முறை பிரிட்டிஷ் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட இலங்கைத் தமிழர் கிருஷ்ணா வைகுந்தவாசன்.

இந்த வைகுந்தவாசன் பற்றி அன்றொரு நாள் அகில உலகமே பேசிக்கொண்டது. இலங்கைத் தமிழர்களும் வியந்து நின்றனர்.

அந்தநாள் 5.10.1978.

அன்றுதான் ஐக்கிய நாடுகள் சபைக்குள் அதிரடியாகப் புகுந்து தமிழீழப் பிரகடனம் செய்தார் வைகுந்தவாசன்.

ஐக்கிய நாடுகள் சபைக்குள் செல்வது சாதாரண காரியமல்ல. உலக நாடுகளின் தலைவர்களும், அமைச்சர்களும் உள்ளே செல்லலாம். வைகுந்தவாசன் ஒரு சாதாரண மனிதர். ஐ.நா.சபைக் காவலர்களின் கண்களிலேயே மண்ணைத் தூவிவிட்டு உள்ளே புகுந்தார் என்றால் நம்பவே முடியாத சாதனை அல்லவா.

பாலஸ்தீன விடுதலை இயக்கம்கூட பல்லாண்டுகாலமாக படாதபாடுபட்டு, பல நாடுகளின் கோரிக்கையின் பயனாகத்தான் ஐ.நா.சபைக்கு செல்ல முடிந்தது. யாசீர் அரபாத் அங்கு பேச முடிந்தது.

ஆனால் யாருடைய சிபாரிசும் இல்லாமல் ஐ.நா மேடையில் ஏறிப் பேசிவிட்டு இறங்கினார் வைகுந்தவாசன் என்றால் மனிதர் கில்லாடிதானே. இந்த அரசியல் தொடரில் நான் தவறவிட்ட அந்த அபூர்வ நிகழ்வை இப்போது தருகிறேன்.

அமெரிக்காவில் நியூயோர்க்கில் இருக்கிறது ஐக்கிய நாடுகள் சபை.

நீதிபதியாக இருந்து பின்னர் ஓய்வு பெற்று இலண்டனில் வழக்கறிஞராக பணியாற்றியவர் வைகுந்தவாசன்.

தன்னுடைய தொடர்புகள் மூலமாக ஐ.நா. சபையின் பார்வையாளர் பகுதிக்கு சென்று சபை நிகழ்ச்சிகளை பார்வையிடும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டார். அப்போதுதான் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சபைக்குள் புகுந்து பேசினால் என்ன என்ற யோசனை அவருக்குள் உதித்தது.

அதனைச் செயலாக்க படிப்படியாக முன்னேறினார். பலநாட்கள் சென்று பார்வையாளர் பகுதியில் இருந்தார். பின்னர் மெல்ல மெல்ல காவலர்களுக்கு பரிச்சயமான முகமாகிவிட்டதால் சபைக்கு வரும் உலகத் தலைவர்கள் அமரும் மண்டபத்துக்குள்ளும் தடை இன்றி செல்ல முடிந்தது.

இனி சபைக்குள் புகுந்துகொள்வதுதான் பாக்கி. அதற்குரிய நாளும் வந்தது. 5.10.1978 அன்று ஐ.நா நிகழ்ச்சிகள் கொலம்பியா நாட்டுப் பிரதிநிதி தலைமையில் நடந்து கொண்டிருந்தன.

அமெரிக்கா, சோவியத் யூனியன் (அன்று) பிரிட்டன் உட்பட 150 நாடுகளின் தலைவர்கள் அமர்ந்திருந்தனர். பார்வையாளர் பகுதியில் சுமார் இரண்டாயிரம் பேர் அமர்ந்திருந்தனர்.

காலை நிகழ்ச்சியில் சைப்பிரஸ் நாட்டு தலைவரும், சூரினம் நாட்டுத் தலைவரும் பேசிமுடித்திருந்தனர். நண்பகல் இடைவேளைக்குப் பின்னர் ஒரே ஒரு நாட்டுப் பிரதிநிதிதான் பேசுவதாக இருந்தது.

அவர்தான் இலங்கைப் பிரதிநிதி. அன்று இலங்கைப் பிரதிநிதியாக கலந்து கொண்டவர் வெளிநாட்டு அமைச்சர் ஹமீட்.

'இப்போது இலங்கைப் பிரதிநிதி பேசுவார்' என்று அறிவிக்கப்பட்டது.

சபையிலிருந்து எழுந்தார் வைகுந்தவாசன். மிடுக்காக நடந்துபோய் மேடையில் ஏறினார். வணக்கம் சொன்னார். இலங்கைப் பிரதிநிதி என்ன பேசப் போகிறார் என்று கேட்க ஆவலாயிருந்தனர் பிரதிநிதிகள்.

எடுத்த வீச்சிலேயே இலங்கை அரசின் அடக்குமுறைகளைப் பற்றி சுருக்கமாக கூறிமுடித்தார். இது என்ன இலங்கை அரசின் பிரதிநிதியே தங்கள் அரசை சாடுகிறாரே! என்று பிரதிநிதிகளுக்கு ஆச்சரியம்.

அதேவேகத்தில் தன்னை தமிழீழத்தின் பிரதிநிதியாகவும், தன் பெயர் கிருஷ்ணா வைகுந்தவாசன் என்றும் சொன்னவர் தமிழீழப் பிரகடனம் செய்வதாகவும் முழங்கினார். தமிழீழம் எங்கே இருக்கிறது என்றும் விளக்கினர்.


அன்னை இந்திராவுடன் வைகுந்தவாசன்

அப்போதுதான் விஷயம் புரிந்தது. சட்டென்று மைக்கை செயல் இழக்கச் செய்தனர். சபையெங்கும் ஒரே பரபரப்பு.

சபைக் காவலர்கள் பாய்ந்து சென்று வைகுந்தவாசனை குண்டுக்கட்டாகத் தூக்கிக்கொண்டு போனார்கள்.

வைகுந்தவாசன் முகத்தில் மட்டும் தான் நினைத்ததை சாதித்துவிட்ட திருப்தி குடிகொண்டிருந்தது.





படிப்பகம்

www.padippakam.com

அலசுவது– இராஜதந்திரி

# புதிய இந்தியப் பிரதமரும் இலங்கை அரசின் புளகாங்கிதமும்!

இந்தியாவின் புதிய பிரதம மந்திரியாக இந்தர் குமார் குஜ்ரால் பதவியேற்றுள்ளார்.

**இப்பதவியேற்புக் குறித்து மிகவும் புளகாங்கிதமடைந்த நிலையில் இலங்கை அரசு இருக்கின்றது.** ஏனெனில் ஓரிரு மாதங்களுக்கு முன்னரே திரு. குஜ்ரால் இலங்கை வந்திருந்தார். அப்போது அவர் தேவகௌடா அரசில், இந்திய வெளி விவகார அமைச்சராக இருந்தார்.

திரு. குஜ்ராலுக்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சிறந்த வரவேற்பை வழங்கியதுடன், ஜனாதிபதி சந்திரிகாவும் திரு. குஜ்ராலின் விஜயத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருந்தார்.

இந்தியாவின் கடந்த பொதுத் தேர்தலின் பின்னர், சுமார் பத்துமாத காலத்தில், இந்தியாவில் மூன்று பிரதமர்கள் நியமனமாகியிருந்தனர்.

பாரதீய ஜனதாக்கட்சி சார்பாக அடெல் பிஹாரி வாஜ்பாய் பிரதமரானார். ஆனால் அவரது அரசு பாராளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்கத் தவறியதையடுத்து இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் எச்.டி.தேவகௌடா தலைமையில் கூட்டணிக்கட்சி ஆட்சியமைத்தது. ஆனால் தேவகௌடா அரசுகூட ஒரு சிலமாதங்களே நீடித்தது. திரு.கௌடாமீது இந்திரா காங்கிரஸ் கட்சி அதிருப்தி வெளியிட்டதையடுத்து அவரது ஆட்சி கலைக்கப்பட்டு தற்போது திரு.இந்தர் குமார் குஜ்ரால் புதிய இந்தியப் பிரதமராகத் தெரிவாகியுள்ளார்.

இந்திய வெளியுறவு விவகாரங்களில் நல்ல அனுபவஸ்தராக இருப்பவரே புதிய பிரதமர் குஜ்ரால் என வர்ணிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கைகள் நட்புணர்வையும், பரஸ்பர புரிந்துணர்வையும் கொண்டதாகவே இருக்குமெனவும் திரு. குஜ்ரால் வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது தெரிவித்திருந்தார்.

இந்தியா பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரமடைந்து 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. இந்த அரைநூற்றாண்டு காலத்தில் இந்தியாவின் வளர்ச்சி வியக்கத்தக்கதாக இருக்கின்றது.

இந்திய சனத் தொகையில் அநேகமானோர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்றனர். இருந்தபோதிலும் இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகள் உறுதியானவையாகவும் பெரிதும் சுதேச உற்பத்திகளையே மையமாகக் கொண்டவையாகவும் இருக்கின்றன.

அத்துடன் இந்தியா தனது அதிகளவிலான சனத்தொகையை பொருளாதார மேம்பட்டுக்குரிய மூலதனமாக மாற்றும் வகையில் கைத்தொழில் பேட்டைகள், சுய உற்பத்தி நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொண்டுள்ளது.

இந்தியாவின் முதலாவது பிரதமரான ஜவஹர்லால் நேரு, "தொழிற்சாலைகளே நான் வழிபடும் ஆலயங்கள்!" என்று கூறியிருந்தார்.

இதன்மூலம் குறுகிய மதவாதங்களை அவர் தொலைவில் வைத்ததுடன், இந்தியாவின் கைத்தொழில் வளர்ச்சிக்கும் ஓர் உந்துதலைக் கொடுத்திருந்தார்.

இந்திய சுதந்திரத்துக்காக வெள்ளையரோடு அஹிம்சா வழியில் போராடிய அதேசமயம், இந்தியர்களின் பிரதேச ஒற்றுமை, இன-மத சகிப்புத்தன்மை என்பவற்றைப் பேணுவதில் மகாத்மா காந்தி பெரும் பங்களித்திருந்தார்.

இலங்கை உட்பட உலகில் பல்வேறு நாடுகள் குறுகிய இன,மத, பிரதேச வேறுபாடுகளால் வெறிபிடித்த பகைமையைக் கொண்டுள்ளன.

ஆனால் சுதந்திரம் பெறுமுன்னரே இந்தியத் தலைவர்கள் தமது நாட்டின் ஒற்றுமை குறித்து ஆழமாகப் போட்டிருந்த அத்திவாரங்களே இந்தியாவின் உறுதிப்பாட்டை இன்றுவரை பேணுகின்றன.

**பல மொழி, மத, இன, கலாசார, பிரதேச வேறுபாடுகளையுடைய மக்கள், ஒற்றுமையுடன் வாழ்வதனை எடுத்துக்காட்டும் ஒரு நாடாகவே இந்தியா விளங்குகின்றது.**

அஸ்ஸாம், பஞ்சாப் மாநிலங்களின் பிரச்சினைகள் அண்மைக்காலம் வரை இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்குச் சவால் விட்டிருந்தன. ஆனால் அப்பிரச்சினைகள் கூட பெரிதும் தீர்க்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

காஷ்மீர் விவகாரமே இந்தியாவுக்கு தொடர்ந்து தலையிடியைக் கொடுத்துவருகின்றது. இதற்கு இப்பிரச்சினை பாகிஸ்தானுடன் ஓர் எல்லைத் தகராறாகவும் பிணைந்துள்ளதே முக்கிய காரணமாகும்.

இந்நிலையில் இன, மத, பிரதேச வன்முறைகளுக்கு இடமளிக்காது, மாநில ரீதியாக இந்தியாவின் அனைத்து இன மக்களும் தமது சொந்த நலன்களைப் பேணும் விதத்தில் அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பரவலாக்கம் அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆயினும்கூட இந்தியாவில் உள்ள பல மாநிலங்களில் தமக்குரிய அதிகாரம் போதாது என்ற குரல்கள் எழத்தொடங்கியுள்ளன. தமிழ்நாட்டில் தி.மு.க.வினர் மாநில சுயாட்சிக் கோரிக்கையை நீண்டகாலமாக முன்வைத்து வருகின்றனர்.**

மத்திய அரசு நினைத்த நேரத்தில் மாநில அரசுகளை கலைக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பது தொடர்பாகவும் அங்கு எதிர்ப்புக் குரல்கள் எழத் தொடங்கியுள்ளன.

இந்தியா பல்வேறு இன மக்களின், தேசிய இனங்களின் சிறைச்சாலையாக இருக்கக் கூடாது. சகல தேசிய இனங்களுக்கும், மாநிலங்களுக்கும் போதிய அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டாக வேண்டும் என்று பல அமைப்புக்கள் அங்கு கோரத் தொடங்கியுள்ளன.

**எனினும் இந்தியா பல தேசிய இனங்களையும், மாநிலங்களையும் கொண்டிருப்பதால் இலங்கையின் இனச் சிக்கலுடன் இந்திய அனுபவத்தையும், அரசியலமைப்பு முறையையும் பொருத்திப் பார்க்க முடியாது.**

இலங்கையில் இரண்டு மொழிபேசும் மக்களே பிரதானமாக உள்ளனர். இன முரண்பாடுகளும் நேரடியாக அவர்களுக்கிடையிலானதாகவே காணப்படுகிறது.

தமது அரசியல் கோரிக்கைகள், நலன்கள் என்பவற்றுக்காக கண்ணீரும் செந்நீரும் சிந்திய, பெரும் இழப்புக்களுடனான நீண்டகால போராட்ட வரலாற்றைக் கொண்டவர்களாகவே வடக்கு-கிழக்கு மக்கள் விளங்குகின்றனர்.

எனவே அதற்கேற்பவே விசேடமான ஒரு அரசியல் தீர்வினை காணவேண்டியுள்ளது.

இப் பின்னணியில்தான் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் பங்கினை நோக்கவேண்டியுள்ளது.

இலங்கைப் பிரச்சினையை முதலில் உலகறியச் செய்த ஒரு நாடாகவும் இந்தியாவே இருக்கின்றது. அன்றைய பிரதமர் இந்திரா காந்தியின் காலத்தில் இலங்கை இனப்பிரச்சினை குறித்த விடயம் ஐக்கிய நாடுகள் சபைவரை எதிரொலித்திருந்தது.

இதுதவிர இலங்கைத் தமிழர்களின் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்த பிரதேசப் பரம்பலையும் இந்தியா ஏற்றுக்கொண்டதுடன், அதிகாரப்பரவலாக்கத்துடன் கூடிய அரசியல் தீர்வொன்றின் மூலமே இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியுமென்பதை வலியுறுத்திய நாடாகவும் இந்தியாவே விளங்கியது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலம் மாகாண சபை நிர்வாக முறையையும் இந்தியாவே அறிமுகப்படுத்தியது.

**இருந்தபோதிலும் அம்மாகாணசபை நிர்வாகமுறை வடக்கு-கிழக்குத் தமிழர்களின் பிரச்சினையை விசேடமாகத் தீர்ப்பதாகவும், தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதை மட்டும் கருத்தில் கொண்டதாகவும் அமையவில்லை. இதன் காரணமாகவே வடக்கு-கிழக்கில் மாகாண சபை நிர்வாகமுறை தோல்வியைத் தழுவியதுடன், மேலும் கூடுதலான சுயாட்சி அதிகாரங்களுடன் ஒரு தீர்வை வேண்டியதாகவும் வடக்கு-கிழக்குப் பிரச்சினை விளங்குகின்றது.**

இந்தியா அதன் அயல் நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட்ப்போவதில்லை என்று இன்றைய பிரதமர் குஜ்ரால் இலங்கைக்குச் சில மாதங்களுக்கு முன்னர் விஜயம் செய்திருந்தபோது குறிப்பிட்டிருந்தார்.

**இலங்கை-இந்திய அரசுகளுக்கிடையேயான உறவுகள் கடந்த காலங்களில் இருந்ததைவிட மிகவும் முன்னேற்றகரமானதாகவும், ஆரோக்கியமானதாகவுமே தற்போதிருக்கக் காணப்படுகின்றது.**

இந்திய முன்னாள் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி கொலைக்கு பின்னர் இலங்கைப் பிரச்சினையில் தலையிடாமல் இருக்கும் கொள்கையையே இந்திய மத்திய அரசு கடைப்பிடித்து வருகிறது.

ஆளும் கட்சிகள் மாறியபோதும்கூட அந்த அணுகுமுறையில் மாற்றம் ஏற்படவில்லை.

சமீபத்தில் கவிழ்க்கப்பட்ட பிரதமரான தேவகௌடா இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிய எவ்விதமான அறிதலையோ, அனுதாபத்தையோ கொண்டிராத ஒருவராகவே விளங்கினார்.

தேவகௌடா அரசில் வெளிநாட்டமைச்சராக இருந்தவர் இன்றைய பிரதமர் ஐ.கே. குஜ்ரால். தேவகவுடாவை போல் அல்லாது இலங்கைப் பிரச்சினை தொடர்பாக நன்கு அறிந்த ஒருவராகவே குஜ்ரால் திகழ்கிறார்.

**விடுதலைப் புலிகளுக்கு எதிரான இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிப்பவராகவே ஐ.கே.குஜ்ரால் விளங்குகிறார்.** இலங்கை ஜனாதிபதிமீதும் மிகுந்த அபிமானம் கொண்ட ஒருவராகவும், வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் நம்பகமான நண்பராகவும் ஐ.கே.குஜ்ரால் விளங்குகிறார்.

**எனவே- இலங்கை அரசுக்கு தேவகௌடாவைவிட மிக நம்பகமான நண்பராக, மிகவும் வேண்டப்பட்டவராக இன்றைய பிரதமர் ஐ.கே. குஜ்ரால் இருப்பதால், இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் போக்கில் மாற்றம் எதுவும் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் இருக்கப்போவதில்லை.**

விடுதலைப் புலிகள் தொடர்பாகவும் எதிரிக்கு எதிரி நண்பன் என்ற ரீதியில் இரு நாடுகளின் உறவுகள் தொடரவே செய்யும்.

இந்திய அரசுடனான உறவை நல்ல நிலையில் வைத்திருந்தபடி இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தொடருவதே இலங்கை அரசின் இராஜதந்திரமாக இருக்கிறது.

புதிய பிரதமர் ஐ.கே. குஜ்ராலுக்கு வாழ்த்துச் சொல்ல முதல் ஆளாக திரு. லக்ஷ்மன் கதிர்காமர் சென்றதில் இருந்தே இலங்கை அரசின் இராஜதந்திரம் தெட்டத் தெளிவாகிறது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் மட்டுமல்லாமல், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்திலும் இலங்கைத் தமிழர் சார்பாக இந்தியாவின் நிர்ப்பந்தங்கள் எதுவும் ஏற்பட்டுவிடாதவாறு இலங்கை அரசு பார்த்துக் கொள்கிறது.

**அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் தற்போதைய அரசியல் தீர்வு யோசனைகளில் இருப்பதைவிட மேலதிகமாக வழங்குமாறு இந்தியா கூறுமானால், அதனை தட்டிக்கழிக்க முடியாமல் போகலாம். ஆகவே இந்தியா அவ்வாறு தலையீடு எதுவும் செய்யாமல் இருப்பதற்கான நல்லுறவுச் சூழ்நிலையை பத்திரமாக பாதுகாப்பதிலேயே இலங்கை அரசு கவனம் கொண்டிருக்கிறது என்பது நன்கு புலப்படுகிறது.**

"இலங்கை விவகாரத்தில் சர்வதேச மத்தியஸ்தம் அவசியப்படாது" என்று தனது இலங்கை விஜயத்தின்போது திரு. குஜ்ரால் கூறியிருந்தார். அந்தளவுக்கு இலங்கை அரசின் கருத்துக்களால் கவரப்பட்ட ஒருவராக அவர் மாறியிருந்தார்.

இலங்கை ஜனாதிபதி சந்திரிக்காவின் மீது நம்பிக்கையும், அபிமானமும் கொண்டவராகவும், இலங்கை அரசின் நடவடிக்கைகளையிட்டு திருப்தியடைந்தவராகவும் உள்ள ஒருவரே இந்தியப் பிரதமராகியிருப்பது இலங்கை அரசுக்கு உற்சாகம் தரக்கூடியதேயாகும்.

சுருக்கமாகச் சொல்வதாயின் இந்தியாவின் பிரதமராக திரு. ஐ.கே. குஜ்ரால் நீடிப்பதில் அவரைப் பிரதமராக்கிய ஐக்கிய முன்னணியைவிட இலங்கை அரசுக்கே அக்கறை அதிகமாக இருக்கிறது எனலாம். ■



# குஜ்ராலுக்கு புலிகளின் வாழ்த்துச் செய்தி!

இந்தியப் பிரதமராக திரு.ஐ.கே. குஜ்ரால் தெரிவானதும் விடுதலைப் புலிகள் வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

வழக்கமாக இவ்வாறான வாழ்த்துக்களை இயக்கம் ஒன்று தெரிவிக்கும்போது, அதன் தலைவரின் பெயரிலேயே அனுப்பப்படுவதுண்டு.

விடுதலைப் புலிகள் அனுப்பிய வாழ்த்துச் செய்தி பிரபாகரனிடம் இருந்து செல்லவில்லை. புலிகளின் சர்வதேசச் செயலகம்தான் அனுப்பியிருக்கிறது.



தமிழக முதல்வராக கலைஞர் இம்முறை பதவியேற்றபோதும் புலிகள் வாழ்த்து அனுப்பினார்கள். அதுவும் பிரபாகரனது பெயரில் அனுப்பப்படவில்லை.

முன்னாள் பாரதப்பிரதமர் இந்திரா மறைந்த பின்னர் விடுதலைப் புலிகளால் அனுப்பப்பட்ட அனுதாபச் செய்தியும், பின்னர் ராஜீவ் பிரதமரானபோது புலிகள் தெரிவித்த வாழ்த்துச் செய்தியும் பிரபாகரனது பெயரில், பிரபாகரனது கையொப்பத்துடன்தான் அனுப்பப்பட்டன.

அதேபோல, எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பின்னர் கலைஞர் தேர்தலில் வென்று முதல்வரானபோது அவரை 'உலகத் தமிழர்களின் தலைவர்' என்று வாழ்த்தி பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் இருந்து கடிதம் அனுப்பியிருந்தார்.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டு, ராஜீவ் கொலை வழக்கின் சந்தேக நபர்களில் ஒருவராக பிரபாகரனும் சேர்க்கப்பட்ட பின்னர், இந்தியாவையோ, இந்திய அரசியல் தலைவர்களையோ பாராட்டி பிரபாகரனின் வாயிலிருந்து ஒரு சொல்கூட வெளிவரவில்லை.

எனினும் இந்தியா தொடர்பான அணுகுமுறைகளில் மாற்றம் தேவை என்பதையும், இந்திய மத்திய அரசுடன் உறவு தேவை என்பதையும் புலிகள் இயக்கத்தினர் வெகுவாக உணரத்தலைப்பட்டுள்ளனர். அதனை வெளிப்படையாக உடனடியாக ஏற்றுக்கொள்வதோ, இந்திய அரசை பாராட்டுவதோ பிரபாகரனுக்கு சங்கடமான காரியம்தான்.

இந்தியப் பிரதமராக திரு நரசிம்மராவ் பொறுப்பேற்றபோதும் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவரை வெகுவாகப் புகழ்ந்திருந்தார்.

ஆனால் திரு. நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோதுதான் புலிகள் இயக்க முக்கிய தளபதிகளில் ஒருவரான கிட்டு வந்த கப்பலை இந்தியா வழிமறித்தது. கிட்டு தன்னைத்தானே அழித்துக்கொண்டார்.

இந்திய அரசு தொடர்பான கசப்பான அனுபவங்கள் காரணமாக இந்திய ஆட்சியாளர்களை நம்பக்கூடாது என்ற சொந்த முடிவில் உறுதியாக இருக்கிறார் பிரபாகரன்.

ஆனால் எந்தவொரு நாடும் தனது நலனில் இருந்தே பிறிதொரு நாட்டுப் பிரச்சினையை அணுகும். அவ்வாறு அணுகும்போது நமது நலனுக்கும் பாதகம் இல்லாமல் குறிப்பிட்ட நாட்டின் நட்பை பயன்படுத்துவதே விவேகம்.

இந்திய அமைதிப்படையோடு புலிகள் போரிட்டது தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாக அமைந்தது. ஆனால் இந்தியப்படை வெளியேறிய பின்னரும் இந்தியாவுடன் பகைமைப் போக்கை தொடர நினைத்ததுதான் புலிகள் செய்த அரசியல் தவறாக அமைந்தது.

ராஜீவ் அரசு போய் வி.பி.சிங் பிரதமராக இருந்தபோதுகூட இலங்கை கடற்பகுதியில் அத்துமீறியதாகக் கூறி இந்திய மீனவர்களை புலிகள் கைது செய்தனர். அப்போது தமிழக முதல்வராக இருந்த கலைஞர் தலையிட்டு அப்பிரச்சினை பெரிதாகாது தடுத்தார்.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல ராஜீவ் கொலை நீண்டகால அரசியல் தவறாக அமைந்தது.

இந்தியப் படையுடன் புலிகள் நடத்திய யுத்தத்தால் இந்திய மக்கள் புலிகளை வெறுக்கவில்லை. வியப்புடன்தான் நோக்கினர். ஆனால் ராஜீவ் கொலை விவகாரத்தை ராஜீவ் காந்திக்கு எதிரான இந்தியர்கள்கூட வெறுக்கவே செய்தனர்.

தற்போது ஐ.கே. குஜ்ராலுக்கு புலிகள் வாழ்த்து அனுப்புகிறார்கள். இலங்கைப் பிரச்சினையில் ஜனாதிபதி சந்திரிக்காவின்- இலங்கை அரசின் தீவிரமான நண்பரை புலிகளின் வாழ்த்துச் செய்தி கவரப்போவதில்லை.

ராஜீவ் காந்தி கொலை இல்லாவிட்டால் புலிகளும், இவ்வாறாக 'மதியாதார் வாசலை மிதிப்பது' போன்ற நிலையில் வாழ்த்து அனுப்பும் தேவை ஏற்பட்டிருக்காது.


இன்னொரு நிலவரத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். புதிய பிரதமர் ஐ.கே.குஜ்ரால் இலங்கை அரசின் நண்பராக இல்லாவிட்டாலும் கூட விடுதலைப் புலிகளை ஆதரிப்பவராக இருக்க முடியாது.

ஏனெனில் மத்திய ஆட்சியை தற்போது தாங்கி பிடித்திருப்பது காங்கிரஸ் கட்சி. ராஜீவ் காந்தியின் போர்பஸ் ஊழலை கிளரப்போய்த்தான் கவுடா பிரதமர் நாற்காலியை இழந்தார். காங்கிரஸ் கட்சியின் விருப்பத்துக்கு மாறாக உள்நாட்டிலோ, வெளிநாட்டு விவகாரத்திலோ தற்போதைய மத்திய அரசால் ஒரு அணுவைக் கூட அசைக்க முடியாது.

இந்தியாவின் இன்றைய புதிய பிரதமர் உண்மையில் ஒரு பொம்மைதான். எல்லாக் கட்சிகளையும் அனுசரிப்பதுடன், காங்கிரஸ் கட்சியின் கோபத்தை கிளறாதிருப்பதே பிரதமர் நாற்காலியை தக்கவைப்பதற்கான இராஜ தந்திரம் என்று கருதப்படுகிறது.

இந்நிலையில் காங்கிரஸ் தயவில் சவாரி செய்யும் குஜ்ராலிடம் புலிகள் தமக்கு ஆதரவைத் தேடுவது மணலில் கயிறு திரிக்கும் முயற்சிதான்.

பாரதீய ஜனதா போன்ற கட்சிகளின் அனுதாபத்தை திரட்ட புலிகள் இப்போதிருந்தே முயன்றால் அது எதிர்காலத்தில் பயனளிக்கலாம். அதாவது நேரு குடும்ப ஆதிக்கத்தை வெறுக்கின்ற கட்சிகளும், அக் குடும்ப செல்வாக்கை நம்பி வாக்கு தேடும் அவசியமில்லாத கட்சிகளுமே இந்தியாவில் புலிகளுக்கு சாதகமான



ஒரு நிலைப்பாட்டை எதிர்காலத்தில் எடுக்கக் கூடும்.

யாழ்குடாநாடு தமது கட்டுப்பாட்டில் இருந்தபோதும், சர்வதேச ரீதியான செல்வாக்கு தமது சார்பாக இருந்தபோதும் இந்திய அரசுடனான உறவு புலிகளுக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. அதனால்தான் ராஜீவை தீர்த்துக்கட்டுமளவுக்கு முடிவு எடுக்க முடிந்தது.

தற்போது சந்திரிக்கா அரசு சர்வதேச ரீதியாக செல்வாக்குப் பெற்றிருப்பதோடு, உள்நாட்டிலும் இராணுவ முஸ்தீபுகளை விடாப்பிடியாக மேற்கொள்ளும் தருணத்தில்தான் புலிகளுக்கு தமது வெளிநாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட தவறு புரியத் தொடங்கியுள்ளது. ■


படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி 42

தருவது **ரசிகன்**

## பாகம் 02

**கடந்த வாரம்**

விக்கிரம் மல்லாவின் குருவான ஸ்ரீராம் சிறையிலிருந்து விடுதலையாகி வருகிறான். அவனுக்கு பூலான்மீது கண். பூலான் அவனை வெறுக்கிறாள். தனிமையில் பூலானை கட்டியணைக்கிறான் ஸ்ரீராம். பூலான் அவனை உதைக்கிறாள். ஸ்ரீராம் என்று தெரியாமல் உதைத்ததுபோல நடிக்கிறாள்.

இனி....

ஸ்ரீராம்தான் தன்னை பின்புறமாக கட்டியணைத்தவன் என்பதை, அவனிடமிருந்து வந்த கெட்டவாசனையில் இருந்தே உடனே புரிந்துகொண்டாள் பூலான்.

அவனுக்குப் பாடம் புகட்டுவதற்காகவே அவன் கைகள் தன் முன் உடம்பில் பரவ அனுமதித்தாள். அவ்வாறு பரவ அனுமதித்தமையால் ஸ்ரீராம் உணர்ச்சிகளின் பிடியில் சிக்கிக் கொண்டான்.

பூலானின் உறுதியான உடலின் திண்மைகளும், ஏற்ற இறக்கங்களும் ஸ்ரீராமின் கைகளில் உணரப்பட்டபோது அவன் தன்நிலை மறந்துபோனான்.

எத்தகைய கொடியவனாக இருந்தாலும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதவனாகி விடுவது இயல்புதானே!

எத்தனை பலமானவனாக இருந்தாலும் பெண்ணின் உடலில் கவனம் கொண்டு தொட்டுவிட்டான் என்றால், அதற்கு அனுமதியும் எதிர்பாராமல் கிடைக்கும்போது சித்தம் கலங்கி மயங்கிப்போவான்.

ஸ்ரீராமும் அப்படித்தான் இருந்தான். அதனால்தான் பூலான்-அவன்பிடியில் இருந்த தன் உடலை முன்னால் வளைத்தும், குனிந்தும் தன் கால்களை கச்சிதமாக பின்புறமாக மடக்கியும் ஸ்ரீராமின் அடிவயிற்றின் கீழே மையமாக- அவன் உயிர்நிலையில் உதைக்க முடிந்தது.

பூலானின் குதிக்கால் மிக துல்லியமாக அவன் உயிர்நிலையில் 'நச்' என்று உதைத்தது.

பொறிகலங்கிப்போனான் ஸ்ரீராம். அப்படியே தன் இரு கைகளாலும் பொத்திக்கொண்டு, வேதனையில் முகம் விகாரமாகியபடியிருக்க, தரையில் மடங்கி ஸ்ரீராம் அமர, நிதானமாகத் திரும்பிய பூலான்:

"குருஜி நீங்களா?" என்று குரலில் போலியான பயத்துடன், போலியான பதட்டத்துடன் கேட்டாள்.

அதே நொடியில் விக்கிரம் மல்லாவும் அங்கே வந்துவிட்டதால், ஸ்ரீராம் தன் நடிப்பை நம்பினானா இல்லையா என்பதை பூலானால் அறிய முடியவில்லை.

"என்ன குருஜி, என்னாகிவிட்டது?" என்று மல்லா வந்ததும், வராததுமாய் கேட்டுக்கொண்டிருக்க, ஸ்ரீராம் வலியை மறைத்துக்கொண்டு, முக்கி எழுவதுபோல எழுந்துகொண்டு, "ஒன்றுமில்லை மல்லா, வ..வயிற்று வலி. சிறைக்கு போனபின்னர் இப்படி அடிக்கடி வருகிறது. அதுதான்... பாவம் பூலான் பயந்துவிட்டாள்..." என்றான் ஸ்ரீராம்.

வலியையும், முகத்தில் பரவிய வேதனையையும் மறைத்துக்கொண்டு ஸ்ரீராம்-மல்லாவை சமாளித்தவிதம் கண்டு பூலான் அரண்டு போனாள்.

அதுமட்டுமல்லாமல், எங்கே அவள் முந்திக் கொண்டு மல்லாவிடம் சொல்லி விடுவாளோ, என்று அவசர அவசரமாக ஒரு நரிப்பார்வையுடன் ஸ்ரீராம் சொன்ன காரணமும் பூலானுக்கு ஒரு விஷயத்தை உணர்த்தியது.

ஸ்ரீராம் தன்மீது பழிதீர்க்கப் போகிறான். அவன் ஆசையும் தீரவில்லை. வெறியும் தணியவில்லை. அதனால்தான் எதுவும் நடக்காததுபோல நடிக்கிறான். ஆக, இனித்தான் ஆபத்து அதிகமாகப் போகிறது என்று புரிந்து கொண்டாள் பூலான்.

என்ன நடந்தாலும் சரி, ஸ்ரீராமின் வெறிக்கும், ஆசைக்கும் இடம்கொடுப்பதில்லை என்று தீர்மானித்தபடியே அவ்விடத்தைவிட்டு அகன்று சொன்றாள் பூலான்.

இரவு படுக்கைக்குச் சென்றபோது மல்லா சோர்வாக கண்களை மூடிப் படுத்தபடி ஏதோ சிந்தனையில் இருப்பது போலத் தெரிந்தான். கால்கள் மட்டும் ஆடிக் கொண்டிருந்தன.

பூலான் வந்ததை அவன் கவனித்தது போலத் தெரியவில்லை. வழக்கமாக சிறு சத்தம் கேட்டால்கூட விழிப்பாகி கூர்ந்து கவனிப்பது மல்லாவின் பழக்கம்.

இன்று பூலான் வந்து அவன் பக்கத்தில் அமர்ந்தது கூட அவனுக்கு தெரியவில்லை.

அவன் நெஞ்சில் கைவைத்தாள் பூலான். பூலான் உள்ளங்கை சில்லென்று இருந்தது. அந்தச் சிலிர்ப்போடு கண்களைத் திறந்து, அவளைப் பார்த்தான்.

"ஏன் சோர்வாகக் கிடக்கிறாய்?" என்றாள் பூலான்.

அக் கேள்விக்கு பதில் சொல்லாமல் அவளிடம் சட்டென்று மல்லா கேட்ட கேள்வி பூலானுக்கே ஆச்சரியமாக இருந்தது.

"என்ன நடந்தது அங்கே?" என்று கேட்டான் மல்லா.

பூலான் மல்லாவின் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள். பின்னர் குரலில் சிறிது வெறுப்புடன், "என்ன நடந்தால் தான் உனக்கென்ன?" என்றாள்.

சடக்கென்று எழுந்த மல்லா அவள் தோள்களில் தன் கைகளை ஊன்றி அவளை உலுப்பியபடியே, அவள் கண்களைப் பார்த்துக்கொண்டு, "என்மீது நம்பிக்கை இல்லையா? சொல்லு பூலான், நம்பிக்கையில்லையா?" என்று சற்று உரக்கவே கேட்டான்.

"முன்னர் இருந்தது!" என்றாள்.

"அப்படியானால்... அப்.. அப்படியானால் இப்போது இல்லை, அதுதானே, ஏன்.... ஏன் இல்லை? ஏனடி இல்லை" என்று கத்தியவனை, விழிகளை உருட்டி முறைத்தவனை, பயம் இல்லாமல், சற்றும் பதட்டம் இல்லாமல் நோக்கிய பூலான், "உங்கள் குருஜி வந்ததும் மாறிவிட்டீர்கள்! என்னைவிட, ஏன் பரத் சிங், மாது சிங் எல்லோரையும்விட குருஜிதான் உங்களுக்கு வேண்டும். பெரிய்ய குருஜி!" என்றாள்.

உதடுகளை மடக்கி உள்வாங்கி பூலான் இகழ்ச்சிக் குறிகாட்டியபடிதான் குருஜி என்ற வார்த்தையை உச்சரித்தாள். அதிலிருந்தே ஸ்ரீராம்மீது அவளுக்குள்ள வெறுப்பைப் புரிந்து கொண்டான் மல்லா.

சிறிது நேரம் மல்லா பேசவில்லை. அவளது தோள்களில் இருந்து கைகளை எடுத்த மல்லா, அவள் கன்னங்களை தன் கரங்களில் ஏந்தி, பூலானின் உதடுகளை



பூலான்

தன் உதடுகளால் கௌவினான். ஆவேசமான அந்த முத்தத்தால் பூலானின் உதடுகள் வலித்தன.

ஆவேசம் அடங்கியவனாய், அவள் உதடுகளை விடுவித்துவிட்டு, "இப்போது புரிகிறதா?" என்று கேட்டான்.

ஈரமாகிவிட்ட உதடுகளை துடைத்தபடி "என்ன புரியவேண்டும்?" என்றாள்.

"நீ எனக்கு.. எனக்கே சொந்தமான சொத்து. புரிகிறதா என் சொத்து, என் மனைவி!"

"உங்கள் குருஜிக்கு...?" என்றாள் பூலான். மல்லாவுக்கு கோபம் வரவேண்டும் என்பதற்காகத்தான் அப்படிக் கேட்டாள். அவள் எதிர்பார்த்தது போலவே மல்லாவின் உதடுகள் கோபத்தில் துடித்தன. நெற்றி நரம்புகள் புடைத்துக்கொண்டு நின்றன. சற்று நேரம் மௌனமாக இருந்து தன்னை அமைதிப் படுத்திக் கொண்டான் மல்லா.

"பூலான்! ஸ்ரீராம் உன்னிடம் தவறாக நடக்க முற்பட்டதால் உன்னிடம் வாங்கிக் கட்டியிருக்கிறார் என்று எனக்குத் தெரியும். அதனை மறைக்க ஸ்ரீராம் சொன்ன பொய்யை நான் நம்பிவிட்டேன் என்றா நினைக்கிறாய்? ஸ்ரீராமுக்கு நான் கடன் பட்டிருக்கிறேன் பூலான், கடன்பட்டிருக்கிறேன்! அது நன்றிக் கடன்! அதற்காகத்தான் உன்னை.. உன்னை இழுத்து தன் பக்கத்தில் இருத்தியபோதும் பொறுத்துக் கொண்டேன். அப்போதே நீ அறைந்திருக்கலாம். அதுதான் எனக்குக் கோபம். அப்போது செய்யத் தவறியதை பின்னர் வட்டியோடு சேர்த்துக் கொடுத்துவிட்டாய், சந்தோசம்!"

மல்லாவை யாராலும் ஏமாற்ற முடியாது. மல்லாதான் அப்பாவியாக நடித்து ஸ்ரீராமை ஏமாற்றியிருக்கிறான் என்று பூலான் புரிந்து கொண்டாள்.

மல்லா தன்மீது காதல் மாறாமல் இருக்கிறான் என்று அறிந்ததில் பூலானுக்கு பிடிபடாத சந்தோசம்.

இந்தச் சந்தோசம் நிலைக்க வேண்டுமானால் ஸ்ரீராமுக்கு எப்படியாவது முடிவு கட்டியாக வேண்டும் என்று நினைத்தாள்.

தன்மீதுள்ள ஆசையால் ஸ்ரீராம் சதி செய்து மல்லாவைக் கொன்றுவிடுவானோ என்றும் சட்டென்று ஒரு யோசனை பூலானின் மனதில் எழுந்தது.

அந்தச் சிந்தனை எழுந்ததும் பூலான் பயந்துபோனாள். "அய்யோ துர்க்கையம்மா, அப்படி எதுவும் நடக்கவிடாதே. அப்படியான சிந்தனை எதுவும் ஸ்ரீராம் மனதில் எழவிடாதே!" என்று மனதுக்குள் மன்றாடினாள்.

"என்ன யோசிக்கிறாய் பூலான், உன்னை யார் தொட்டாலும் எதிர்த்துப் போராடு. அடி, உதை, தேவைப்பட்டால் சுடு! அது உன் உரிமை, புரிகிறதா உன் உரிமை!"

"உன் குருஜியையுமா?"

"யார் அத்துமீறினாலும், யார் தப்புச் செய்தாலும் தண்டனை ஒன்றுதான்!" என்று மல்லா சொன்னபோது பூலானால் தன் மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அப்படியே மல்லாமீது சரிந்து அவனை இறுகக் கட்டிக்கொண்டாள். மல்லாவை கன்னத்திலும், உதட்டிலுமாய் மாறி மாறி முத்தமிட்டாள். அப்படியே மல்லா தரையோடு மல்லாந்து சாய, பூலான் மல்லாமீது அமர்ந்துகொண்டாள்.

தன்மீதிருந்த பூலானை மல்லா அணைத்துக் கொண்டான். பூலான் மல்லாவின் மார்பில் கன்னத்தை வைத்துக்கொண்டு படுத்திருக்க, மல்லாவின் கைகள் மிகவும் சுதந்திரமாக அலைய ஆரம்பித்தன. நெளிந்த பூலான் மல்லாவின் நெஞ்சில் முகம் புரட்ட, மல்லா உணர்ச்சிகளின் பிடியில் முழுமையாகச் சிக்கிக்கொண்டவனாக, பூலானை தோள்களில் பிடித்து நிமிர்த்தினான்.

மல்லா கண்களின் கிறக்கத்துடன் பூலானின் சட்டைப் பொத்தான்களுக்கு விரல்களால் விடைகொடுக்க ஆரம்பித்தான். பூலான் அனுமதித்தாள். முன்னே சரிந்து ஒத்துழைத்தாள்.

பூலானும், மல்லாவும் உணர்ச்சிகளின் சங்கமத்தில் சிக்கி இருக்க, அவர்களை இருளோடு இருளாக, சாளர வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தன ஒரு ஜோடிக் கண்கள்.

அந்தக் கண்களுக்குரியவன் ஸ்ரீராம். மூச்சுவிடக்கூட மறந்து அக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மல்லாவை அவனால் பார்க்க முடியவில்லை. மல்லாமீதிருந்த பூலானின் வெற்று முதுகும் அதன் அசைவும்தான் ஸ்ரீராமின் கண்களுக்குத் தெரிந்தது.

"பூலான்.. பூலான்" என்று மல்லா குரல் குழைய முணு முணுப்பதும், பூலான் மூச்சிரைப்பதும்.. எல்லாம்.. எல்லாமே ஸ்ரீராமின் நெஞ்சில் பொறாமைத் தீயை விசிறி விசிறி கொளுந்து விட்டெரியச் செய்தன.

பற்களை நறநறவென்று கடித்தபடி சாளரத்தைவிட்டு விலகிச் சென்றான் ஸ்ரீராம். அவன் இதயத் துடிப்பு ஏறியிருந்தது. உடம்பெல்லாம் நெருப்புத் துண்டுகளை வாரிக் கொட்டியது போல தகித்தது.

அந்தத் தருணத்தில்தான் ஸ்ரீராம் முடிவு செய்தான்: 'மல்லா சாக வேண்டும், பூலான் எனக்குச் சொந்தமாக வேண்டும்!'

மல்லாவுக்கு தன் கூட்டத்தில் நல்ல பெயர் இருப்பதால் அவனைக் கொல்லுவதற்கு ஒரு காரணம் தேவை. காரணத்தை உருவாக்கும்வரை பொறுத்திருப்பது என்று முடிவு செய்தான் ஸ்ரீராம்.

தான் கண்ட காட்சியையும், பூலானின் சரசத்தையும் மறக்கமுடியாமல் அன்று இரவு முழுக்க தூக்கமில்லாமல் கிடந்தான் ஸ்ரீராம். அப்படிக் கிடந்தபோதே மல்லாவை கொல்லும் திட்டத்தைப்பற்றியும் தீவிரமாக யோசித்துப் பார்த்தான்.

மறுநாள் காலையில் ஸ்ரீராமையும், லாலா ராமையும் காணாத பூலான், அவர்கள் எங்கே என்று மல்லாவிடம் கேட்டாள்.

அன்று பூலான் எழுவதற்கு நேரமாகிவிட்டது. அசதிதீர தூங்கித்தான் எழுந்தாள்.

"இருவரும் தங்கள் குடும்பத்தைப் பார்க்கப் போயிருக்கிறார்கள். ஸ்ரீராமிடம் பத்தாயிரம் ரூபா கொடுத்திருக்கிறேன். அதனால் திரும்பி வர சில நாட்கள் ஆகலாம். நாளை நாமெல்லாம் ஓரிடத்துக்குச் செல்லப் போகிறோம்... எங்கே என்று தெரிந்தால் நீ துள்ளிக் குதிப்பாய்!"

என்றான் புன்னகைத்தபடி மல்லா.

அறியும் ஆவலில் விழிகளை விரித்த பூலான், மல்லா அருகில் நின்ற மாது சிங்கிடம் "மாது நீ சொல்லு! எங்கே போகப் போகிறோம்?" என்றாள். மாது சிங் புன்னகைத்தானே தவிர பதில் சொல்லவில்லை.

பூலானுக்கு எரிச்சலாக இருந்தது.

"எங்காவது போய்விட்டு வாருங்கள், நான் வரமாட்டேன்!"

"வரமாட்டாய்?"

"ம்... மாட்டேன்!"

"வருவாய். நான் தடுத்தாலும் வருவாய்! ஏனென்றால் அங்கே உனக்கு வேலை இருக்கிறது. வேட்டை இருக்கிறது!"

பூலான் அவனை சந்தேகமாகப் பார்த்தபடி "எங்கே போகிறோம்?"

மல்லா அவளையே பார்த்தபடி

"மகேஸ்பூருக்கு!"

என்றதும் பூலானின் முகமே மாறிவிட்டது. இதுவரை இருந்த சாந்தம் எல்லாம் மறைந்து முகம் இறுகி முரட்டுத்தனம் தெரிந்தது.

தன் கொடுமைக்கார கணவன் புத்திலாலிடம் மகேஸ்பூரில் பட்ட அனுபவங்கள் எல்லாம் பூலானின் மனதில் எழுந்தன.

"நாளைக்கு எதற்கு; இன்றே புறப்படலாமே!" என்ற பூலானின் குரலில் பழிவாங்கும் உணர்ச்சி நிறைந்து கிடந்தது.

**(தொடர்ந்து வரும்)**

---

# "அசாரை இனி ஏற்கமாட்டேன்!"

## முன்னாள் மனைவி நவ்ரீன் உறுதி

அசாருதீன்-சங்கீதா பிஜ்லானி (ஆமிஷா) இருவரும் சந்தோசமாக இருக்கின்றனர். எங்கு விழாக்கள், கேளிக்கைகள் நடந்தாலும் ஒன்றாகவே செல்லுகின்றனர்.

சரி, அசாருதீனின் முன்னாள் மனைவி நவ்ரீன் என்ன செய்கிறார்? என்று தெரியுமா? "மீதி இருக்கும் வாழ்நாளில் யாரையும் சார்ந்திருக்காமல், யாருடைய புகழிலும் குளிர் காயாமல் வாழுவேன்!" என்று நம்பிக்கையுடன் கூறுகிறார். கவலைகளை மூட்டைகட்டி ஓரத்தில் போட்டுவிட்டு உற்சாகமாக இருக்க முயன்று கொண்டிருக்கிறார்.

தனது 17 வயதில் 1987ல் அசாருதீனை மணந்தவர் நவ்ரீன். அவரும் அழகிதான். குடும்ப வாழ்க்கை சந்தோசமாகவே சென்றது. இரண்டு ஆண் குழந்தைகளும் இருக்கிறார்கள்.

நவ்ரீன் அழகாக இருந்தாலும் சில விஷயங்களில் கட்டுப்பெட்டித்தனமாக இருந்தார். கிரிக்கெட் போட்டிகளைக் காணக்கூட வெளியே செல்வது குறைவு. அசாரின் எதிர்பார்ப்புக்களை நவ்ரீனால் ஈடுசெய்ய முடியவில்லையா? அல்லது அசாரின் எதிர்பார்ப்பு அதிகமா? என்பதுதான் புதிர்.

சமீபத்தில் நவ்ரீன் அளித்துள்ள பேட்டி ஒன்றில், சில விஷயங்களை மனம் திறந்து சொல்லியிருக்கிறார். பேட்டியிலிருந்து சில பகுதிகள்:

**கே: உங்கள் குடும்ப வாழ்க்கையில் பிளவு ஏற்பட என்ன காரணம்?**

ப: திடீரென்று அசார் ஆளே மாறிப்போனார். ஏன் என்று எனக்குள்ளே கேள்வியை எழுப்பினேன். அவருக்கு புதிய வாழ்க்கை முறை, புதிய நண்பர்கள் ஏற்பட்டார்கள். அந்த விஷயத்தில் நான் தகுதியில்லாத மனைவி என்று நினைத்திருக்கலாம்.

கணவர் கிரிக்கெட் விளையாடும்போது மனைவி பெரிய குளிர் கண்ணாடியை அணிந்து கொண்டு பந்தாவாக விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருப்பார். அதைத்தான் ரீ.வி.கமராவில் காட்டுவார்கள் என்பது அசாரின் எண்ணம். நான் ஒருபோதும் கிரிக்கெட் பார்க்கச் செல்லமாட்டேன். இப்போது எல்லாப் போட்டிகளிலும் சங்கீதா பார்வையாளராக இருக்க வேண்டும் என்று அசார் வற்புறுத்துகிறாராம்.



**கே: உங்கள் கண்ணோட்டத்தில் அசார் இப்போது எப்படி இருக்கிறார்?**

ப: முன்பு பெண்களைப் பார்த்தாலே பேசக் கூச்சப்படுவார். இப்போது அப்படியே தலைகீழாக மாறிவிட்டார்.

**கே: மீண்டும் அசார் வந்தால் ஏற்றுக் கொள்வீர்களா?**

ப: மாட்டேன்.

**கே: நீங்கள் மீண்டும் திருமணம் செய்து கொள்வீர்களா?**

ப: இப்போது அதைப்பற்றி யோசிக்கவில்லை. அசார் விவாகரத்து செய்த செய்திகள் என்னையும் பிரபலமாக்கி விட்டது. முதலில் அச் செய்திகள் ஒரு முடிவுக்கு வரட்டும். இனி ஒருவரை நான் முழுமையாக அறிந்த பின்பே திருமணத்திற்குத் தயாராவேன்.

**கே: குழந்தைகளைப் பற்றிய எண்ணம் அசாருக்கு ஏற்படாதா?**

ப: அசார் எப்போதுமே நல்ல தந்தையாக நடந்துகொண்டதில்லை. குழந்தைகளை தன்னுடன் நெருங்க விடாமல்தான் நடந்து கொள்வார்.

என்னதான் உறுதியாகப் பேட்டி அளித்தாலும் மனதின் ஓரத்தில் சோகம் இல்லாமல் இல்லை. "என் அன்பையும், நம்பிக்கையையும் அசார் ஏமாற்றிவிட்டார்!" என்று நவ்ரீன் சொல்லும்போது அந்தச் சோகம் எட்டிப்பார்க்கிறது.

---

# எயிட்ஸ் பரப்பும் காதல் மன்னன்

எயிட்ஸ் நோய் இருப்பவர்கள் தங்கள் மரணத்தை எதிர்பார்த்து நடுங்கிக் கொண்டிருப்பார்கள்; முடங்கிக் கிடப்பார்கள் என்றெல்லாம் நினைப்பது தப்பு.



'எய்ட்ஸ்' நோய் கண்டசில ஆண்களுக்கும், பெண்களுக்கும் மனதில் ஒரு வக்கிரம் வந்துவிடுகிறது. தங்களுக்கு எய்ட்ஸ் பரப்பியவர்களைப் பழிவாங்க முடியாத ஆத்திரத்தில், தம் வலையில் விழக்கூடியவர்களைப் பழிவாங்கக் கிளம்பிவிடுகிறார்கள்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்கு சில வெளிநாட்டுப் பயணிகள் எய்ட்ஸ் நோயுடன் வருகிறார்கள். பணத்தைக் கொடுத்து தங்களுக்கு தற்காலிக ஜோடி தேடுகிறார்கள். எய்ட்ஸையும் கொடுத்து விட்டுப் போய்விடுகிறார்கள்.

'எய்ட்ஸ் வந்ததுதான் வந்தது சாவதற்கு முன் முடிந்தவரை அனுபவிப்போம் என்ற அடங்காத ஆசையும் எய்ட்ஸ் நோயாளிகள் ஜோடிதேடக் காரணம்.

எய்ட்ஸ் பரப்பும் மன்னனாக சமீபத்தில் பிரபலமாகியிருப்பவன் பொலஸ் ஜோர்ஜி. சைப்பிரஸ் நாட்டைச் சேர்ந்தவன். இவனது முன்னைய தொழில் மீன்பிடித்தல்.

கடற்கரைக்கு உல்லாசமாக வரும் அழகிகள் ஜோர்ஜியின் கட்டான உடலுக்கு அடிமையாகினர். அவ்வாறு அடிமையான ஒரு அழகி மூலம்தான் ஜோர்ஜிக்கு 'எய்ட்ஸ்' தொற்றியதாம்.

தனக்கு 'எய்ட்ஸ்' இருப்பது உறுதியானதும் பெண்களைப் பழிவாங்கும் சபதத்தோடு களத்தில் இறங்கினான் ஜோர்ஜி. இவனால் எத்தனை பெண்கள் 'எய்ட்ஸ்' தானமாகப் பெற்றார்கள் என்ற புள்ளி விபரம் சரியாகத் தெரியவில்லை. ஆனால் ஜெனட் பிங்க் என்னும் 35 வயதுப் பெண்மணி மட்டும், துணிச்சலாக இவன் மீது வழக்குத் தொடுத்திருக்கிறாள்.

'நான் மரணமாகுமுன்னர் ஜோர்ஜியை பழிவாங்கியே தீருவேன்!" என்று தீர்ப்பை எதிர்பார்க்கிறார் ஜெனட் பிங்க். ஆனால் தெரிந்து கொண்டே 'எய்ட்ஸ்' பரப்பினால் என்ன தண்டனை என்று சட்டம் இல்லாததால் நீதிமன்றம் முடியைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது.

மற்றொரு அதிர்ச்சிகரமான தகவல்: ஜோர்ஜியின் மனைவிக்கும் அவர் மூலம் 'எய்ட்ஸ்' பரவியிருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

---


# இரும்பு மனிதரின் இனிய யோசனை

கியூபாவில் புரட்சி நடத்தி ஆட்சியை கைப்பற்றியவர் ஃபிடல் காஸ்ட்ரோ. கெரில்லா யுத்தத்திலும் கில்லாடியாக இருந்தவர். கியூபாவின் இரும்பு மனிதராக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார் காஸ்ட்ரோ. அமெரிக்காவுக்கே தண்ணி காட்டிக் கொண்டிருப்பவர்.

காஸ்ட்ரோவுக்கு இப்போது 70 வயது. இந்த வயதிலும் அழகான பெண்களைக் கண்டால்போதும் இருபது வயது இளைஞராகிவிடுகிறார் மனுசர். ஆனால் ஒன்று தன்னுடைய ரசனை பற்றி ஒளிவு மறைவு இல்லாமல் ஒப்புக்கொள்கிறார் காஸ்ட்ரோ.

"இப்போதும் அழகான பெண்களைக் கண்டால் கிறங்கிப்போகிறேன். காதல் வலையில் மாட்டிக்கொள்கிறேன்" என்கிறார் கில்லாடிக் கிழவாலிபரான காஸ்ட்ரோ. அது மட்டுமல்ல இளம் பெண்களுக்கு ஒரு ஐடியாகவும் கொடுத்திருக்கிறார்.

"உங்கள் காதலனை மிகவும் காதலிப்பதாக காட்டிக் கொள்ளாதீர்கள். கொஞ்சம் அலட்சியமாக இருங்கள். அப்போதுதான் நீங்கள் கிடைக்காமல் போய்விடுவீர்களோ



என்று கவலைப்படுவார்கள். உங்கள் பின்னால் அலைவார்கள்" என்கிறார். புது அகராதிப்படி சொல்வதானால் ஆண்கள் ஜொள்ளு விட்டும் நீங்கள் விடாதீர்கள் என்கிறார் காஸ்ட்ரோ.



படிப்பகம்

www.padippakam.com



## ↑ நீளமென்றால் நீளம்தான்

ஜெர்மனியின் ஹம்பர்க் மிருகக் காட்சிச்சாலையில் கமரா சுட்ட படம் இது. படத்தில் இருப்பது வால்ரஸ் என்னும் விலங்கு. அளக்கப்படுவது அதன் பல்லு. பல்லின் நீளம் 66 சென்ரிமீட்டர். பயங்கர நீளம்தான். வால்ரஸ் பற்றி ஒரு தகவல்; கடல் நாய்களில் ஒருவகை இது. (20ம் பக்கத்தில் உள்ளது மற்றொரு வகை) வால்ரஸ் வட துருவத்திற்கு அருகிலுள்ள குளிர்ப் பிரதேசங்களில் தான் அதிகமாகக் காணப்படும்

**தகவல் பெட்டி**

## அலட்சியத்தால் ஏற்பட்ட அபாயம்



→ 'யானைக்கால்' நோய் என்பது எத்தனை கோரமானது என்பதற்கு உதாரணம் ரேவதி. மூன்று ஆண்டுகளுக்கு முன்புவரை கணவருடனும் மூன்று குழந்தைகளுடனும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தார். நான்காவது குழந்தை பிறந்தபோதுதான் ரேவதியின் காலில் சில கட்டிகளும், வீக்கங்களும் உண்டாகத் தொடங்கின. சாதாரண கட்டிதானே நாளடைவில் குணமாகிவிடும் என்று அலட்சியமாக இருந்ததுதான் ரேவதி செய்த மகா தவறு.

இரண்டு ஆண்டுகளுக்குள் கால் பெரிதாகிப் போனது. 65 கிலோவில் கட்டான உடல்வாகுடன் இருந்தவரின் எடை 140 கிலோவாகக் கூடியது.

உடல் வலி ஒரு புறம், உள்ளத்தின் வேதனை மறுபுறம், ரேவதி தவித்துப்போனார். வலது காலைத் துண்டித்துவிட்டால்தான் நோய் தீரும் என்றனர் மலேசிய மருத்துவர்கள். ரேவதி மலேசியாவைச் சேர்ந்தவர்.

காலைத் துண்டிப்பதா? கலங்கிப் போனார் ரேவதி. அப்போதுதான் தமிழ் நாட்டில் உள்ள யானைக் கால்நோய் நிபுணர் பேராசிரியர் எஸ். ஜமாலைப் பற்றி யாரோ சொன்னார்கள். உடனே அவருடன் தொடர்பு கொண்டார்.

"இதனைவிட மோசமான யானைக்கால் வியாதியை எல்லாம் குணப்படுத்தி இருக்கிறேன். இது எம்மாத்திரம், கவலையே படாதீர்கள்" என்றார் ஜமால். நெஞ்சில் பால்வார்த்த மாதிரி மகிழ்ந்தார் ரேவதி.

ஆனால் தமிழ்நாட்டுக்குச் சென்று தங்கியிருந்து வைத்தியம் பார்ப்பது என்றால் 30 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் (நம்மூர்ப் பெறுமதிப்படி 17 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்கள்) செலவாகும் என்பது மற்றொரு இடியான செய்தியாகியது.

ஆனாலும் நம்பிக்கை தளராமல் முயற்சி செய்தார். ரேவதியின் வீடு இருக்கும் பகுதியைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஏழைகள், ஆனால் பணமில்லாவிட்டாலும் நிறைவான மனம் உள்ளவர்கள். அவர்கள் தம்மால் முடிந்த பண உதவியை செய்து ரேவதியின் மருத்துவச் செலவுக்கு கொடுத்திருக்கிறார்கள்.

விரைவில் தமிழ்நாடு சென்று சிகிச்சை பெறப்போகிறார் ரேவதி. 27 வயதான ரேவதி மீண்டும் பழைய ரேவதியாகி மகிழட்டும் என்று நாமும் வாழ்த்துவோமே!

சிறிய நோய்கள் என்று அலட்சியம் செய்து நோய் பெரிதாக இடமளிப்போருக்கும் இது ஒரு எச்சரிக்கை மாதிரித்தான்.

## திமிங்கிலத்தைக் கட்டிக்கோ



→ 'சுண்டைக்காய் காற்பணம், சுமைகூலி முக்காற் பணம்' என்பதற்கு பொருத்தமான சம்பவம் இது. அவுஸ்திரேலியாவின் குயின்ஸ் மாநிலத்தில் உள்ள தங்கக் கடற்கரைப் பகுதியான 'கோல்யும்' கடற்பகுதியில்தான் இக் காட்சி 'கிளிக்' செய்யப்பட்டது. இராட்சத திமிங்கிலத்தை கட்டி இழுத்து கொண்டு செல்கிறார்கள். நல்ல வேட்டைதான் என்று நினைத்துவிடாதீர்கள். பெரிய மீன்களைப் பிடிக்க விரித்திருந்த வலைகளில் இந்த இராட்சத திமிங்கிலம் சிக்கிக் கொண்டது. பெரிய சுறா மாட்டியிருப்பதாக நினைத்து வலையை சிறு கப்பலில் கட்டி கரைக்கு கொண்டு வந்தனர். அப்போதுதான் மாட்டியது திமிங்கிலம் என்று தெரிந்தது. நியாயமாகப் பார்த்தால் மீனவர்கள் துள்ளிக் குதிக்க வேண்டும். ஆனால் அவர்களோ திமிங்கிலம் என்றதும் சோர்ந்து போனார்கள்.

சர்வதேச சட்டப்படி திமிங்கிலத்தை வேட்டையாடக் கூடாதல்லவா. எங்கே சட்டம் பாய்ந்துவிடுமோ என்ற பயத்தில் திமிங்கிலத்தை மீண்டும் ஆழ்கடலுக்கு இழுத்துச் செல்லும் காட்சிதான் இது. கிட்டத்தட்ட ஏழு மணி நேரம் பாடாய்ப்பட்டு ஆழ்கடலுக்குள் விட்டு வந்தனராம். என்ன பழமொழி ஓ.கே யா?!.



## ஓடவைக்கும் ஆயுதம்

↑ இந்த மாண்புமிகு பொலிஸ்காரர்களுக்கு பாம்பு பிடிக்கும் வேலை ஏன்? என்கிறீர்களா?!. இவர்கள் பாம்பு பிடிக்கும் பொலிஸ்காரர்களல்ல, பாம்பு விடும் பொலிஸ்காரர்கள்.

குண்டாந்தடி, கண்ணீர் புகைக் குண்டுகள், துப்பாக்கிகள் என்பவைதான் பொலிஸாரின் ஆயுதங்கள். ஆனால் இந்தோனேசியா நாட்டுப் பொலிசாருக்கு சாரைப் பாம்புகளும் ஒரு ஆயுதம். எப்படித் தெரியுமா? கலகம் செய்யும் கூட்டத்தாரை கலைந்து போகச் சொல்லுவார்கள். அவர்கள் மாட்டோம் என்று அடம் பிடித்தால் பாம்புகளை தூக்கி கூட்டத்தினர் மத்தியில் வீசிவிடுவார்கள். அவ்வளவுதான் கூட்டம் சிதறி ஓடிவிடும். 'பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்' என்ற தமிழ்ப் பழமொழியை அவர்களுக்கு யார் சொன்னது?!




## புல்தரையை முத்தமிட்ட விமானம்

← விமானச் சக்கரம் ஒன்று பொறுத்த நேரத்தில் வெளியே வராமல் முரண்டு பிடித்ததால் சில மாதங்களுக்கு முன்னர் நம்நாட்டிலும் அன்ரனோவ் ஒன்று விபத்தானது. அதேபோல ஒரு விபத்துத்தான் இதுவும். 14 பயணிகளுடன் நியூசிலாந்து விமான நிலையத்தின் ஒரு பாதையில் இறங்க முற்பட்டது இந்த விமானம். சக்கரம் உள்ளேயே சுருண்டு கிடந்தது. வெளியே நீளவே இல்லை. விமானி சமயோசிதமாக செயற்பட்டு அருகிலுள்ள மெத்தென்ற புல் தரையில் விமானத்தை தரையிறக்கினார். அதனால் 14 பயணிகளுடன் பத்திரமாகத் தப்பியது இந்த விமானம். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சு!

www.padippakam.com

# மினி சினி

* தமிழில் வெளியான அதே தினத்தில் தெலுங்கிலும் வெளியாகியிருக்கிறது ரஜினியின் 'அருணாச்சலம்'. தெலுங்கில் ரஜினிக்குக் குரல் கொடுத்திருப்பவர் யார் தெரியுமா? பின்னணிப் பாடகர் மனோ.

* தமிழில் படவாய்ப்புக்கள் எதுவுமின்றி இருக்கும் சுகன்யா, மலையாளத்தில் மோகன்லாலுக்கு ஜோடியாக 'சந்திரலேகா' என்றபடத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். முதலில் இந்த வேடத்தில் நடிக்க இருந்த சோபனாவை நீக்கியுள்ளார்கள்.

* ராமராஜன்-சங்கீதா ஜோடியாக நடிக்க 'ராமர்படை' என்ற படத்தைப் படு அமர்க்களமாகத் துவக்கினார்கள். இப்போது அப்படத்தைக் கிடப்பில் போட்டு விட்டார்கள்.

* குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி 'பிரியம்' மூலம் கதாநாயகியாகியுள்ளவர் மந்த்ரா. தற்போது 'தேடினேன் வந்தது', 'பெரிய இடத்துமாப்பிள்ளை' உட்பட பல படங்களில் நடித்து வரும் இவர் முதன் முறையாக 'லவ்டுடே' படத்திற்காக சொந்தக்குரலில் வசனம் பேசியுள்ளார்.

* பாரதிராஜாவிடம் உதவியாளராக இருந்து இயக்குநரானவர் மணிவண்ணன். இவரை 'கொடிபறக்குது' படத்தில் நடிகராக அறிமுகமாக்கியவரும் பாரதி ராஜாதான். இப்போது மணிவண்ணன், பாரதி ராஜாவின் இயக்கத்தில் 'சிறகுகள் முறிவதில்லை' படத்தில் நடிக்கிறார்.

* பாக்யராஜ் இயக்கி நடிக்கும் 'வேட்டிய மடிச்சுக்கட்டு' படத்தில் கன்னட நடிகர் சாய்குமார் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இவர் 'பொலிஸ் ஸ்டோரி' என்ற மொழிமாற்றுப் படத்தில் கதாநாயகனாக நடித்தவர்.

* தமிழில் 'ஒரு புல்லாங்குழல் அடுப்பு ஊதுகிறது' உட்பட பல படங்களை வழங்கியவர் மௌலி. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இவர் 'பிஸ்தா' படத்தில் நக்மாவிற்கு தகப்பனாக நடிக்கிறார்.

* ஷங்கரிடம் உதவியாளராக இருந்த காந்தி கிருஷ்ணா, கமலை வைத்து 'பிதா மகன்' என்ற படத்தை இயக்குவதாக இருந்தது. இப்போது கமலுக்குப் பதில் நாகார்ஜுன் அந்தப்படத்தில் நடிக்கவுள்ளார்.

* 'வாணிமஹால்' படத்தில் இசையமைப்பாளர் தேவா முதன் முறையாக நடிக்கிறார் என்பது அறிந்த செய்தி. இவரைத் தொடர்ந்து இசையமைப்பாளர் சிற்பியும் 'கங்காகவுரி' என்ற படத்தில் நடிக்கவுள்ளார்.

* தெலுங்குப் படங்களில் பிஸியாக நடித்து வரும் கஸ்தூரி முதன் முறையாக நாகார்ஜுனுக்கு ஜோடியாக நடிக்கவுள்ளார். இப்படத்திற்கு 'அன்னம்மா' என்று பெயரிடப்பட்டுள்ளது.

# சினிமா உலக இரகசியங்கள்

## கார் டிக்கியில் மறைந்து சென்ற நடிகை

**சினிமா உலகில் பிரபலமான சிலரின் மறுபக்கம் இது. தமிழக பிரபல பத்திரிகை ஒன்றில் மித்ரவாசு என்பவர் எழுதியுள்ள தகவல்களில் சுவாரசியமானவற்றை உருவித் தருகிறோம். உங்களுக்குப் புரிவதற்காகச் சில மாற்றங்கள் மட்டும் செய்யப்பட்டுள்ளன.**

தமிழ்த் திரையுலகில் முன்னணியில் உள்ள ஏழு நடிகர்களில் ஒருவர் அவர். சினிமாவிலும், நிஜத்திலும் தன்னை வீரராகக் காட்டிக் கொண்டு வருபவர். இவர் நடித்த படத்தின் படப்பிடிப்பு கோல்கொண்டா கோட்டையில் நடந்தது. அருகில் ஒரு வீட்டிலும் படப்பிடிப்பு நடந்தது. அந்த வீட்டின் உரிமையாளர் வெளிநாட்டில் இருக்கிறார். மனைவிதான் வீட்டு நிர்வாகம். நல்ல அழகி. அந்த நடிகரின் ரசிகையாகவும் அவர் இருந்தார்.

படப்பிடிப்பில் கலந்து கொண்ட நடிகருக்கு கேட்டுக் கேட்டு உதவிசெய்தார் ரசிகை. நடிகர் வேறு ஒரு கணக்குப் போட்டார். ரசிகை தனக்கு இணங்குவாரா என்று தெரியாமல் தவித்தார்.

படப்பிடிப்பு முடியும் நாள் நெருங்க நெருங்க தவித்துப் போனார் நடிகர். தனது எண்ணத்தை தயாரிப்பாளரிடமும் கூறினார். தயாரிப்பாளரும் உதவுவதாகச் சொன்னார்.

படப்பிடிப்பு முடியும் நாள் அன்று நடிகருக்கு விருந்து தர விரும்புவதாகச் சொன்னார் ரசிகை. நடிகருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. "விதம் விதமாகச் சாப்பிடுவதில் நடிகர் மன்னர்" என்றார் ரசிகையிடம் தயாரிப்பாளர்.

ரசிகையும் விதம் விதமாக சமைத்துப் போட்டார். நன்றாகச் சாப்பிட்ட நடிகர் களைப்பாக இருப்பதாக ரசிகையின் படுக்கை அறைக்குள் சென்றார்.

படுக்கையை ரசிகை சரிசெய்து கொண்டிருந்தபோது, அவரது கையைப் பிடித்தார் நடிகர்.

"என்ன வேண்டும்?"

"நீதான் வேண்டும்"

"அப்படியென்றால்?"

"இனி விருந்து உன்னோடுதான்!"

வெடுக்கென்று கையை இழுத்துக் கொண்ட ரசிகை "சே.... சே.... என்ன ஆசை இது? உங்கள் நடிப்பின்மீதுதான் எனக்கு மதிப்பே தவிர உங்கள்மீதல்ல. உங்களுக்கு உதவி செய்ததை பெருமையாக நினைத்தேன். எல்லாம் வீணாகிவிட்டது. இனியாவது நல்லவராக நடந்து கொள்ளுங்கள்." என்று கண்கலங்கியபடி கூற நடிகரின் முகம் ஏக கோணலாகிவிட்டது. எப்படி வெளியே வ[...] என்பது அவருக்கே தெரியவில்லை.

### கார் டிக்கியில் நடிகை

திருமணத்தின் பின் நடிப்பதை நிறுத்திவிட்டு கணவ[...] அமெரிக்கா சென்ற நான்கெழுத்து 'அம்பி' நடிகை அங்கு[...] குழந்தையும் பெற்றுக் கொண்டார். இப்போது மீண்டும் [...] வந்துள்ளார். இவர் முன்னர் நடித்துக்கொண்டிருந்தபோது ஒவ்[...] மொழிப் படவுலகிலும் ஒரு கதாநாயகரை இரட்சகராக வைத்திரு[...] தமிழில் ஒரு சில ஹீரோக்கள் தவிர எல்லோருடனும் கிசுகி[...] பட்டவர். முன்னணி ஏழு நடிகர்களில் நால்வர் அதில் அட[...]

இந்த நடிகை முன்றெழுத்து வாரிசு நடிகருடன் ப[...] கிசுகிசுக்கப்பட்டபோது ஒருநாள் நடிகை, நடிகரின் கார் டிக்[...] ஏறிச் சென்றார். அதெல்லாம் நடிகைக்கு சாதாரண விஷய[...]

நடிகையின் தங்கை அக்காவுக்கு நேர் எதிர். எத்தனை[...] ஹீரோக்கள் முயன்று பார்த்தும் படியாதவர். முதல் பட கதாநா[...] மட்டும் (காதல் அலைகள் ஓய்வதில்லை என்று) காதலித்தவர் [...] பின்னர் மலையாளத்தில் நடிக்கச் சென்றபோது அங்குள்ள [...] நாயகர் ஒருவரைக் காதலித்தார். அதை அறிந்த தாயார் நடி[...] வேறொரு மணமகன் பார்த்து திருமணம் செய்து வை[...] காரணம் குறிப்பிட்ட நடிகரின் தந்தையாருடன் நடிகையின் [...] நட்பாக இருந்தவராம்.



விநீத்-சாக்ஷி
படம்: கண்மணி ஒரு கவிதை

# இயக்குநர்களின் பாடல்

இராம நாராயணன் இயக்கத்தில் செல்வா நடிக்கும் படம் 'நாட்டுப்புற நாயகன்'. இப் படத்தின்மூலம் பாடலாசிரியர்கள் வயிற்றில் புளியைக் கரைக்கிறார்கள் இயக்குநர்கள். படத்தில் வரும் ஆறு பாடல்களையும் ஆறு இயக்குநர்களை ,எழுத வைத்திருக்கிறார் இராம நாராயணன். அப்படி என்னதான் கோபம் பாடலாசிரியர்கள்மீது?

ஆர்.வி.உதயகுமார், அகத்தியன், கஸ்தூரிராஜா, கங்கை அமரன், ஆர்.சுந்தர்ராஜன், சேரன் ஆகியோரே பாடல் எழுதும் ஆறுபேர். இவர்களில் கவிஞர் வாலியுடன் ஏற்பட்ட மோதலால் பாடல் எழுதத் தொடங்கிய இயக்குநர் ஒருவர் இருக்கிறார். அவர் 'காதல் கோட்டை' புகழ் அகத்தியன்.

### முகப்பில்

அரவிந்தசாமி
படம்-புதையல்

சுகன்யா
படம்-கோபுர தீபம்



ரஜினி-ரம்பா
படம்: அருணாச்சலம்

# அருணாச்சலம் பட விமர்சனம்

கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களின் பின்னர் வெளிவந்துள்ள ரஜினி படம். கதை முன்கூட்டியே முரசு சினி விசிட்டில் உங்களுக்கு சொன்ன அதே கதைதான். ரஜினியின் தந்தை வேதாச்சலம் (அதுவும் ரஜினிதான்) பெரிய கோடீஸ்வரர். சந்தர்ப்பவசத்தால் ரஜினியின் அம்மாவைப் பிரிகிறார். ரஜினியின் தாயாரோ தன் பிள்ளையை ரவிச்சந்திரன் தம்பதியிடம் கொடுத்துவிட்டு உயிர்விடுகிறார்.

ரவிச்சந்திரன் தம்பதியின் பிள்ளையாக நினைத்து வளரும் ரஜினிக்கு, ரவிச்சந்திரனின் தாயாரான வடிவுக்கரசி மூலம் உண்மை தெரியவருகிறது. அதிர்ச்சியுடன் வீட்டை விட்டு வெளியேறுகிறார். பின்னர் வேலை தேடிப்போன[...] தில் விசுவைச் சந்திக்க, ரஜினி கோடீஸ்வரர் பிள்ளை என்று தெரிகிறது. சொத்து [...] என்கிறார் ரஜினி. ஆனால் ரகுவரன், வி.கே. ராமசாமி, கிட்டி, நிழல்கள்ரவி கோ[...] அமுக்க நினைப்பதை அறிந்து சொத்தைப் பெற்று ஏழைகளுக்கு கொடுக்க நி[...]

மூவாயிரம் கோடி சொத்து. அதில் முப்பது கோடியை முப்பது நா[...] மீதிப்பணம் என்று செத்துப்போன வேதாச்சலம் வீடியோவில் தன் [...] வைத்திருக்கிறார். முப்பது கோடியை ரஜினி எப்படி செலவழிக்கிறார், அதை[...] சதிகள், ரஜினி அவற்றை முறியடிப்பது என்பதுதான் கதை.

"அந்த ஆண்டவன் நினைக்கிறான், அதை இந்த அருணாச்சலம் முடிக்க[...] வசனம். விரலைச் சொடக்கி[...] காதலி சௌந்தர்யா. ர[...] காதலித்து, கனவி[...] சௌந்தர்யா ஒ[...] பட வாய்[...]

# லக்ஷி–லக்கி

'காதல் கிராமம்' படத்தின் மூலம் அறிமுகமாகியிருக்கும் புதுமலர் லக்ஷி. லக்ஷிக்கு லக்கியான வாய்ப்பு ஒன்றும் கிடைத்திருக்கிறது. மம்முட்டியுடன் மலையாளப் படம் ஒன்றில் இரட்டை வேடத்தில் நடிக்கிறார். அது மட்டுமா, 'இனியெல்லாம் சுகமே' படத்தில் அப்பாசுடனும் நடிக்கிறார்

# காதலோ காதல்

சமீபத்தில்தான் கல்லூரி மாணவி ஒருவரை திருமணம் செய்தார் நடிகர் விக்னேஷ். கல்யாணம் நடந்தாலும் நடிகை சுவாதியை அடிக்கடி சந்தித்து வருகிறாராம் நடிகர். புது மனைவிக்கும் இந்த விஷயம் அரசல் புரசலாகத் தெரியுமாம்

அஜித் குமாருடன் காதலில் தோல்வி கண்ட சுவாதி தற்போது கண்ணும் கருத்துமாக லவ் விக்கொண்டிருப்பது விக்னேஷைத் தானாம்.



லக்ஷி
படம்: காதல் கிராமம்

# 'ஆஸ்தான நாயகி'

'கையளவு மனசு' நாடகம் மூலமாக இலங்கையிலும் பிரபலமாகி விட்டார் கீதா. நாடக நாயகி அவர்தான். 'கடமை கண்ணியம், கட்டுப்பாடு' படத்தில் சத்யராஜ் ஜோடியாக நடித்தவர்தான் கீதா.

மலையாளம், தெலுங்கு என்று ஓடிஓடி நடிக்கும் கீதாமீது பாலச்சந்தருக்கு ஒரு பிரியம். அநேகமாக பாலச்சந்தர் படங்களில் எல்லாம் கீதா இருப்பார். இப்போது தான் இயக்கும் தொலைக்காட்சி நாடகங்களிலும் கீதாவுக்கு வாய்ப்புக் கொடுக்கிறார் பாலச்சந்தர். அதனால் கீதாவை பாலச்சந்தரின் 'ஆஸ்தான நாயகி' என்று அழைக்கின்றனர். "அப்படி அழைப்பது மகிழ்ச்சி தான்" என்கிறார் கீதா.




படிப்பகம்

www.padippakam.com

## நகைச்சுவைப் பட ராச்சியம்

'உள்ளத்தை அள்ளித்தா' படத்தின் சூப்பர் வெற்றியின் பின்னர் நகைச்சுவைப் படங்களின் பக்கம் திரும்பியுள்ளது தமிழ்ப் பட உலகம்.

ரஜினிகூட 'உள்ளத்தை அள்ளித்தா' படத்தைப் பார்த்துவிட்டுத்தான் 'அருணாச்சலம்' படத்தையும் சுந்தரைவைத்து இயக்கினார்.

சத்யராஜ் நடிக்கும் 'பெரிய மனுசன்', பிரபு நடிக்கும் 'தேடினேன் வந்தது', கார்த்திக் நடிக்கும் 'உதவிக்கு வரலாமா', சரத்குமாரின் 'ஜானகி ராமன்' உட்பட பல படங்கள் நகைச்சுவைப் படங்களாக உருவாகிவருகின்றன.

லேட்டஸ்ட்டாக கடந்தவாரம் பூஜை போடப்பட்டுள்ள நகைச்சுவைப் படம் 'கவுண்டரம்மா'. விக்னேஷ் கதாநாயகனாக நடிக்கிறார். ஜோடியாக நடிப்பவர் ஈஸ்வரிராய். செந்தில், வடிவேலு, மனோரமா, லூஸ்மோகன் உட்பட பலர் நடிக்கின்றனர். இயக்கம் சம்பத்குமார். இவர் புதிய வருகை.

## சங்கீதாவுடன் தொடர்பா? பார்த்திபன் விளக்கம்

இயக்குநரும் நடிகருமான பார்த்திபனுக்கும் சங்கீதாவுக்கும் நெருக்கம் என்பது பல வருட கிசுகிசு. சமீபத்தில்தான் அதனை மறுத்திருக்கிறார் பார்த்திபன். ஆனாலும் பார்த்திபனின் விளக்கமும் திருப்தியாகத் தெரியவில்லை. இதோ அவரது விளக்கம்:

நான் சங்கீதாவைப் பார்த்து கிட்டத்தட்ட ஒருவருடமாகிறது. இரண்டு படங்களில் நடித்தது தவிர வேறு எந்தத் தப்பும் செய்யவில்லை.

'காங்கேயம் காளை' படத்தின் கதை விவாதத்திற்காக ஃபிலிம் சிடியில் (திரைப்பட நகரம்) ரூம் போட்டிருந்தேன். அப்போது 'பிறந்தநாள்' படப்பிடிப்புக்காக சங்கீதா அங்கு வந்தார். நான் அவரைப் பார்க்கவில்லை. பெப்ரவரி 14 காதலர் தினத்துக்காக என் மனைவி சீதா வாழ்த்து அட்டை கொண்டு வந்தார்.

அப்போது சங்கீதா அங்கே இருப்பதைச் சொன்னேன். "நான் இங்கே ரூம் போட்டு இருக்க, அந்தப் பெண்ணும் இருக்க, யாராவது கதை கட்டி விடப்போகிறார்கள். நீ கவலைப்படாதே" என்றேன். சீதா சிரித்தாள்.

"இல்லே அப்படி எதுவும் நான் நினைக்க மாட்டேன்" என்றாள்.

'வாய்மையே வெல்லும்' படத்தில் சங்கீதாவைப் போடலாமா என்று கேட்டார்கள். அவரோடு நடிக்கமாட்டேன் என்றால் பிரச்சனை வரும் என்று 'சரி கேளுங்கள்' என்றேன். சங்கீதா மறுத்துவிட்டார்.

நானும் சரி, அவரும் சரி இனிமேல் சேர்ந்து நடிக்கப்போவதில்லை. எங்காவது சந்தித்துக் கொண்டாலும் பேசப்போவதில்லை." என்று சொல்லியிருக்கிறார் பார்த்திபன்.

## தனிப்பாதை

சினிமாவில் தனக்கென்று ஒரு தனிப்பாதை இருப்பதாகக் கூறுகிறார் சுவலட்சுமி. "என்பாதை குடும்பப்பாங்கான நடிப்புப்பாதை. என் நடிப்பு குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பார்க்கக்கூடியதாக இருக்கும். விஜய்யுடன் 'லவ்டுடே', பவித்ரனின் 'காதல் பள்ளி', மற்றும் 'மலைச்சாமி' என்று நடித்துவருகிறேன். சினிமாவில் இது சுவலட்சுமியின் பாதை என்று ஒரு பாதை போட்டு விட்டேன்.

படிப்பையும் தொடர்கிறேன். சட்டத்தரணியாவதற்குப் படித்துவருகிறேன். அடுத்த வருடம் நான் சட்டத்தரணியாகிவிடுவேன். ஆனாலும் நடிப்பையும் தொடருவேன்" என்கிறார் சுவலட்சுமி.

**புருவம் என்னும் வில்லெடுத்து**
**பூவிழி என்னும் கணைதொடுத்து**
**பருவம் என்னும் அழகிய தேரில்**
**பாவை வந்தாள் படையெடுத்து!**



ரீவா
படம்: ரோஜா மலரே

சினிவர்சிட்



சத்யராஜ்-ரோஜா
படம்: வள்ளல்

...ாம்
...சொத்தை
...றார் ரஜினி.
...சலவழித்தால்தான்
...னையை பதிவு செய்து
...க வில்லன் கோஷ்டி செய்யும்

...என்பதுதான் ரஜினி அடிக்கடி பேசும்
...க்குமேல் உயர்த்தி பேசுகிறார். ரஜினியின்
...செயலாளராக வந்து ரஜினியை ஒருதலையாக
...ட் பாடி அழகு காட்டுகிறார் ரம்பா. ஆனாலும்
...டிவிட்டார் ரம்பாவை. இப்படத்தின் பின்னர் சௌந்தர்யாவுக்கு
...ள் குவியலாம்.
...ின் நண்பராக செந்தில் தூள்! ரஜினி தயாரிக்கும் படத்தில்
...வாக நடிப்பதும் அவர்தான். 'பாட்சா' ஸ்ரைல் உட்பட ரஜினியின் பல
...களை செந்தில் செய்துகாட்டும் விதம் படு ஜோர். அதுபோல கூனிபோல வரும்
...வடிவுக்கரசி பயமுறுத்துகிறார்.
...வம் அம்பிகா ஒரே ஒரு காட்சியில் மட்டும் அழுதபடி வருகிறார். பின்னர் ஒரு
...யில் படமாகத் தொங்குகிறார். இதற்கேன் அம்பிகா? (நச்சரிப்பு தாங்காமல் ரஜினி
...க் கொடுத்தாராக்கும்) ரவிச்சந்திரன், ஜெய்சங்கர், வெண்ணிற ஆடை நிர்மலா,
...ா, ஜனகராஜ், மனோரமா, வினுச்சக்கரவர்த்தி, பொன்னம்பலம் ஆகியோரும் இருக்கிறார்கள்.
...த முழுக்க முழுக்க பூச்சுற்றல் சமாச்சாரம். ரஜினியின் இமேஜை நம்பி எடுத்திருக்கிறார்கள்.
...ரம் கோடி ரூபாவையும் பீரோவில் வைத்து பாதுகாக்கிறார் விசு என்பதுதான் படு
...கை. அதனைக் கண்ட பின்னரும் வில்லன் கோஷ்டி சுலபமாக அள்ளிக்கொண்டு
...மல், ரஜினி பந்தயத்தில் தோற்க வேண்டும் என்று சதி செய்து கொண்டிருப்பதுதான்
...வேடிக்கை. அப்பா ரஜினிக்கு சுத்த வெள்ளை. தலைமுடியில் மட்டும் ஒரு வெள்ளை
...இல்லை. ரஜினிபடம் என்பதால் எப்படி படம் எடுத்தாலும் எடுபடும் என்ற
...கையில் எடுத்திருகிறார் சி. சுந்தர்.
...டல்கள் இதம். ஒளிப்பதிவு நயம். ரஜினி ரசிகர்களுக்கு நிச்சயம் பிடிக்கும். பொழுது
...க்கு உத்தரவாதம். ஆனாலும் பாட்சாவுக்கு கிட்ட நிற்க முடியாது அருணாச்சலம்.
...ால இடைவெளியில் வந்திருப்பதால் ரஜினிக்காக வசூல் கொட்டி ஓடும்.

## ...ந்குமார் வந்துவிட்டார்

...சரத்குமார் இருக்கிறார். இப்போது வரத்குமார் வந்துவிட்டார். 'பீம்சிங் இது என்ன
...க் குழப்பம்?' என்று முடியைப் பிய்க்க வேண்டாம். இளையராஜாவின் அண்ணன்
...ர் வரதராஜனின் மகன்தான் வரத்குமார். முன்னர் 'பாவலர் மைந்தன்' என்ற பெயரில்
...படங்களை இயக்கினார். வெற்றி கிட்டவில்லை. அதனால் அப்பா பெயரை தன் பெயருடன் கலந்து வரத்குமார் என்று வைத்திருக்கிறார்.

வரத்குமார் என்ற பெயரில் அவர் இயக்கும் முதல் படம் 'கண்ணுபடப்போகுது' ராமராஜன், சுவலட்சுமி ஜோடியாக நடிக்கின்றனர்.

...ா
...ஸ்தா

## மம்முட்டியின் 'மறுமலர்ச்சி'

'பாரதிகண்ணம்மா' படத்தை இயக்கியது மூலம் பிரபலமான தயாரிப்பாளர் ஹென்றி. அவரது தயாரிப்பில் மம்முட்டி நடிக்கும் படம் 'மறுமலர்ச்சி.'

பஞ்சாயத்து, தாலி சென்டிமெண்ட் இந்த இரண்டில் ஒன்று இல்லாமல் தமிழ்ப் படக் கதைகளே இல்லை என்பது பொதுவிதி. 'மறுமலர்ச்சி' படத்திலும் பஞ்சாயத்துச் செய்யும் கிராமத் தலைவர் பாத்திரம்தான் கதாநாயகனுக்கு. 'ராசு படையாச்சி' என்ற பெயருடைய கிராமத் தலைவர் பாத்திரத்தில் தோன்றுகிறார் மம்முட்டி. கதாநாயகி தெரிவு நடந்துவருகிறது.

'பாரதி கண்ணம்மா' படம் மூலமாக இயக்குநர் சேரனை அறிமுகம் செய்தவர் ஹென்றி. பின்னர் சேரனுடன் பிரச்சனை. அதனால் பட விளம்பரங்களில் அவரது பெயரையே தூக்கிக் கடாசியவர் ஹென்றி. சேரனுக்கு என்ன தெரியும், எல்லாம் என் ஐடியாதான் என்று படவெற்றிக்கு உரிமை கோரினார்.

இப்போது 'மறுமலர்ச்சி' படத்தில் பாரதி என்னும் புது இயக்குநரை அறிமுகம் செய்கிறார் ஹென்றி. படம் எப்படி வருகிறது என்று பார்க்கலாம்.

## அடுத்தது நியூ இயர்

'காலமெல்லாம் காதல் வாழ்க' படத்துக்கு கதை எழுதி இயக்கியவர் ஆர்.பாலு. படம் சூப்பர் ஹிட். 'காதல் கோட்டை' படக்கதைக்கு உரிமை கோரி சண்டை போட்டவரும் இந்த பாலுதான்.

பாலு இயக்கும் அடுத்த படத்தை தயாரிப்பது பெரிய இடம். சத்யராஜின் மனேஜர் ராமநாதன்தான் தயாரிப்பாளர். திரைக்கதை, வசனம், இயக்கம் ஆகிய மூன்று பொறுப்புக்களையும் சுமக்கிறார் பாலு. படத்துக்கு 'நியூ இயர்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

கதாநாயகனாக புதுமுகம் ஒருவர் நடிக்கப்போகிறார். அமிதாப்பச்சனின் மகனை நடிக்கவைக்க ராமநாதன் முயல்வதாக ஒரு தகவல். நடக்குமா தெரியவில்லை. கதாநாயகியாக மனிஷா கொய்ராலா, கஜோல் இருவரில் ஒருவர் நடிக்கலாம்! தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் தயாரிப்பதால் இந்தியில் பிரபலமான கதாநாயகிதான் தோதாக இருக்குமாம்.

ராமநாதன் தயாரிப்பில் தற்போது திரைக்கு வந்துள்ள படம் 'வள்ளல்'.

## குஷ்புவுடன் பாண்டியராஜன்

குஷ்புவோடு நடிக்க வந்த கதாநாயக நடிகைகள் பலரின் விலாசமே தெரியவில்லை. ஆனால் குஷ்பு மட்டும் இப்போதும் பிஸியோபிஸி. அதுவும் கதாநாயகியாக புகுந்து விளையாடுகிறார். உடம்பில் முன்பைவிட தசைபோட்டும்கூட துணிந்து கவர்ச்சி காட்டுகிறார். சுழன்று பாடல் காட்சிகளில் ஆடுகிறார்.

குஷ்புவுக்கு கை நிறைய பட வாய்ப்புக்கள். பாண்டியராஜனுடனும் ஒரு புதுப்படத்தில் ஒப்பந்தமாகியிருக்கிறார். படத்தின் பெயர் 'மாறுவேஷம்' ஏற்கனவே 'கோபாலா கோபாலா' படத்தில் இந்த ஜோடி நடித்தது. பாண்டியராஜன் ஒல்லிக்குச்சி. குஷ்பு அவரைத் தூக்கி இடுப்பில் வைத்து விளையாட்டுக் காட்டலாம். அப்படி இருந்தும் படம் சூப்பர் ஹிட். ரசிகர்கள் ஏற்றுக்கொண்ட ஜோடிப் பொருத்தம் என்பதால் மறுபடி இணைகிறது இந்த ஜோடி. இயக்கம் என். முருகேஷ். மணிவண்ணன், நாகேஷ், ஜனகராஜ், கோவைசரளா ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: தேவா. திரைக்கதை: பாண்டியராஜன். வசனம்: கோபு-பாபு. தயாரிப்பு: தக்காளி சீனிவாசன்.



ராமராஜன்-சங்கீதா
படம்: பூ மனமே வா



படிப்பகம்

www.padippakam.com

# "உணவும் - உண்ணும் பழக்கமும் கெட்டுப்போகாத கட்டுடல் தரும்"



பொதுவாகக் கொழுப்புள்ள உணவுப் பதார்த்தங்களே சுவையானவை. சுவையாக இருப்பதனால் அளவுக்கு மீறிக் கொழுப்புப் பதார்த்தங்களையே நாம் தேடி உண்ண ஆசைப்படுகிறோம், ஆசையை அளவோடு கட்டுப்படுத்துவதனால் நோய் நொடிக்கு இடங்கொடாமல் நீண்ட காலம் வாழலாம்.

உணவுக்கட்டுப்பாடு என்பது பெரும்பாலும் 40 வயதைக் கடந்தவர்களுக்கே என்றுதான் பலரும் கருதுகிறார்கள், உண்மை. அதுவல்ல; குழந்தைப் பருவத்திலேயே உணவு விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்,

3 வயதிலிருந்தே குழந்தைகளுக்கு உணவு கொடுக்கும் முறையைப் பக்குவமாகப் பழக்குதல் வேண்டும். ஆசையாக- குழந்தை உண்ணும் அழகைப் பார்த்து இரசித்து மகிழும் பெற்றோர்கள் இனிமேலாவது எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.

'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்பது போல் சிறு வயதில் பழகும் பழக்கமே பெரியவர்களான பின்னரும் தொடரும். ஆகவே சிறு பராயத்திலிருந்தே-ஏனைய நல்ல பழக்கங்களுடன் உணவுப் பழக்கத்தையும் பயிற்றுவதுதான் உசிதமானது.

விட்டமின் வகைகள் மற்றும் மாத்திரைகளை வெறும் கேள்வி ஞானத்தில்- அளவுக்கு அதிகமாக உட்கொள்ளுவோரும் உள்ளனர். மருத்துவருடைய ஆலோசனை இல்லாமல் எந்த மருந்தையோ மாத்திரையையோ கண்டபடி பயன்படுத்துதல்- தேக சுகத்துக்குப் பதிலாக உடல் நலக் கேட்டையே தந்துவிடும்.

சிறு வயதிலிருந்தே மருந்து- மாத்திரைகளுக்குப் பழக்கப்பட்டவர்கள், பெரியவர்களாகியும் அப்பழக்கத்தைத் தொடர்வார்கள். அதுமட்டுமல்லாமல், அது ஒரு பரம்பரைப் பழக்கமாகவும் தொற்றி, இனிமேல் வரும் சந்ததியினரையும் அப்பழக்கத்தில் அமிழ்த்திவிடும்.

அமெரிக்க உணவு ஆய்வாளர்களின் கூற்றுப்படி ஒரு குழந்தை 2 வயதை அடையும்போதே அதன் உடலில் கொழுப்புச் சேர ஆரம்பித்து விடுகிறதாம். இரண்டு வயதுடைய குழந்தை தினசரி உட்கொள்ளும் உணவிலிருந்து- (கொழுப்பிலிருந்து) ஆக 30 சத வீதமான கலோரிகளையே பெற வேண்டும்.

குழந்தை மெலிவாக இருக்கிறதே என்பதற்காகக் கூடுதலான கொழுப்புச் சத்துள்ள உணவு வகைகளை ஊட்டி, 'கொழுகொழு' குழந்தையாக மாற்ற நினைக்கலாகாது. மெலிவான குழந்தைகளிலும் தேகாரோக்கியமான குழந்தையாக அது வளர்கிறதே என்பதைப் பார்த்துத் திருப்தி அடைந்துவிட வேண்டும்.

உருண்டு திரண்ட குழந்தையை விட கொழுப்புக் குறைந்த குழந்தையே நோய் நொடியின்றி வாழக்கூடியது என்பதை மறக்க வேண்டாம். கொழுத்துக் காணப்படும் குழந்தையை அடிக்கடி மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்ல வேண்டி வரும் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுதல் நல்லது.

### உணவில் உள்ள கொழுப்பின் அளவு

| 100 கிராம் புரதத்தில் | | கொழுப்பு-மில்லிகிராம் |
|---|---|---|
| மாட்டிறைச்சி | - | 71 |
| ஆட்டிறைச்சி | - | 77 |
| கோழி இறைச்சி | - | 54 |
| சிறு நீரகம் | - | 300 |
| ஈரல் | - | 320 |
| மூளை | - | 1820 |
| **ஒரு கோப்பை** | | |
| பால் | - | 35 |
| கொழுப்பு நீக்கியபால் | - | 12 |
| **ஒரு தேக்கரண்டி** | | |
| வெண்ணெய் | - | 10 |
| கிறீம் | - | 18 |
| முட்டை (வெ.கரு) | - | 10 |
| மஞ்சட்கரு | - | 240 |
| பழங்கள் பச்சைக் காய்கறிகள் மற்றும் சில தானிய வகைகள் | | 0 |

# தோல் நிறம் மெருகேற வேண்டுமா?



★வேப்பிலை, மஞ்சள் ஆகியவற்றை தேங்காய்ப் பாலுடன் சேர்த்து அரைத்து உடலில் தினசரி பூசிக் குளித்து வந்தால், உடம்பிலுள்ள அழுக்குகள் மற்றும் துர்நாற்றம் நீங்கி சருமம் ஒளிபெறும்.

★ மஞ்சளுடன் சந்தனமும் ரோஸ் வோட்டரும் கலந்து பூசினாலும் சருமம் தூய்மை அடைவதுடன் கவர்ச்சியும் அதிகரிக்கும்.

★சிலருடைய சருமம் எப்போதும் சொருசொருப்பாகவும் வரட்சியாகவும் காணப்படும். பலாவிலைகளில் பழுத்து மஞ்சளாக மாறிய இலைகள் ஐந்தை எடுத்து சிறிதளவு மஞ்சளும் ஒரு மேசைக் கரண்டி பசு நெய்யும் சேர்த்து நன்றாக அரைத்து உடல் முழுவதும் பூசவும். 15 நிமிடங்களின் பின்னர் வெந்நீரால் கழுவிவர சருமம் மென்மை அடைந்து பளபளப்பாகவும் மாறும்.

★ சருமத்தைத் தூய்மைப்படுத்த- யூக்கலிப்டஸ் இலைகள் ஐந்துடன் ஒரு பிடி துளசி இலைகளையும் சேர்த்து அரைத்து கற்பூரத் தைலம் ஒரு சொட்டுவிட்டு நன்றாகக் கலந்து உடலெங்கும் பூசவும்.

★ எக்ஸிமா போன்ற சரும நோய்களால் தோன்றும் கறைகளை நீக்க, பூண்டு ஒரு பல்லுடன் 3 துளி ஒலிவ் எண்ணை விட்டு அரைத்தெடுத்து, கறை படிந்த இடத்தில் தடவிவர, கறை மறைந்து பழைய தோற்றம் பெறும்.

★ வெய்யில் சூட்டினால் சிலருடைய சருமம் நிறம் மாறிவிடும். இதனை நீக்கி பழைய நிறத்தைப் பெற- தக்காளிச் சாறு ஒரு மேசைக் கரண்டி, வெள்ளரிக்காய்ச் சாறு ஒரு மேசைக் கரண்டி, பசுத் தயிர் ஒரு மேசைக் கரண்டி ஆகியவற்றுடன் சிறிதளவு மஞ்சள் சேர்த்து, பாதிப்புக்குள்ளான பகுதியில் பூசி வரவும்.

# முகப்பருவை நீக்கச் சில வழிகள்



துளசி இலை ஒரு பிடியை எடுத்து சுத்தமான நீரில் கழுவி, பசுத் தயிர் இரண்டு மேசைக்கரண்டி அளவு சேர்த்து பசை மாதிரி அரைத்தெடுக்கவும். இதனை முகத்தில் பூசி, அரை மணி நேரத்தின் பின்னர் அளவான வெந்நீரால் அலம்பி, சுத்தமான துணியால் துடைக்கவும்.

முகம் கழுவும் போது (துளசிப்பசையை நீக்க) சவர்க்காரம் போடலாகாது. முகம் அலம்பி ஒரு மணி நேரத்தின் பின்னர் தான் பவுடர் பூசவேண்டும்.

அலுவலகம் செல்லும் பெண்கள், மாலை நேரங்களில் இதனைச் செய்யலாம்.

★ கொத்தமல்லிக்கீரை ஒரு பிடி, சீரகம் 2 தேக்கரண்டி, பனை வெல்லம் அளவாகச் சேர்த்து நீரில் போட்டுக் கொதிக்க வைக்கவும். 5 நிமிடம் வரை கொதித்து ஆறிய பின்னர் இக்கலவையைக் குடித்து வந்தால் 14 நாட்களில் பலன் காணலாம். காலையிலோ மாலையிலோ இதனைப் பருகலாம். ஆனால் நேரம் ஒரே சீராகவே இருப்பது நல்லது. அதாவது: இன்று பகல் 10.00 மணிக்குப் பருகினால், அடுத்தநாளும் அதே நேரத்தில் பருக வேண்டும்.

★ துளசி இலைச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி அளவு தேன் காலை வேளையில் பருகினால் முகப்பரு பறந்துவிடும்.

★ வேப்பிலை ஒரு பிடியுடன் சிறிதளவு மஞ்சள், ஒரு முட்டையின் வெள்ளைக்கருவும் சேர்த்து அரைத்து அக்களிம்பை முகத்தில் தடவி அரைமணிநேரம் சென்றபின் வெந்நீரினால் கழுவவும். ஒரே வாரத்தில் முகப்பரு மறையும்.

# தலைமுடிக்கு அழகு- சுத்தமாக இருத்தல்



★ பொடுகை ஒழித்துக்கட்ட துளசி இலை ஒருபிடி, அதே அளவில் அரிந்த வெற்றிலை ஆகியவற்றை நன்றாக நசித்தெடுத்து சிவப்பு செவ்வரத்தைப் பூக்களையும் அளவாகச் சேர்த்து தேங்காய் எண்ணையிவிட்டு சிறிதளவு கொதிக்கவைத்து தலையில் அழுத்தமாகத் தேய்த்து வரலாம்.

★ பாலுடன் வெள்ளைமிளகு ஒரு தேக்கரண்டி சேர்த்து அரை மணிநேரம் ஊற விட்டபின் தலையில் தேய்க்க வேண்டும். 15 நிமிடங்களின் பின் கழுவி விடவும். பொடுகு நீங்கிவிடும்.

★ கறிவேப்பிலை ஒருபிடியை 1/2 லீட்டர் தேங்காய் எண்ணையில்போட்டு கொதிக்க விடவும். கொதித்து வரும் போது 3 சிட்டிகை பச்சைக் கற்பூரத்தை அதனுள் போடவும். இதனைத் தடவி வந்தால் முடி உதிர்வது நின்றுவிடும்.

★ வெந்தயத்தை பால் சேர்த்து அரைத்துத் தலையில் தேய்த்து முழுகினாலும் தலைமுடி உதிராது.

★ கடைகளில் கிடைக்கும் 'ஷம்பூ'வை விட வெந்தயத்தை நீரில் ஊறவிட்டு அரைத்து, தலையில் தேய்த்து முழுகினால் அழுக்கு நீங்குவதுடன் முடி மென்மையாகும்.

★ மிளகு தூளை வெந்தயத்துடன் கலந்து முடியில் தடவி வர தலையிலுள்ள அழுக்கு நீங்கிவிடும். தலையிலுள்ள சூட்டை நீக்கி குளிர்ச்சியாக வைத்திருக்க உதவும்.

# லேடீஸ் ஸ்பெஷல்


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? டிக்கோயா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

ஐ. வனஜா,
நியுட்டன் த.வி., டிக்கோயா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

வாரம் ஒரு பட்டுச் சேலை BO

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 10-05-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல.-1772, கொழும்பு.


# தேவையில்லை ✚ பார்மஸி



**காது வலியா?**

காதுவலி ஏற்பட்டுத் துன்பம் உண்டானால், உடனே ஐந்தாறு வெள்ளைப் பூண்டுகளை நசுக்கி, சாறு எடுத்து இரண்டு சொட்டு-அந்த வலிக்கும் காதில் விடுங்கள். வலி உடனே நின்றுவிடும். அந்த வெள்ளைப் பூண்டுச் சாற்றுக்கு அத்தனை குணம் உண்டு.

**ஊரில் கொலராவா?**

ஊரில் கொலரா (வாந்திபேதி- கொள்ளை நோய்) என்றால் கவனமாக இருங்கள். எலுமிச்சம் பழச்சாறு சிறந்த கொலரா தடுப்பு மருந்து. அதனால் அப்பழச்சாற்றைப் பானமாகத் தயாரித்து அவ்வப்பொழுது சாப்பிட்டு வாருங்கள். கொலரா வராது.

**தொண்டைப் புண்ணா?**

சில சமயங்களில் தொண்டைப்புண் வந்து சிரமப்படுத்தும். எச்சிலைக் கூட கூட்டி விழுங்கச் சிரமமாயிருக்கும். அதற்கு, அன்னாசிப்பழச்சாற்றை வாயில் ஊற்றிக் கொண்டு மெதுமெதுவாகத் தொண்டையில் வைத்திருந்து விழுங்க வேண்டும். அல்லது அப்பழச் சாற்றைத் தொண்டையில் படும்படியாகச் செய்து கொப்பளித்து வந்தாலும் போதும். தொண்டைப்புண் குணமாகும்.

**நீரிழிவு நோயா?**

தித்திப்புக்கு எதிர்ப்பு கசப்பு. அது போன்று நீரிழிவு நோய் உள்ளவர்கள், நாள்தோறும் பாகற்காய் சூப் வைத்துச் சாப்பிட்டு வரவும். நாளடைவில் நீரிழிவு வியாதி தானே மறைந்துவிடும்.

**குடி மயக்கமா?**

இப்போதுதான் எங்கும் குடிப்பதற்கு வசதி உள்ளதே. அதனால் குடிமயக்கமும் சகஜமாகிவிட்டது. அந்தக் குடி மயக்கத்தைத் தெளிய வைக்க, அவர்கள் வாயில் தாராளமாகத் தேனை ஊற்றுங்கள். சிறிது சிறிதாக உள்ளே செல்லட்டும். உடனே குடிமயக்கம் தெளிந்து விடும்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது சுகந்தினி

## காய்கறி வடாம்

**தேவையானவை:**

**பச்சரிசி**– 1 கிலோ
**சவ்வரிசி**– 200 கிராம்
**எலுமிச்சம்பழம்**– 2
**பச்சை மிளகாய்**– 50 கிராம்
**கரட்**– 200 கிராம்
**கோவா**– 200 கிராம்
**தக்காளி**– 3/4 கிலோ
**தண்ணீர்**– 4-5 லீட்டர்
**உப்பு**–அளவாக

**செய்முறை:**

அரிசியை நன்றாகக் கழுவி ஊற வைத்து, மாவாக இடித்துச் சலித்து வைக்கவும். பச்சை மிளகாய், உப்பு போன்றவற்றை நைசாக அரைக்கவும். தக்காளியைக் கொதிக்கும் நீரில் போட்டு மிருதுவானதும், தோல் நீக்கிவிட்டுச் சாற்றைப் பிழிந்து கொள்ளவும். கரட்டையும், கோவாவையும் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.

ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றிக்கொதிக்க வைக்கவும். சவ்வரிசியைக் கழுவி அதில் போடவும். சவ்வரிசி நிறம் மாறி வெந்ததும் த்க்காளிப் பழச் சாற்றைச் சேர்க்கவும். காய்கறிகளையும் அதில் போடவும்.

தண்ணீர் மறுபடி கொதிக்கும்போது மாவை அதில் கொட்டிக் கிளறவும். வெந்ததும் அடுப்பில் இருந்து இறக்கிச் சூடேறியதும் அரைத்த உப்பு, மிளகாய்க் கலவையைப் போட்டு நன்கு கலக்கவும். பொலித்தீன் துணியில் சிறிய உருண்டைகளாக வைத்து வெய்யிலில் நன்கு காய வைக்கவும். காய்ந்தபின் எமக்குத் தேவைப்படும் நேரங்களில் பொரித்துச் சாப்பிட சுவையாக இருக்கும்.

# முகத்திலும் அடிக்கும் மின்னல்

★ கொத்தமல்லி விதை 2 தேக்கரண்டி, சாதிக்காய் அரைப்பாதி, கராம்பு 4, தேன் ஒரு தேக்கரண்டி, எலுமிச்சம் பழத்தோல் (ஒரு பழம்) ஆகியவற்றை சிறிதளவு ரோஸ் வோட்டர் விட்டு பசைபோல் அரைத்தெடுக்கவும் முகத்தில்



பூசி நன்றாகக் காய்ந்ததும் வெந்நீரால் கழுவவும்.

இரு வாரங்கள் இதனைச் செய்து வர முகத்தில் தனியானதோர் பளபளப்பும் ஒளியும் தோன்றுவதை உங்கள் சினேகிதிகளே கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

★ வெண்களிமண் ஒரு மேசைக்கரண்டி, இரண்டு பல்லு பூண்டு, தேன் ஒரு தேக்கரண்டி, அளவான கரட் ஒன்றை நன்றாக அரைத்துப் பிழிந்தெடுத்த சாறு, ஒரு முட்டை வெள்ளைக்கரு ஆகியவற்றை அரைத்து களிம்பாக்கி முகத்தில் தடவி வர முகம் பிரகாசமடையும். கரும்புள்ளிகளும் முகப்பரு அடையாளங்களும் மறைந்துவிடும். சொர சொரப்பான முகத் தோலை மிருதுவானதாக்கிவிடும்.

★ முகத்தில் எண்ணைத் தன்மை அதிகமுள்ள பெண்கள் யூக்கலிப்டஸ் (மின்ற்) இலைகளை வேகவைத்த நீரினால் முகம் கழுவி வர மேலதிக எண்ணைத்தன்மை அகன்று விடும். தொற்றுக்கிருமிகளைத் தூர விரட்ட இது வகை செய்யும்.


## தினமுரசு-அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப்போட்டி

தினமுரசு– அருள் ஜுவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 09

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

நேற்றுவரை...
என்
நினைவில் நின்றவளே!
**
இன்றுவரை
உன்
கற்பனை உலகம்
கனவுகளாய் மட்டுமே
கரைந்து போனது.
அதைக்
கலைத்துப் போடுவதால்-
**
உனக்கு மட்டுமல்ல,
-எனக்கும்தான்-
வாழ்க்கை
நெருஞ்சி முள்ளாக
நெருடிக் கொண்டிருக்கும்!
**
நீயோ
நிஜத்தை மறுத்து
நிழலைத்தேடி நீந்துகிறாய்!
நானோ
நிழலை வெறுத்து
நிஜத்தைத் தேடிப்
புறப்படுகிறேன்!
**
அங்கே வசந்தங்கள்
பூக்கிறதோ இல்லையோ,
வாழ்க்கை பூக்கும்!
**
இறுதியாக
உனக்கு சிலவரிகள்:
**
'காதல்' என்பது
வாழ்க்கையின்
வசந்தகாலம் மட்டுமல்ல:
பலவகையில்
அதுவே 'வடிவம்'
**
அதற்கு-
ஆர்ப்பாட்டம் நிறைந்த
அழகுகளை விட
அர்ப்பணம் ஆகின்ற
அன்பு ஒன்றுதான்
அடிப்படை!
**
இதை மட்டும்
நீ
புரிந்து கொண்டால்
ஒரு நண்பனாக நின்றாவது-
உன் மண விழாவில்
நல்வாழ்த்துக் கூற
நான் வருவேன்.....
என்
மனைவியோடு....!
**

தருமலிங்கம்,
நீர்கொழும்பு.

## அழித்துவிடாதீர்கள்!

எத்தனையோ
இரவுகள்
தூக்கத்தை
தொலைத்த
விழிகளுடன்
தூங்கியிருக்கின்றேன்!
••
நித்திரையும்
நிம்மதியும்
எங்கள் முதுகிலா
இருக்கிறது....
தேவைப்படும்போது
பயன் பட!....?
••
ஏதோ மிஞ்சியிருக்கும்
உயிருடன்,
ஏதாவது
ஒரு
அகதி முகாம் நோக்கி
எங்கள்
பாத யாத்திரை
தொடங்கப்படலாம்
என்கின்ற
எதிர் பார்ப்புக்கள் மட்டும்
நெஞ்சு
சுமக்கின்றது!
••
எங்களுக்கும்
நாளைகளைப் பற்றிய
நம்பிக்கைகள்
இல்லாமலில்லை!
••

அம்மாவின்
ஆசைகள்,
அப்பாவின்
கனவுகள்,
தம்பி தங்கைகளின்
இலட்சியங்கள்
இத்தனையும் சுமந்த
எத்தனையோ
அண்ணன்கள்
ஒரு
ஷெல்லடியில்
சொல்லாமல்
செத்துப் போனாலும்
நாளைகளைப் பற்றிய
நம்பிக்கைகள்
உயிர் வாழத்தானே
செய்கின்றன!
••
சூரியன் மட்டும்
சுடச் சுடவே
வந்து போவதால்,
எங்களுக்கோர்
விடியல்
வந்துவிடப் போவதில்லை!
••
எதைப் பற்றியுமே
ஆசைப்பட முடியாத
எங்கள் ஆசைகளெல்லாம்
எங்கள்
உடல்களை
ஏதாவது ஒரு சுடுகாட்டில்
எரிக்கும் முன் அழித்துவிடாதீர்கள்!
••

எஸ்.பி.எம். அலியார்-
பொத்துவில்.01.

## ஒட்டிக் கிடக்கும் சோகங்கள்

நிம்மதியை...
குழிதோண்டி
புதைத்து விட்டு...
கவலைகளை
விதைத்துச் சென்றது
காதல்....
0--0
வேர் பிடித்திருந்த
வேதனைகளுடன்....
விம்மலும் சேர
சந்தோஷம் மறந்தன-
விழிகள்...!
0--0
ஒவ்வொரு
மயிர்க் கால்களிலும்
பதியமிடப்பட்டு...
பரந்து கிடந்தது....
அவள் நினைவுகள்....!
0--0
தரவு நிரல் படுத்திய
கொம்பியூட்டர் போல...
அவள் நினைவுகளை
சப்பித் துப்புது
தனிமை.....!
0--0
காதலிப்பது
இனிமைதான்;
சுக அனுபவந்தான்
பிரிவென்றால்;
துயரத்திலும் துயரம்...!
0--0
ஹிருதயம் நொருங்கி
அடிச்சி முறிச்சி
போடாத குறையாக
டொன் கணக்கில
பாரம் வைத்ததுபோல்
கனக்குது நெஞ்சம்!
0--0
சைகை காட்டி...,
காற்றிலே தூதுவிட்டு,
மடல் கொடுத்து,
மனதைப் பறித்து,
எல்லாமே வீண்.....!
0--0
அழுத்தி...அழுத்தி....
அமுக்கி...அமுக்கி....
அவள் நினைவுகளை...
மல்லாக்கக் கிடத்தி
கிளர விடாமல்
பாறாங் கல் லொன்றை
தூக்கி வைத்தேன்!
0--0
இல்லையென்றால்,
எழுத்துக் களிடையே
பலவந்தமாகப் புகுந்து
கவிதையெங்கும்
ஒட்டிக் கிடக்கும்-
சோகங்கள்!

என். சஹாப்தீன்-
ஒட்டமாவடி.

# தேன் கிண்ணம்

## வரம் வேண்டு மடி

என் இதயப் பெண்ணுக்கு
இதயம் இருக்குமா? என்
நினைவுகள் ஏதேனும்-உன்
நினைவினில் இருக்குமா?
▫▫▫
போலியாய்! உடற் பரிமாணம்
எமை இரண்டாய்ப் பிரித்தது.....
உனக்காய் எழுதும் கவிதை கானம்
எந்தன் உயிரைச் சுமந்தது.....
▫▫▫
காதல் போயின்-பாவி...!
நான் இறப்பது மெய்யடி!
பறந்து போன கிளியே-என்
காதலிற்கு பதிலைச் சொல்லடி!
▫▫▫
கருகிப் போகிறேன் பூவாய்
கவலை இல்லையா?
மரணம் காட்டும் கருணை- உந்தன்
மனதிற்கு இல்லையா?
▫▫▫
எமனும் எனக்காக
சிறிது காலம் பொறுத்தான்!
உன் பதில் வரும் வரை
என்னுயிரைத் தவிர்த்தான்!
▫▫▫
எட்டி எட்டி உன்பதிலை- தினம்
எதிர் பார்க்கிறேன்- உடல்
கூட்டினோடு உயிரைக் கொஞ்சம்
கட்டி வைக்கிறேன்...!
▫▫▫
இறந்துபோனால்-நான்
திரும்பி வருவேனோ? உயிர்
இருக்கும் போதே-பதிலை
சாதகமாய்ச் சொல்லேனடி!!!
▫▫▫

அகன் கபிலன்- வவுனியா.

## இரண்டாவது ஜனனத்தில்...

நிலாப் பெண்ணே!
நித்தம் ஒருமுறை
மௌனமாய் சிரி!
என் முதல்
ஜனனம் முடிந்து
இரண்டாவது
ஜனனம் தொடங்கட்டும்!
***
கொஞ்சம் குனிந்து
உன் பாதங்களைப் பார்!
உன் நகக்கண்ணில்
என் மனது சிக்கியிருக்கிறது!
இருக்கட்டும்.
என் மனதை
உன்னுடன் கூட்டிப்போ!
உன் மனதை
என்னிடம் விட்டுப்போ!
***
ஏனெனில்,
இரண்டாவது ஜனனத்தில்
நான் உயிர்வாழ வேண்டும்....!
***

மனசு, நீர்கொழும்பு.

## ஒரு நிலவும் சில நினைவுகளும்..

அவன், மூச்சுக்காற்றின்
வெப்பத்தில்....
மீசை கருகிப்போனது,
மீண்டும் துளிர்க்கத்
தயாராய்....!
★
நிலவின் வருகைக்காய்
தவம்கிடக்கும்
நீண்ட இரவுபோல
இருண்டு கிடந்தது
இதயம்...
★
இதயத்துணிக்கையெங்கும்
துளைத்துத் துளைத்து
தேடிப்பார்த்தான்
எங்கும்...
அவள் பெயரை
எழுதி எழுதி....
அழித்த தடயம்!
★
விலா எலும்புகளை
உடைத்துக்கொண்டு
வெளிவந்து, அனலாய்
வாய்வழி விழுந்தன....
வார்த்தைகள்...
அவளைப்பற்றிய
சந்தேகத்தோடு!
★
அந்த நிமிடத்தில்..
அவள் ஆயிரம் தடவை...
இறந்துபோனாள்-இனி...
உயிர்ப்பதற்கில்லை!
★
அணைகடந்து ஈரலிக்கும்
அவள் விழிகளிடம்
இதயம்
சொல்லிக்கொண்டது-
இனி...
"இந்த நிலவு...
எந்த வானத்துக்கும்
சொந்தமில்லை" என்று!
★

'கார். மேகலா'

## அன்றும் இன்றும்

அன்று



இன்று



அன்று



↑ காதலிக்க நேரமில்லை, உத்தரவின்றி உள்ளே வா, அதே கண்கள், சிவந்த மண் போன்ற 124 படங்களில் நடித்தவர் காஞ்சனா. அன்றைய கனவுக்கன்னி. சிவந்த மண்ணில் சிவாஜி சவுக்கால் விளாச "பட்டத்துராணி பார்க்கும் பார்வை..." என்ற பாடலுக்கு காஞ்சனா ஆடிய ஆட்டம் இருக்கிறதே... யப்பா! (வீட்டிலுள்ள பெரிசுகளைக் கேட்டால் கனவில் மிதப்பார்கள்)

எல்லாம் சரி, அந்தக் கனவுக் கன்னியின் இன்றைய தோற்றத்தைப் பாருங்கள். 54 வயதில் 70 வயதுத் தோற்றம். காரணம் வறுமை. சொன்னால் நம்ப மாட்டீர்கள் போட்டிருக்கிற நகைகூட இரவல்தான். கோயில் ஒன்றில் குப்பை கூட்டி வயிறு கழுவுகிறார். வெட்கம் காரணமாக அதனை மறுக்கிறார்.

பல நடிகைகளின் சொந்த வாழ்க்கை இப்படி நொந்த கதைதான். காஞ்சனா நடித்து சம்பாதித்த சொத்தை சுருட்டியது யார் என்கிறீர்கள்? பெற்றோர்கள்தான்! கண்ணீர் விடும் முன்னாள் கனவுக் கன்னி!

↓ 'அஞ்சலி', 'சிவசங்கரி' உட்பட பல படங்களில் நடித்து உள்ளத்தைக் கிள்ளிய பேபி ஷாம்லி இப்போது பெரியவளாகிவிட்டார்.



இன்று



அன்று

## இந்த வாரம் உங்கள் பலன்

(04.05.1997 தொடக்கம் 10.05.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பெரியோர் உதவி. | காலை | 7 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| புதன்- இனசன நன்மை, கௌரவம். | பி.ப. | 4 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| சனி- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்க்கை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, இனசன நன்மை. | பகல் | 11 | மணி |
| புதன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- அந்நியர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- கடன் சுமை, கௌரவக் கேடு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, அந்நியர் நட்பு. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- கடன் தொல்லை நீங்கும், தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், மனக்குறை நீங்கும். | மு.ப. | 9 | மணி |
| புதன்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- காரியானுகூலம், மனக் கலக்கம். | பி.ப. | 3 | மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பகல் | 12 | மணி |
| புதன்- பெரியோர் நட்பு, பலவித பேறு. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- கடன் தொல்லை நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சிகளில் வெற்றி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | மு.ப. | 11 | மணி |
| செவ்வாய்- கடன்தொல்லை நீங்கும், காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, தொழில் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், தொழிலில் கலக்கம். | பி.ப. | 3 | மணி |
| சனி- பெரியோர் உதவி, கடன் படல். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பலவித பேறு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, கௌரவம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி- காரிய நஷ்டம், மன அமைதி குன்றும். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், புதன். |
| இடபம் | - வெள்ளி. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |
| மகரம் | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |

★ சந்திரன்- மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், காரியத்தடை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பண வரவு. | பகல் | 12 | மணி |
| புதன் - இனசன நன்மை, பலவித பேறு. | காலை | 7 | மணி |
| வியாழன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், தெய்வானுகூலம். | பி.ப. | 3 | மணி |
| சனி- பலவித நன்மை, தொழில் சிறப்பு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பண வரவு குன்றும். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- பலவித பேறு, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, வீண் மனஸ்தாபம். | பி.ப. | 2 | மணி |
| சனி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், கடன் சுமை. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, பலவித பேறு. | காலை | 7 | மணி |
| புதன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- உறவினர் உதவி, தேக மெலிவு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| சனி- உறவினர் இழப்பு, மனக் கவலை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- இனசன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- வீண் துயர், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- கடன் தொல்லை, கௌரவக் கேடு. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- அந்நியர் பகை, பொருள் நஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| சனி- காரியசித்தி, கௌரவம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- எதிர்பார்த்த நன்மை, பெரியோர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- முயற்சி பலிதம், செலவு மிகுதி. | பி.ப. | 4 | மணி |
| வியாழன்- கடன் பயம், தொழில் மந்தம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- சுபகாரிய நன்மை, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| சனி- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- மனக் கலக்கம், பணக் கஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், பிறரால் ஏமாற்றம். | பி.ப. | 4 | மணி |
| வெள்ளி- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, அந்நியர் சகவாசம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7


படிப்பகம்

www.padippakam.com





## மழை

மேகம் திரண்டு வந்தது
மழையும் அழகாய்ப் பொழிந்தது
தாகம் தீர்க்க வந்தது
குளங்கள் முழுதும் நிறைந்தது!

பயிர்கள் வளமாய் செழித்தது
பையில் பணமும் நிறைந்தது
உயிர்கள் உண்டு மகிழ்ந்தது
உடலில் பலமும் வந்தது!

சிறுவரிடம் மகிழ்ச்சி பிறந்தது
கப்பல் தெருவில் மிதந்தது
பறவைகள் குளித்து மகிழ்ந்தது
பார்க்க இதமாய் இருந்தது!


குடையும் அழகாய் விரிந்தது
ஈரக் காற்று அடித்தது
நடக்கவே சுகமாய் இருந்தது
மனதில் மகிழ்ச்சி பிறந்தது!

ஆர்.வி. பதி.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம்
பூணும் நல்லறத்தோடு இங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய் சிவ சக்தியாம்!
—சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## வீரமிக்கவன் யார்?



"இந்த நாட்டில் கோழை யார்? வீரமிக்கவன் யார்? எனச் சொல்ல முடியுமா?" என்று பீர்பாலிடம் கேட்டார் அக்பர்.

"பிறர் பொருள் தனக்குக் கிடைக்குமா என்னும் கண்ணோட்டத்தில் இருப்பவன், முயற்சியே செய்யாதவன், சிரமப்பட்டு வேலை செய்து பிழைக்க விரும்பாதவன், தனது குடும்பத்தைக் காப்பாற்றத் தெரியாதவன், கைக்கூலி பெறுவோன்- இவர்கள் எல்லோரும் கோழைகள்."

தன்னம்பிக்கையோடு உழைப்பவன், தன் உழைப்பிலிருந்து கிடைக்கும் பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்து தன் குடும்பத்தைக் காப்பாற்றுபவன், சுய முயற்சியுள்ளவன், எப்போதும் சுறு சுறுப்போடு காணப்படுபவன் இத்தகையோர் வீரமிக்கவர்கள்," என்று விபரித்தார் பீர்பால்.

"இவற்றை அனுபவத்தில் கண்டால் நான் மகிழ்வேன்!" என்றார் அக்பர். அதைக் காண்பிப்பதாக வாக்களித்தார் பீர்பால்.

சில நாட்கள் கழித்து, "அக்பர் சக்கரவர்த்தியின் பிறந்த நாள் வைபவத்தை முன்னிட்டு அரண்மனையில் ஒரு வாரம் வரை விருந்து நடைபெறுவதாகவும், பொதுமக்கள் யாவரும் வேறுபாடின்றி வந்து விருந்துண்டு செல்லலாம்" என நகரில் அறிவிப்புச் செய்யப்பட்டது.

நகர மக்கள் யாவரும் தினந்தோறும் அரண்மனைக்கு வந்து விருந்துண்டு சென்றார்கள்.

இவ்வாறு விருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அக்பரும், பீர்பாலும் நகருக்கு வெளியே உலாவச் சென்று கொண்டிருந்தார்கள். முதியவர் ஒருவர் தனது வயலிலே வேலை செய்து கொண்டிருப்பதை இவர்கள் கண்டார்கள்.

அக்பரும் பீர்பாலும் அந்த முதியவரின் அருகில் சென்றார்கள். ஆனால் முதியவரோ இவர்களைத் திரும்பிக் கூடப்பாராமல் தன் வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

"ஐயா பெரியவரே! அரண்மனையில் இரண்டு நாட்களாக விருந்து நடைபெறுகின்றது நகர மக்கள் அனைவரும் அங்கே சென்று வயிராற உண்டு வருகிறார்கள். நீங்கள் அங்கே போய் விருந்துண்ணாமல், இப்படி இங்கே வேலை செய்து கொண்டிருக்கிறீர்களே!" என்று விசாரித்தார் பீர்பால்.

"நீங்கள் கூறியதற்கு மிக்க நன்றி. அது எனக்குத் தெரியும். ஆனாலும் என் கைகளால் நான் உழைத்து அதனால் கிடைக்கும் எளிய உணவே எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. அரண்மனை விருந்தைக் காட்டிலும் இதையே மேலாகக் கருதுகிறேன். மேலும் ஒரு வாரத்திற்கு வேண்டுமானால் அரண்மனை விருந்து கிடைக்கும். மீதி நாட்களுக்கு என்ன செய்வது?" என்று கூறிவிட்டுத் தன் வேலையைத் தொடர்ந்தார், அந்த முதியவர்.

"என் வாழ்நாளில் கண்ட வீரமிக்கவர் இவர் ஒருவரே!" எனப் புகழ்ந்தார் பீர்பால்.

"அன்று நான் கேட்ட கேள்விக்கு இன்று அனுபவத்தில் விடை காண முடிந்தது மகிழ்ச்சிக்குரியது" என்று பீர்பாலைப் பாராட்டினார் அக்பர்.

## வாரம் ஒரு நாடு

### உகண்டா



தலைநகர்- கம்பாலா
பரப்பு- 2,41,139 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 2.13 கோடி
மொழி- ஆங்கிலம், உகண்டா, சுவாகிரி
எழுத்தறிவு- 52%
சமயம்- கிறிஸ்தவம், இஸ்லாம், பழங்குடி
நாணயம்- உகண்டா ஷில்லிங்.
தனிநபர் வருமானம்- 190 டொலர்.

**அமைவிடம்:**

கிழக்கு ஆபிரிக்காவில் நடுநிலைக்கோடு நாடு உகண்டா ஆகும்.

**வரலாறு:**

பிரிட்டனின் ஆளுகையில் இருந்த இந்நாடு 1962ல் சுதந்திரமடைந்தது. மில்டன் ஒபாட்டோ பிரதமரானார். தொடர்ந்து 1966ல் இவரே ஜனாதிபதியாகவும் பதவியேற்றார். 1971ல் இராணுவ ஆட்சி. இடி அமீன் ஆட்சியைக் கைப்பற்றினார். 1979ல் தன்சானியாவின் உதவியுடன் யூசுப் லூலூ, இடி அமீனைப் பதவி நீக்கம் செய்து ஆட்சியைக் கைப்பற்றினார். 1980ல் மில்டன் ஒபாட்டோ மீண்டும் பதவியேற்றார். 1985ல் ஏற்பட்ட கலவரங்களால் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டார். 1986ல் இருந்து இராணுவத் தளபதி யோவேரி முசேவேனி அதிபராக இருந்து வருகிறார்.

**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கிய தொழில், பருத்தி மற்றும் கோப்பி முக்கிய விளை பொருட்கள். செப்பு முக்கிய சுரங்கப் பொருள்.

## மின்மினிப் பூச்சிகள்



தங்கள் இருப்பிடத்தைத் தங்களின் சகாக்களுக்குத் தெரியப்படுத்த மின்மினிப் பூச்சிகள் தமது உடலில் உள்ள ஒளியைப் பயன்படுத்துகின்றன. பெண் மின்மினிப் பூச்சிகளுக்கு இறக்கைகள் இல்லை.

மின் மினிப்பூச்சிகளை அமெரிக்காவை அடுத்துள்ள சில தீவுகள், கியூபா, மேற்கிந்திய தீவுகள் முதலிய இடங்களில் 'லாந்தர் பூச்சிகள்' (Lanthern Insect) என்று அழைக்கிறார்கள். ஆனால் அவை இங்கிருக்கும் மின்மினிப் பூச்சிகளை விட இரண்டு, மூன்று மடங்கு பெரியவை.

மேற்கூறிய இடங்களில் விளக்குகளுக்குப் பதிலாக மின்மினிப்பூச்சிகள் பலவற்றைப் பிடித்து, கண்ணாடி சீசாவுக்குள் போட்டு மூடி, அதைத் தொங்கவிட்டு, வீட்டு வேலைகளைச் செய்கிறார்கள்.

இந்த மின்மினிப் பூச்சிகளின் வெளிச்சம் குளிர்மையானதாகும். சாதாரணமாக விளக்கு எரியும்போது ஐந்து சதவீதம் சக்திதான் ஒளியாகிறது. மீதி 95 வீதமும் வெப்பமாக மாறி வீணாகிறது. பூச்சிகளின் ஒளியில் சூடே கிடையாது. இம்மாதிரி குளிர்மையான ஒளியை உண்டாக்க விஞ்ஞானிகள் முயன்று வருகிறார்கள். இதுவரை அவர்களால் முடியவில்லை.

## அடோல்ஃப் ஹிட்லர்

ஒரே மனிதனால் 50 இலட்சம் மனிதர்களைக் கொன்றொழிக்க முடியுமா? 'ஆம்' என்று கூறத் தயங்குவீர்கள். உலக வரலாற்றில் இரண்டொரு வருடங்களிலேயே இத்தகைய சாதனையை நிலை நாட்டியவனின் பெயர், வரலாறு உள்ளவரை நிலையாக நிற்கும் என்பதில் ஐயமில்லை.

ஜெர்மன் நாட்டின் சர்வாதிகாரியாக விளங்கிய அடோல்ஃப் ஹிட்லரே இத்தகைய கொடூரத்தைச் செய்தவன். உலகத்தில் ஹிட்லர் செய்த கொடுமைபோன்று இதுவரை எவரும் செய்ததில்லை. இனிமேலும் இத்தகைய கொடூரமான மனிதன் தோன்றுவான் என்று கூறவும் முடியாது.



இந்த 20ம் நூற்றாண்டு இரண்டு உலகப் போர்களைக் கண்டது. முதலாவது உலகப் போரில் ஈடுபட்ட ஜெர்மன் நாடு பாரதூரமான பாதிப்புக்குள் வீழ்ந்தது. ஆனால், அப்போது- சாதாரண ஓர் ஏழை ஓவியனாக- படங்களை வரைந்து விற்று வயிறு வளர்த்த ஒருவன், நாட்டைத் துரிதமாகக் கட்டி எழுப்பினான். அந்நாட்டின் அதிபனாகி, மீண்டும் மாபெரும் போரில் அதே நாட்டைச் சிக்கவைத்து, உலகெங்கும் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடவிட்டு-மனித சமுதாயம் கண்டும் கேட்டும் அறியாத கொடுமைகளைச் செய்துவிட்டு, எவருக்கும் தெரியாமல்- தன்னுடைய உடலைக் கூடக் கண்டெடுக்க முடியாதவாறு தற்கொலை செய்து கொண்டான்.


ஆஸ்திரியா நாட்டில் 1889ம் ஆண்டு ஏப்ரல் 20ம் திகதி ஹிட்லர் பிறந்தான். 16 வயதுக்கு மேல் அவனால் பாடசாலை செல்ல முடியவில்லை. 1908 முதல் 1913 வரை வியன்னா நகரின் இயற்கைக் காட்சிகளை வரைந்து- விற்றுத் தன் பசியைப் போக்கினான். அக்காலத்தில் உலகப் போர் தொடங்கியது. சாதாரண சிப்பாயாகச் சேர்ந்தான். 1919ல் ஜெர்மன், உழைப்பாளர் கட்சியில் சேர்ந்தான். அதன் தலைமைப் பதவியையும் கைப்பற்றினான். 'ஜெர்மன் தேசியத் தொழிலாளர் கட்சி' என்று பெயரிட்டான். இதுவே பின்னர் 'நாக்சி'யக் கட்சியானது. ஜெர்மன் அந்நியரின் ஆதிக்கத்துள் சிக்கிக்கிடந்தமையினால் சகல உயர் தொழில் துறை, விஞ்ஞானம், மருத்துவம் ஆகியவற்றில் அவர்களே- குறிப்பாக யூதர்களே- மேலோங்கியிருந்தனர். இதனால் யூதர்கள் மீது வெறுப்பை வளர்த்து- ஐரோப்பாவிலிருந்து அந்த இனத்தவர்களை ஒழித்துக் கட்ட ஹிட்லர் திட்டமிட்டான். இத்திட்டமே பெரும் கொலை வெறியாக மாறி 50 இலட்சம் மக்களைக் கொன்று குவிக்க ஹிட்லரைத் தூண்டியது.

1936ல் ஜெர்மன் படை- றைன்லாண்ட், ஆஸ்திரியா, 1939ல் போலாந்து, செக்கோஸ்லவாக்கியா ஆகிய நாடுகளைக் கைப்பற்றியது. இரண்டாவது உலகப் போர் மூண்டது. 1941ல் சோவியத் ரஷ்யாவை வென்றெடுக்க முற்பட்டபோதே ஹிட்லர் சோதனைகளைச் சந்திக்க நேர்ந்தது. அமெரிக்கா, பிரிட்டன், மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து நேச நாட்டுப்படைகளைக் கொண்டு ஜெர்மனியைத் தாக்கியபோது ஜெர்மன்- 1945ம் ஆண்டு தோல்வியைத் தழுவியது. போர் ஓய்ந்து சமாதானம் ஏற்பட்டது.

1945 ஏப்ரல் 30ம் திகதி ஹிட்லர் மறைந்த நாளாகக் கருதப்படுகிறது. அவன் தற்கொலை செய்துகொண்டான் என்று கூறப்பட்டபோதும் அவனுடைய சடலம் எவராலும் அடையாளம் காணப்பட்டு உறுதிப்படுத்தப்படவில்லை.

இத்தனை பெரிய கொடுமைகளைச் செய்த ஹிட்லர் மது குடிப்பதில்லை; மாமிசம் புசிப்பதில்லை. புகைப்பதுமில்லை. குழந்தைகளையும் வளர்ப்புப் பிராணிகளையும் வெகுவாக நேசித்தான்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 10.05.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 191
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 189

**பரிசுக்குரியவர்:**
செல்வி பாத்திமா முப்ராஸா உசைன்,
மா/ ஆமினா ம.வி. மாத்தளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| இ. சேதுபதி, கந்தேநுவர, அல்வத்த. | ஜுலியட் அழனி, புனித செபமாலை மாதா தமிழ் வித்தியாலயம், கொழும்பு-02. |
| கே. நிரஞ்சன், ஹோல் புறுக் த.ம.வி., ஹோல்புறுக். | சி. நவராஜ், புனித சென்ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். |
| செல்வி ஃபாத்திமா ஃபய்ஹா ஃபார்ஸ், கேம்பிரிட்ஜ் சர்வதேச பாடசாலை, மாத்தளை. | வி. இவோன், வேலுவனா றோட், தெமட்டகொட, கொழும்பு-09. |
| ஆர். பிரேம் குமார், புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | செல்வி ஹேமதர்ஷி ஜெயராஜ், வின்சன்ற் மகளிர் உயர்தர கல்லூரி, மட்டுநகர். |
| செல்வி பெ. மல்லிகா, தலவாகெல தமிழ் மகா வித்தியாலயம், தலவாகெல. | சி. கார்மேகம் பிரதீபா, நல்லாயன் மகளிர் கல்லூரி, நுவரெலியா. |

## குறைந்த நேரப் பயணம்

உலகிலேயே மிகக் குறைவான நேரத்தில் விமானப் பயணம் நடைபெறும் இடம் ஸ்கொட்லாந்தில் உள்ளது. வெஸ்ட்ரே என்ற தீவிலிருந்து பாபாவெஸ்ட்ரே என்ற தீவுக்கு விமானம் பறக்கும் நேரம் சரியாக 90 நொடிகள்- அதாவது ஒன்றரை நிமிடம்தான். உலகிலேயே வேறெந்த நாட்டிலும் இது போன்ற குறைந்த நேர விமான சேவை கிடையாது.


## உலகின் பெரிய எரிமலைகள்

| பெயர் | இருக்குமிடம் | உயரம் (அடி) |
|---|---|---|
| கொட்டோ பாக்ஸி | அன்டிஸ்-ஈக்குவடோர் | 19,344 |
| ராங்கெல் | அலாஸ்கா | 14,000 |
| எரிபஸ் | அன்டார்டிக்கா | 13,675 |
| இலியம்னா | அலூஷியன் தீவுகள் | 11,000 |
| எட்னா | ஸிஸிலி | 10,700 |
| சில்லன் | அன்டிஸ்-சிலி | 10,500 |
| பெரிகுடின் | மெக்ஸிக்கோ | 9,000 |
| அஸாமயமா | ஜப்பான் | 8,200 |
| ஹெக்லா | ஐஸ்லாண்ட் | 5,100 |
| வெஸஅவியஸ் | இத்தாலி | 3,858 |
| ஸ்ட்ரோம்போலி | இத்தாலி | 3,000 |



படிப்பகம்

www.padippakam.com




**இதுவரை**

பழைய புத்தகக்கடையில் அந்த நோட்டுப் புத்தகம் கிடைக்கிறது. கையெழுத்தில் தனது கதையை எழுதியிருக்கிறாள் காயத்ரி. கதையைப் படித்துவிட்டு வந்து தன்னைக் காப்பாற்றும்படி எழுதியிருக்கிறாள். கதை விரிகிறது.

காயத்ரி-ரத்னா என்பவனை மணக்கிறாள். அவன் வீட்டுக்கு செல்கிறாள். ரத்னாவின் நடவடிக்கைகள் புதிராய் உள்ளன. ரத்னாவின் சகோதரி சரசு விதவை. அவளது செயல்கள் சந்தேகம் தருகின்றன.

வீட்டு சமையற்காரன் மகள் இந்திராவை உடலில் நகைகளை மட்டும் அணிவித்து நிறுத்தியிருக்கிறாள் சரசு. சிகரெட்டால் இந்திராவின் உடலை சுடுகிறான் அவள் தந்தையான சமையற்காரன்.

கதவு இடுக்கு வழியாக அக் காட்சியைக் காண்கிறாள் காயத்ரி. ரத்னாவிடம் தான் கண்டதை காயத்ரி சொல்கிறாள். சரசை வீட்டை விட்டுப் போகச் சொல்கிறான் ரத்னா. பின்னர் ரத்னாவும், சரசுவும் இரகசியமாகப் பேசுவதைக் கேட்கிறாள் காயத்ரி. எல்லாம் அவர்களின் நாடகம் என்று தெரிகிறது. தன்னை என்னவோ செய்யப் போகிறார்கள் என்று பயப்படுகிறாள் காயத்ரி. வீட்டுக்குப் பின்புறம் அவுட் ஹவுசில் ஒரு பெண்ணை அடைத்துவைத்திருப்பதையும் காண்கிறாள் காயத்ரி. அதிர்கிறாள். அடைக்கப்பட்டிருப்பவள் நிர்மலா என்று அறிய முடிகிறது.

காயத்ரியின் கதையை படித்தறிந்த எழுத்தாளர் உடனடியாக கணேஷ்-வசந்த் ஆகியோரின் உதவியை நாடுகிறார். காயத்ரியை காப்பாற்ற புறப்படுகிறார்கள்.

இனி...

**நவீன எழுத்துலக வேந்தன் — சுஜாதா**

அந்தக் காரின் பின் பக்கம் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள்: முன்புறம் இருவர். அதில் டிரைவர் சீட்டிலிருந்து இறங்கினவன் எங்களைப் பார்த்தான். கேள்விக் குறி. மற்றொருவன் இறங்கி வேஷ்டியை சரி செய்து கொண்டான். குடுமி வைத்திருந்தான். காதில் கடுக்கன், வெள்ளை ஜிப்பா- அய்யர்.

"யாரப்பா அது?" என்றான் அந்த இளைஞன். சட்டென்று அவன் அழகான, இளமையான முகம் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. இவன் ராஜரத்தினமாக இருக்கக்கூடும் என்று தோன்றியது.

"யார் நீங்கள் எல்லாம்? ஏய் பகதூர், ஏன் இவர்களை உள்ளே விட்டாய்...?"

"ஸாப் எய லோக்" என்று துவங்கி சிக்கலான ஹிந்தியில் நாங்கள் வந்த குற்றத்தை வர்ணித்தான் கூர்க்கா.

"மிஸ்டர் ராஜரத்தினம்?"

"எஸ்...."

"உங்களுடன் பேச வந்திருக்கிறோம்!"

"என்ன?"

"பிஸினஸ்?"

"என்ன பிஸினஸ்?"

"உங்கள் பிஸினஸ்."

"என் பிஸினஸ் இரும்பு வியாபாரம். அது பற்றிப் பேச என் ஆபீஸிற்கு வர வேண்டும் நீங்கள். இப்படி வீட்டிற்குள் நுழைந்து..."

"நான் வந்தது இரும்பு வியாபாரத்துக்கு அல்ல!"

"பின்?"

"மிஸ்டர் ராஜரத்தினம்! இப்படி வைத்துக் கொள்ளலாமே! என் நண்பர் காரின் உள்ளே உட்கார்ந்திருக்கிறார். சற்றுப் பசையுள்ளவர். அவர் சில காட்சிகளைப் பார்த்தார். அந்தக் காட்சிகள் அவருக்கு மிகப் பிடித்துப் போய்விட்டன. என்னை மிகவும் தொந்தரவு செய்கிறார், எப்படியாவது வாங்கித் தர வேண்டும்; எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயார் என்று."

"காட்சிகள்?"

"ஆம் காட்சிகள்... படுக்கை அறையில், குளிக்கும் அறையில்.. விதவிதமான நகைகளுடன்.."

அவன் முகம் மாறியது "பார்ட்டி யார்?" என்றான்.

ஸார் கொஞ்சம் வருகிறீர்களா?" என்று என்னைப் பார்த்துக் கூப்பிட்டான் கணேஷ். நான் காரை விட்டு வெளியே இறங்கினேன்.

"மிஸ்டர் ராஜரத்தினம்! மீட் மிஸ்டர் உமாகாந்த்..." உமாகாந்த்! நான் எப்போது உமாகாந்த் ஆனேன்.

"மிஸ்டர் உமாகாந்த். செக் புத்தகம் கொண்டு வந்திருக்கிறீர்கள் அல்லவா?"

நான் திரு திரு என்று முழிக்காமல் இருக்கப் பிரயத்தனப்பட்டேன்.

வளையல்கள் குலுங்கும் சப்தம் காரினுள் கேட்டது.

"ஐயாம் ஸோ ஸாரி! நம் பிஸினஸ் பேச்சில் இவர்களை மறந்தே விட்டோம்!"

அய்யர் கதவைத் திறக்க அந்தப் பெண் வெளிப்பட்டாள்...

"திஸ் இஸ் காயத்ரி... மை.வைஃப் திஸ் இஸ் மிஸ்டர்.. உமாகாந்த். திஸ் இஸ் மிஸ்டர்...?"

"கணேஷ்" என்றான் கணேஷ்.

"உள்ளே வாருங்கள்!" என்றான் ராஜரத்தினம். காயத்ரி எங்களைப் பார்த்து விட்டு எதுவும் சொல்லாமல் உள்ளே சென்றாள். வீடு காயத்ரி வருணித்திருக்கும் வீடுதான். அவுட்ஹவுஸ்கூடத் தெரிந்தது. அங்கே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. என் கையில் காயத்ரியின் நோட்டுப் புத்தகத்தை மறைப்பதா என்பது பற்றி நான் யோசித்தேன். கணேஷின் சாகசத்தின் திசை எனக்குச் சரியாகப் பிடிபடவில்லை. என்ன பிஸினஸ் அது? பார்க்கலாம்.

அந்த வீடு செல்வச் செழிப்பைக் காட்டியது. நுழைந்ததும் நீண்ட ஹாலின் முடிவிலேயே 'டைனிங்டேபிள்' போட்டு அதனுடன் சினேகிதமாக ஆறு நாற்காலிகள் காத்திருந்தன. அலமாரியில் பலவர்ணப் புத்தகங்கள் தென்பட்டன. **John Fwles** ன் **Magus, Art of film making. Konarak....** (திரைப்படத் தொழில் நுட்பம் தொடர்பான புத்தகங்கள்)

"உட்காருங்கள் மிஸ்டர் உமாகாந்த்."

நான் உமாகாந்தா!



உட்கார்ந்தேன். கணேஷைப்பார்த்தேன். 'என்னிடம் விடுங்கள். கவலைப்படாதீர்கள்' என்று அவன் சாடை காட்டியதை ராஜரத்தினம் பார்த்திருக்க முடியாது. வசந்த் பாடிக்கொண்டே ஹாலை சுற்றும் முற்றும் நோட்டம் விட்டான்.

ரத்னா, "என்ன சாப்பிடுகிறீர்கள்? ஏதேனும் குளிர்பானம் வேண்டுமா?" என்றான். நல்ல அழகான இளைஞன்தான்: பள பள என்று பாதாம் பருப்பிலேயே வளர்ந்திருக்கிறான் என்று தோன்றியது. கையில் தொளதொள என்று சங்கிலி. மார்பில் புலி நகம் தெரியும் சங்கிலி. மீசையிலும் தலை மயிரின் 'பப்' என்ற நேர்த்தியான அடர்த்தியிலும் நல்ல உழைப்பு தெரிந்தது. பொலி காளை மாதிரி இருந்தான். காலைத் தரையில் ஒருதரம் தேய்த்து விட்டுப் புஸ் என்று மூச்சு விட்டிருந்தால் ஆச்சர்யப்பட்டிருக்க மாட்டேன்.

"சொல்லுங்கள் மிஸ்டர் உமாகாந்த்!" என்றான். கால்மேல் கால் போட்டுக் கொண்டு ஒயிலாக உட்கார்ந்தான். நான் காயத்ரியின் நோட்டுப்புத்தகத்தை இடது பக்கம் எனக்கும் சோபாவின் கைக்கும் இடையில் செருகிக் கொண்டு, "கணேஷ்! பேசி முடித்துவிடு!" என்றேன். 'பேசி முடித்துவிடு' என்பது எல்லா சந்தர்ப்பத்திற்கும் பொருந்துமாதலால்.

கணேஷும் ரத்னாவும் பேசி முடித்துக் கொண்டதில் எனக்குப்பாதி புரியவில்லை.

"நீங்கள் எது பார்த்தீர்கள்?"

"பெயர் ஞாபகமில்லை. ஆனால் 'ப்ரில்லியண்ட்!' கொடுத்த காசுக்கு மதிப்பு... புதிதாக ஏதாவது எடுக்கிறீர்களா?'

"எடுத்துக் கொண்டிருக்கிறோம்..."

"கோவில் நகைகள் எல்லாம் அணிந்து கொண்டு எடுப்பாக, டார்க் ஆக டான்ஸ் ஆடுகிறாளே அந்தப் பெண்... ஸுப்பர்ப்!" என்றான் கணேஷ்.

"நீங்கள் இந்திராவைச் சொல்கிறீர்கள்!"

"இந்திராவா அவள் பெயர்?"

"இந்திரா! இந்திரா!" என்றான் வசந்த்.

"அவளைப் பார்க்க விரும்புகிறீர்களா?"

"பை ஆல் மீன்ஸ்!"

"என்ன ரத்னா?" என்று குரல் கேட்டுத் திரும்பினேன். சரஸ்வதி! ஆம் அவள்தான் சரஸ்வதியாக இருக்க வேண்டும். அம்மாடி! ஒரு இந்தியப் பெண்ணுக்கு இத்தனை அதிக உயரம், வளர்த்தி, அடர்த்தி! அவள் உடைகளை மீறி வழிந்து கொண்டிருந்தாள் சரஸ்வதி: நல்ல உயர்தரப்பட்டுப்புடவை அணிந்து கொண்டு, சிக்கனமாகத் தலையை முடிந்து கொண்டு, நெற்றியில் ஒன்றுமில்லாமல்.. நாற்பது வயதிருக்கும். இன்னும் அழகு தேங்கியிருக்கும் சரஸ்வதி. காயத்ரியின் வருணனை கச்சிதமாகப் பொருந்துகிறது.

"ரத்னா, இவர்கள் எல்லாம் யாரு?"

"ஒரு பார்ட்டி! சரஸு.. பிஸினஸ் விஷயமா வந்திருக்கா."

சரஸ்வதி, எங்களைச் சந்தேகமாகப் பார்த்தாள். "என்ன பிஸினஸ்?"



"நம்ம பிஸினஸ் சரஸு. பயப்படாதே. எல்லோரும் ஃப்ரெண்ட்ஸ்தான்."

"நம்ம பிஸினஸைப் பற்றி இவர்களுக்கு எப்படித் தெரிஞ்சுது என்று கேட்டாயா?"

"இன்னும் இல்லை."

"கேள்."

"எப்படி ஸார் தெரிஞ்சுது? எப்படி அட்ரஸ் கிடைச்சுது...."

கணேஷ் வசந்தைப் பார்த்தான்.

"ஹோட்டல் ட்ரீம்லாண்டில் சொன்னாங்க!"

"ஹோட்டல் ட்ரீம்லாண்டா! யாரு?"

"அங்கேதானே பார்த்தோம்! ஒரு குஜராத்திப் பையன் சிவப்பா கண்ணாடி போட்டுக்கிட்டு.... என்ன பேரு? பாட்டீலா?"

சரஸ்வதியும் ரத்னாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள கணேஷ், "இத பாருங்கம்மா, எங்களுக்குச் சரக்கு பிடித்துவிட்டது. ஈஸ்ட் ஆப்ரிக்காவில் அதற்கு நல்ல டிமாண்ட் இருக்கிறது. மற்றும் லண்டன், பாரிஸ் எங்கேயும் எடுபடும், மால் பிரமாதம். ஸார் அதிலே ஊறினவர். (என்னைப் பார்த்து! நானாம்! ஊறினவனாம். எதிலே?) அவருக்கு எமௌண்ட் பெரிசில்லை."

"எவ்வளவு கொடுப்பார்?" என்றாள் சரஸு.

"உங்களுக்கு இதுவரை எவ்வளவு கிடைத்து வந்ததோ அதைப் போல இரண்டு பங்கு! அதுவும் அட்வான்ஸா!"

ஒரு பெண் வந்து மவுனமாக எங்கள் முன்பு வெள்ளித் தம்ளரில் காப்பி கொண்டு வைத்துச் சென்றாள். அவளை ரத்னா கை சொடுக்கி, "இதோ பார் இந்திரா!" என்றான்.

"ஓ! இதுதானா?" என்றான் கணேஷ்.

நல்ல மதமதப்பாக, கறுப்பாக, வாட்ட சாட்டமாக இருந்தாள். நகை போட்டுக்கொண்ட இந்திரா... இந்திரா...

வசந்த் அவளருகில் சென்று, அவளைச் சுற்றி வந்தான். 'ஷ்டி' என்று விசிலடித்து, "தலைமேல் கை வைத்துக்கொள்!" என்றான்.

அவள் செய்தாள்.

"மெல்லத் திரும்பு!" என்றான்.

திரும்பினாள். புடவைக் கடை பொம்மை போல **"Great Stuff boss"** (பிரமாதமான அமைப்பு பாஸ்) என்றான் கணேஷிடம். அவளைப் பிருஷ்ட பாகத்தில் தட்டி, போ! போய் தூச்சிக்கொள். வருகிறேன்" என்றான்.

"மிஸ்டர் ரத்னா! நீங்கள் இப்போது எடுப்பதிலிருந்து கொஞ்சம் சாம்பிள் காட்டமுடியுமா?" என்றான்.

"எப்போது காட்டவேண்டும்?"

"இப்போது... ஸார் நாளைக்கு ப்ளேனில் பம்பாய்க்குப் போகிறார்."

நானா?

அவர்கள் தயங்கினார்கள். "பணம் கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்கே பேச்சுவார்த்தை எல்லாம் முடித்துவிடலாம் பாருங்கள். இந்த விஷயத்தில் எல்லாம் இழுபறி கூடாது."

"ஏற்பாடு பண்ணலாம். அரைமணி நேரம் ஆகும்... துண்டு துண்டாக இருக்கிறது."

"காத்திருந்தால் போகிறது. என்ன ஸார்!"

"தாராளமாக" என்றேன். கணேஷின் காதின் அருகே சென்று பிஸினஸ் விஷயம் பேசுவது போல், "எதற்குக் காத்திருக்க வேண்டும்?..." என்றேன்.

"பின்னால் தெரியும்" என்றான்.

காப்பியை உறிஞ்சிக் கொண்டே நான் ரத்னாவிடம் "மிஸ்டர் ராஜரத்னம் உங்கள் மனைவியை எங்கே காணோம்?" என்றேன்.

"சரஸு! காயத்ரி எங்கே?"

"தலைவலி என்று சொல்லி உள்ளே போனாள். அவளுக்கு உடம்பு சரியில்லை. இரண்டு நாளாகச் சரியாகச் சாப்பிடக்கூட இல்லை."

"பரவாயில்லை" என்றேன்.

கணேஷ். "காயத்ரி? எக்ஸைட்டிங் நேம்?" என்றேன்.

"ஓ! எஸ்" என்றான் ரத்னா அசட்டுச் சிரிப்புடன்

"காயத்ரிக்கு இதெல்லாம் தெரியுமா?" என்றான் கணேஷ். கண்சிமிட்டினான்.

"தெரியாது!"

சரஸ்வதி என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். "இவரை எங்கேயோ பார்த்த ஞாபகமாக இருக்கிறது." என்றாள். எனக்குக் கன்றுக்குட்டி உதைத்தது.

"உமாகாந்த் காயத்ரியைப் பார்க்க ரொம்ப ஆவலுடன் வந்தார். என்ன இருந்தாலும் நேரில் பார்க்கிறமாதிரி உண்டா?" என்றான் கணேஷ்.

"நான் வரச் சொல்கிறேன். இந்திரா...! இந்திரா....!"

"இந்திரா எதற்கு? நான் போய் அழைத்து வருகிறேன்..." என்று என்னை மறுபடி பார்த்து புன்னகைத்துவிட்டுச் சென்றாள். ஒரு கணம் அந்த சரஸ்வதி என்னை மார்பில் மிதித்தாற் போலிருந்த காட்சியிலிருந்து சிலிர்த்துக் கொண்டு விடுபட்டேன். **(தொடர்ந்து வரும்)**


**பேனா நண்பர் அரங்கம்**








பெயர்: ஏ.விஜயகுமார்.
வயது: 22
முகவரி: 48, ஸ்டேசன் வீதி, வவுனியா.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம்.இஸ்ஸதீன்.
வயது: 26
முகவரி: தம்புள்ள வீதி, கலேவெல.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: எஸ்.சிவகரன்.
வயது: 27
முகவரி: DUSSELDORFER STR-15, 28327 BREMEN, GERMANY.
பொழுதுபோக்கு: சினிமா, உதைபந்து.

பெயர்: எஸ்.உதயநந்தினி.
வயது: 18
முகவரி: 29/1,எதிர்மன்ன சிங்கம் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம்.சரூக்.
வயது: 23
முகவரி: 501,கிரிஸ் டல், தம்புள்ள.
பொழுது போக்கு: பேனாநட்பு, பத்திரிகை.

பெயர்: எம்.தாஹிர்,
வயது: 22
முகவரி: P.O.BOX-2820, SALMIYA 22029, KUWAIT.
பொழுதுபோக்கு: வானொலி, பேனாநட்பு.

பெயர்: எச்.நைஸர் அஹமட்,
வயது: 27
முகவரி: 44,குருநாகல் வீதி, நாரம்மலை.
பொழுது போக்கு: கிரிக்கெட், ரீ.வி.

பெயர்: எம்.ஸியான்,
வயது: 20
முகவரி: 161/3, நவ்பர் மாவத்தை, பிட்வலை, பேருவளை.
பொழுதுபோக்கு: உதைபந்து, சினிமா.

பெயர்: மார்க் அருள்ராஜா,
வயது: 25
முகவரி: NEUDOFER STR-109, 47057, DUISBURG, GERMANY.
பொழுது போக்கு: கிரிக்கெட், உதைபந்து.

பெயர்: வீரசிங்கம் ஸ்ரீதரன்,
வயது: 20
முகவரி: 86/17, மீன்சார நிலைய வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: பத்திரிகை, நாவல்கள்.

பெயர்: எஸ்.இராமச்சந்திரன்,
வயது: 21
முகவரி: 129, பிரதான வீதி, பலாங்கொடை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: முகமட் அக்ரம்,
வயது: 21
முகவரி: 30/ஏ, கட்டுப்பிட்டிய, லிமகஹகொடுவ, ஹந்தஸ்ஸ.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.




படிப்பகம்

www.padippakam.com




# கனவு மெய்ப்பட வேண்டும்

**இதுவரை**

சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்துவைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப்பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.
ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான்.
பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்து சேர்கிறாள்.
கணேஷனும் தேடி வருகிறான்.
கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.
உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்து சேர்கிறாள். பிறிட்டு அழுகிறாள்.
சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா.
கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.
சுமதி பழையதை நினைக்கிறாள்.
கணேசனுக்கும் தனக்குமிடையே காதல் மலர்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறாள்.

**இனி.....**

'நீங்கள்', 'வாருங்கள்' என்றெல்லாம் மிக மரியாதையாகத் தன்னை விளித்துக் கொண்டிருந்த கணேசன், ஓர் இரவுக்குள் அம்மரியாதைகளை எப்படிக் கைவிட்டான்?

மனசுக்குள் ஒரு மூலைக்குள், அவள் வேதனைப்பட்டாள். சட்டென்று ஒரு பயம் வந்து அவள் மனதில் கலந்தது.

●●●

கணேசன் பெண்களின் நுண்மையான மனோபாவங்களை அறிந்தவனாக இருந்தான். காமுகர்கள் மற்றும் கயவர்கள், பெண்களை வீழ்த்தும் கலையில் சமர்த்தர்களாக இருப்பார்கள். கோழிக்கு இரை போடுவது போன்றது, அவர்களின் அன்பு என்பதைப் பெண்கள் அறிவதில்லை. 'கோழி கொழுத்ததும், குழம்புச் சட்டிக்கு' என்பதில் கயவர்களுக்கு இருக்கும் தெளிவு, பெண்களுக்கு இருப்பதில்லை.

சுமதிக்கு உள்ளே இருக்கும், ஈரமயமான, அன்பு சுரக்கும் இதயப் பகுதியை, கணேசனின் வார்த்தைகள் தொட்டன.

"சுமதி.. நான் உங்களை நேசிப்பதும் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுவதும், வேறு எதற்காகவும் என்று நினைத்துவிடாதீர்கள். என்னைப் புரிந்து கொண்ட, ஒரு ஆத்மா எனக்குத் துணையாக வேண்டும் என்பதுதான் காரணம். நினைவு தெரிந்த நாளில் இருந்தே, யாருடைய அன்புக்கும் பாத்திரப்படாத அனாதையாக வளர்ந்தவன், சுமதி, நான். என்னைப் பெற்றவள் முகம் எப்படி இருக்கும் என்றுகூட எனக்குத் தெரியாது. கிராமத்து ஜனங்கள் அவர்கள் முகத்தைப் படமாகக் கூட எடுத்து வைத்ததில்லை. அம்மா என்று நான் அறிந்த பெண், என் அப்பா சேர்த்துக்கொண்ட ஒருவளைத்தான். அந்த சித்தி, கதைகளில் வருகிறமாதிரி கொடுமைக்காரி என்று நினைத்து விடாதீர்கள். அந்த அம்மாள் நல்லவள் தான். அப்பாதான் சித்தி மாதிரி நடந்து கொண்டார். துணி ஆலைத் தொழிலாளி அவர். தன் வேலை உண்டு. மாலை ஆனால் சாராயம் உண்டு. இரவானால், துணை உண்டு என்று வாழ்ந்தவர். நான் இருக்கிறேன் என்கிற நினைப்பே, அவருக்கு எப்போது வரும் என்கிறீர்களா? மதிப்பெண் பட்டியலில், 'தந்தை' என்று போட்டிருக்கிற இடத்தில் அவரின் கையொப்பம் பெறப் போகும் போதுதான். காலையில் சித்தி ஓர் உருண்டை கம்பங்களியும், வெங்காயமும் தருவாள். பொடி வெங்காயம் கடித்தால் காரம் மூக்கில் ஏறும், என் பக்கத்தில் பையன்கள் உட்காரவே அசூயைப் படுவார்கள். எனக்குப் பள்ளிக் கூடத்தில் பொடி வெங்காயம் என்றே பேர். காமராஜர் புண்ணியத்தால், எங்கள் பள்ளியில், மதிய உணவு போடுவார்கள். ஏதேனும் காய் போட்ட ஒரு சாம்பார். ஏதேனும் ஒரு காய் பொரியல் அல்லது கூட்டு. பல சமயங்களில் கூட்டோ பொரியலோ இருக்காது; அதனால் என்ன? எனக்கு அந்த சாம்பார் சாதமே அமுதம் சுமதி. பி.யு.சி. படிக்க நகரத்துக்கு வந்தேன். நகர வாழ்க்கை என்றால் என்ன என்பதும், நகரத்து மக்களின் சொகுசான வாழ்வும் அப்போதுதான் எனக்குத் தெரியவந்தது. இவ்வளவு வெளுப்பான வேஷ்டியும், இப்படி அழகான வண்ணங்களிலும், தினுசுகளிலும், பேண்ட்டுகளையும் சட்டைகளையும், அதுவரை சினிமாவில் பார்த்திருந்த எனக்கு நிஜத்திலேயே அவைகளைப் பார்க்க நேர்ந்தது, எவ்வளவு பெரிய சந்தோஷத்தை, பரவசத்தைத் தந்தது தெரியுமா?



"சுமதி! தோசை என்றால் எனக்கு உயிர், தெரியுமா? தோசை, என்னைப் பொறுத்தவரை ரொம்ப ஆடம்பரமான உணவு. எங்கள் கிராமத்தார்க்கே அது ஆடம்பரப்பொருள், தெரியுமா உங்களுக்கு? எங்கள் ஊர்ப்பண்ணையார் வீட்டில் தினம் தினம் இட்லி, தோசைக்குப் போடுவார்கள் என்று சித்தி சொல்லும். எனக்கு அது ஆச்சரியமாய் இருக்கும். தீபாவளி அன்றைக்கு எங்கள் வீட்டில், 'தோசைக்குப் போடுவார்கள். மூணு வேளைக்கும் தோசை; அப்பா ஆட்டுக்கறி எடுத்து வருவார். ராவுத்தர், அன்றைக்கு மட்டும் எட்டு ஆடு அடிப்பார். சேனாவரையர் வாய்க்காலில் கால் வைக்க முடியாது ஆட்டு ரத்தமாய் ஓடும். எருக்கஞ்செடிப் புதர்களுக்கு மறைவில் உட்கார்ந்துவிட்டு வந்து சேனாவரையர் வாய்க்காலில் கால், கழுவ முடியாது. கால் மைல் நடந்து மதகடிக்குத்தான் போக வேண்டும். தீபாவளிக்கு முந்தின நாள், ஊர்ப் பொதுவிடத்தில் இருக்கிற ஆட்டுக் கல்லில்தான் மாவரைப்போம். ஆளுயர ஆட்டுக்கல். அதாவது, நான் சின்னப் பையனாய் இருந்த காலத்தில், எனக்கும் உசரமான ஆட்டுக்கல், கடகட வென்று சுத்திக் கொண்டே இருக்கும். படையாச்சி மாமாதான் பெண்டுகளை வரிசைப்படி நிறுத்தி வைத்து, 'ஒவ்வொருத்தியாய் வந்து அரைச்சிக்கிட்டு போங்கடி' என்று கார்வார் பண்ணிக் கொண்டிருப்பார். நான் அவர் கையாள். 'எலேய், கணேசு, அது ஆரவ, வரிசைக்குள்ளே புகுர்றது? வந்தா, சீலையை உரிஞ்சுப் பூடுவேன்னு சொல்லு' என்பார். வரிசைக்குள், எக்கா, எத்தை, பெரியம்மா என்று நைஸாகப் பேசி புகுந்து கொள்கிற பெண்டுகளிடம் நான் போய், 'தே.....யாரது வரிசைக்குள் புகுர்றது மாமா வந்தால் சீலையை உரிவாராம்' என்பேன். 'அடி' 'ஆத்தே...' என்று ஆரம்பித்து அந்த அம்மாள், பேசுவாள் பாருங்கள். காது கொடுத்துக் கேட்க முடியாது. அப்படி ஆபாசமாகப் பேசுவார்கள். பேச்சுத்தான் அப்படி, மற்றபடி எங்கள் ஊர்ப்பெண்கள், காய்ச்சாத பால்தான் போங்கள். ராத்திரி முழுக்க, கண்விழித்து கார்வார் பண்ணி, ஆட்டுக்கல் சத்தத்தைக் கேட்டது, எவ்வளவு இனிமையான, அற்புதமான விஷயம், தெரியுமா? சுமதி, எனக்குத் தீபாவளி என்பதே தோசைதான். கறிக்குழம்பில், தோசையை நனைத்து, மூணு வேளையும் தோசையை வளைப்பேன் பாருங்கள். இப்போ நினைத்தாலும், எப்படி அவ்வளவு தின்னோம் என்று இருக்கிறது!"

"கல்லூரியில் பி.யு.சி சேர்வதற்காக, ஒரு காலைப்பொழுதில் நானும் அப்பாவும் திருச்சி ஜங்ஷனுக்கு வந்து சேர்ந்தோம். ஆறு ஆறரை மணிபோல் வந்தோம். ராத்திரிக் கண்விழிப்பில் அப்பாவுக்குப் பசித்தது. சாப்பிடலாம் என்று என்னை ஜங்ஷனுக்கு எதிரே இருந்த ஒரு உடுப்பி ஓட்டலுக்கு அழைத்துச் சென்றார். என்ன ஆச்சரியம்! சுமதி. ஓட்டலில் ஒவ்வொருத்தரும், இட்லியும், தோசையும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இங்கே தினம் தினம் இட்லியும் தோசையும் தின்கிறார்கள் என்பதைக் காண, இப்படியும் மனிதர்கள் நம் மோடவே வாழ்கிறார்களே என்று இருந்தது எனக்கு..... ஆமாம் ஏன் உங்கள் கண்கள் கலங்குகின்றன, சுமதி? தூசா? துடைத்துக் கொள்ளுங்கள்.... இந்தாருங்கள்..."

கணேசன் தன் புத்தம் புதிய வெண்மை நிறம் கொண்ட கைக்குட்டையை எடுத்துக் கொடுத்தான். சுமதி, நன்றி சொல்லி அதை மறுத்துவிட்டு, தன் கைப்பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து, அதில் மை, ஒட்டாமல் நாசூக்காகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

இருட்டியதும் அவர்கள் எழுந்து வீடு நோக்கி நடப்பார்கள். அப்போது அவள், ஞானம் தியேட்டருக்குப் பக்கத்தில் புதிதாக எழுந்திருக்கிற அண்ணா நகர்க் குடியிருப்பில் இருந்தாள். அவனோ, அதற்கும், கணிசமான தூரத்தில், மீண்டும் நடந்து வந்த வழியே திரும்பி நடந்து வீடு போய்ச் சேர்வான்.

"உங்களுக்கு எதுக்குச் சிரமம், கணேஷ்?"

"பரவாயில்லை. உங்களுடன் நடப்பது எனக்குச் சிரமமாகவே இருக்காது. மாறாக, சந்தோஷம்; தயவு செய்து என்னை அனுமதியுங்கள். சுமதி. சின்னஞ்சிறு வயதிலிருந்தே வறுமை, பெற்றோர் ஆதரவு இன்மை, இப்படியே நலிந்து நலிந்து வளர்ந்து விட்டேன். உங்களிடம் இருக்கும் போதுதான், முதல் முதலாக ஒரு சினேகத்தை உணர்கிறேன். என் சந்தோஷமும், என் உயர்வும் ஒரு பொருட்டாக நினைக்கிற முதல் மனிதரே நீங்கள்தான் சுமதி. தயவுசெய்து என்னை அனுமதியுங்கள்..."

அந்த மன்றாடுகிற குரல் அவளை இளக்கிவிடும். அவன் விழி ஓரம் கசிந்து, வரலாமா, என்று தயங்கி நிற்கும் கண்ணீர் உண்மையில் அவளைச் சுடவே செய்தது. 'ஐயோ! பாவம்' என்று இருக்கும் அவளுக்கு.

கணேசன் அர்ச்சுனன் இல்லைதான். ஆனாலும் அவன் கையில் காண்டீபம் இருந்தது. அதில் வைத்து எய்ய வசதியாகப் பல அஸ்திரங்களை அவன் வைத்திருந்தான். அதில் ஒன்று மோகன அஸ்திரம். புகழ்தல் இல்லாத தொனியில், அவன் அவளைப் புகழ்வான். பேச்சோடு பேச்சாக, இனிப்புக்குள் மருந்தை வைத்துத் தருவது போல, அப்புகழ் மொழிகளை மிகச் சாமர்த்தியமாகப் பயன்படுத்தினான்.

"இந்த ஆகாய வண்ணச் சேலை, உங்களுக்கு மிகவும் அழகாய் இருக்கிறது. ஆகாயத்துக்கு எல்லை இல்லை. உங்களுக்கு...."

"ஏன் முடிப்பது தானே?" என்பாள் சுமதி.

"வேண்டாம்" என்பான். அவன்.

ஒரு நாளைக்கு நூலகத்திலிருந்து ஒரு புத்தகம் கொண்டு வந்திருந்தான்... நா.பார்த்தசாரதி எழுதிய 'குறிஞ்சி மலர்' என்கிற நாவல் அது. கதாநாயகன் அரவிந்தன், கதாநாயகி பூரணியைப் பற்றி

**- பிரபஞ்சன் -**

எழுதியிருந்த கவிதை ஒன்றை அடிக்கோடிட்டு அவளிடம் தந்தான் கணேசன். "எவ்வளவு அழகாக இருக்கிறது, பாருங்கள்!" என்றான் மேலும்.

**'நிலவைப் பிடித்து**
**சிறு கறைகள் துடைத்து**
**குறு முறுவல் பதித்த முகம்.'**

சுமதி, அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன், மனலுக்குள் ஏதோ எழுதி அழித்துக் கொண்டிருந்தான். மீண்டும் பக்கங்களைப் புரட்டினாள் சுமதி. அடிக்கோடிட்டு இன்னொரு கவிதை.

**'தின்பதற்கு என்று இல்லாமல்**
**தின்னப்படுவதற்கென்றே அமைந்த**
**இதழ்கள்...'**

இம்முறை சுமதியால் அவன் முகம் பார்க்க முடியவில்லை.

இப்படித்தான் மழைநீர் மாதிரி இடையறாது பெய்து கொண்டே இருந்தான் கணேசன். நீர், எந்தத் தரையைத்தான் இளகச் செய்யாது? சுமதி கொஞ்சம் கொஞ்சமாக இளகி, நைந்து, மென்மையாகிக் கொண்டிருந்தாள்.

**(தொடர்ந்து வரும்)**

---

# 'வேஷம்'

**கமலினி நடராஜா**

இரவு மணி பதினொன்று முப்பது.

வீ.சி.ஆரில் "மின்சாரக் கனவு" பார்த்து, அரவிந்தசாமிக்காய் பரிதாபப்பட்டு தொலைந்துவிட்ட தூக்கத்தைத் தேடிக்கொண்டிருக்கும்-

என் முழுப்பெயர் கோகுலன். செல்லாச்சி உட்பட அன்புக்குரிய அனைவரது அழைப்பிலும் கோகுல். ஆனால் யூனிவேர் சிற்றியில் 'மூளையுள்ள தறுதலைகள்' மட்டும் என்னை ஏனோ 'கோக்' என்றுதானழைப்பார்கள்.

நான் பேராதனை பல்கலைக்கழகத்தில் 'பல் மருத்துவம்' படித்துக் கொண்டிருக்கிறேன். இப்போது இருவார விடுமுறையில் இல்லம் வந்து சரியாக முப்பத்தாறு மணி நேரங்கள் கரைந்திருக்கின்றன.

"ஐயோ! கடவுளே, இதென்ன தொல்லையப்பா எனக்கு? மனுசன நிம்மதியா படுக்கக்கூட விடுதில்லையே இந்த கிழட்டு மனிசி. இஞ்சாருங்கோ ஒருக்கால் வந்து என்னெண்டு கேளுங்கோ உங்கடை அம்மாட்ட..."- செல்லாச்சியின் பிரியத்துக்குரிய மருமகள் உரத்த தொனியில் இரைந்தாள்.

★-★-★

செல்லாச்சி- 'செல்லம்மா ஆச்சி' படிப்படியாக மருவியதால் உண்டான 'சுருக்' பெயர்.

எழுபது ஆண்டுகளாய் வாழ்வை அனுபவித்த திருப்தி இல்லாத களையிழந்த முகம், பஞ்சாய் நரைத்துப் போன தலைப்பிரதேசம், குழிவிழுந்து ஒளிமங்கிப் போன கண்கள், சுருங்கி, வலுவிழந்து போன அவயவங்கள்....ஆச்சியை நினைத்தவுடன் ஞாபகத்துக்கு வருபவை இவைதான்.

"கல்யாணம் கட்டி பொஞ்சாதிசொல்கேட்டபின் பெட்டிப்பாம்பாகிப் போனாராம்....!"



இன்றைய பின்னிரவில் மட்டுமல்ல, எப்போதுமே "செத்துத்தொலை!" என்று உபதேசிக்கும் இதே மகனுக்காக அவள் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்லவாம். மகனும் ஆரம்பத்தில்- தாய் கீழ்ப்பிள்ளையாயிருக்கையில் அன்பாகத்தான் இருந்தவராம். கலியாணம் கட்டின பிறகுதான் பொஞ்சாதியின்ர சொல்கேட்டு பெட்டிப்பாம்பாகிப் போனாராம். காலப்போக்கில ஆச்சி அந்தக் குடும்பத்துக்கு ஒட்டாத உறவாய், விரும்பாத சுமையாய் ஆகிப் போனாளாம். என் பாட்டி சொல்லியிருக்கிறாள்.

நான் கண்டியிலிருந்து வரும்போதெல்லாம்- "ஏனடா மோனை கோகுல், என்ன எங்கையெண்டாலும் ஒரு அனாதை ஆச்சிரமத்தில சேர்த்து விடமாட்டியே? இஞ்சே...என்ர பிள்ளைக்கு எத்தின நாளைக்குத்தான் பாரமா இருக்கிற...? ஏன் மோனை அடுத்த முறை வரேக்குள்ள விசாரிச்சுக்கொண்டு வாறியே...?"

மலையளவு சோகத்தை மனதில் வைத்துக் கொண்டு இப்போதும் மகனை விட்டுக் கொடுக்காமல் எப்படிப் பேச முடிகிறது இந்த ஆச்சியால்?

"ஓம் ஆச்சி. அடுத்த முறை வரேக்குள்ள கட்டாயம் விசாரிச்சுக்கொண்டு வாறன்-" வேறென்ன சொல்ல முடியும் என்னால்?

பாவம் ஆச்சி. நான் சின்னவனாயிருக்கையில் 'என்ர முதல் பேரன் இவன் தானே.' எண்டு அள்ளிக் கொஞ்சுவாளாம். ஒவ்வொரு நாளும் ஏதாவது தின்பண்டம் கொண்டு வந்து எனக்காகக் கொடுப்பாளாம். நான் பள்ளிக்கூடத்தில இருந்து வர கொஞ்சம் தாமதமானால் துடிச்சுப் போவாளாம். என் அம்மா சொல்லியிருக்கிறாள்.

●●●

புலர்ந்தும், புலராத காலைப் பொழுது.

இந்தமுறை ஆச்சிக்காக வாங்கி வந்த மூட்டுவலித் தைலத்தோடு அவளைப் பார்க்கப் போனேன்.

தைலத்தை வாங்கி பூரித்து, கண்கலங்கி "மோனை கோகுல் எனக்கு... செ....செத்துப் போகணும் போல இருக்குடா மோனை... நான்.... என்னத்துக்கு இனியும் உசிர் வாழணும்....? ஆண்டவா... என்ர உசிர எடுக்கமாட்டியே....?" விரக்தியின் விளிம்பில் நின்று புலம்ப ஆரம்பித்தாள். "ஆச்சி நீ எதுக்காக சாகோணும்? நூறு வயசு வரைக்கும் நீ வாழுவே..."- தீர்க்கதரிசி போல் நான் கூறி வந்து முழுதாய் ஒருநாள் தாண்டவில்லை. அனைவரதும் விருப்பம் போல ஆச்சி செ...செத்துப் போனாள்.

அவள் இழப்பை என்னால் நம்பவோ, தாங்கவோ முடியவில்லை. மனசு 'ஹோ' வெனக்கதறியது.

சாதாரணமாய் அடிக்கடி வரும் நெஞ்சடைப்பு அவள் உயிருக்கு எமனாகிப் போனது.

"ஐயோ அம்மா! எங்கள விட்டுட்டுப் போட்டீங்களே? உங்களுக்கு நாங்க என்ன குறவச்சோம் அம்மா...? எப்படி... எப்படியம்மா எங்கள விட்டுப் போக உங்களுக்கு மனசு வந்திச்சு....? ஐயோ...."

"எங்கடை தெய்வமா இருந்து வழி காட்டினீங்களே அம்மா, இனி நாங்க என்ன செய்வம்.....?"

"என்ரை அம்மாவே என்னால தாங்க முடியேல்லையே ஐயோ....ஐயோ...."

சே....என்ன மனிதர்கள் இவர்கள்?

மறுநாள்

"என்ன கோகுல், லீவும் முடியேல்ல. அதோட உன்ரை ஆச்சியின்ர எட்டாஞ் சடங்குக்கும் நிண்டு போகாம....ஏன் புறப்படப்போறியே....?"

"ஓமப்பா என்னால் இதுகளக் கே.... கேட்டுக்கொண்டு இஞ்ச இருக்க ஏலாமக் கிடக்கு"- நான் சொல்ல புரிந்து கொண்டவராய் அப்பா சென்றுவிட என் செல்லாச்சிக்காய் இரு சொட்டுக் கண்ணீர் விட்டு பயணப்பட ஆரம்பித்தேன், கண்டி நோக்கி.

"என்ர தெய்வமே அம்மா....' என்னால தாங்க முடியேல்லையே...."- ஆச்சியின் மருமகள் தொடர்ந்து அழுது(???) கொண்டிருந்தாள். ■



படிப்பகம்

www.padippakam.com

# மனப் பொருத்தம்

என்.ஆர்.எஸ். [illegible]

விஞ்ஞான ஆசிரியை பரமேஸ்வரி, விஞ்ஞான ஆய்வு கூடத்தில் ஆழ்ந்த சிந்தனையில் அமிந்திருந்தாள். பாட ஓய்வு நேரம் தான். ஐம்பத்திநாலு வயதை அடைந்துள்ள டீச்சருக்கு இன்னமும் ஒரு வருடத்தில் ஓய்வு பெறலாம்; அல்லது ஐந்து வருடங்களுக்கு சேவை நீடிப்பும் பெறலாம். பரமேஸ்வரி டீச்சருக்கு அதுபற்றிய யோசனைபோல்தான் தெரிகிறது.

டீச்சருக்குத்தான் என்ன குறை? இளம் வயதினிலே ஆசிரியர் சேவையில் சேர்ந்து, பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியையாக சேவை மூப்பு அடிப்படையில் உப-அதிபராகவும் கடமைபுரிந்து வருகிறார். கணவர் கந்தசாமியும் பட்டதாரி ஆசிரியராக சேவை செய்தவர்; பின்னர் வருமானவரித் திணைக்களத்தில் உயர் அதிகாரியாக பணியாற்றி வருகிறார். இத்தம்பதிக்கு ஆசைக்கு ஒன்று ஆஸ்த்திக்கு ஒன்று என்று ஒரு மகளும், ஒரு மகனும்தான்.

மகள் மூத்தவள், கணக்கியல் பரீட்சையில் சித்திபெற்ற பட்டயக் கணக்காளர் ஒருவரை திருமணம் முடித்து லண்டன் மாநகரில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

கண்ணுக்குக் கண்ணாக மூன்று வயது நிரம்பிய செல்வமகன் மட்டும். அப்போ கந்தசாமி தம்பதிகள் பேரப் பிள்ளையையும் பார்த்துவிட்டார்கள். ஒரு முறை லண்டன் மாநகர் போய் வந்துவிட்டார்கள். "லண்டன் றிட்டேன்" என்று பெருமையாகவும் சொல்லிக் கொள்வார்கள்.

எல்லாம் வல்ல மருதடிப்பிள்ளையாரை வேண்டுதல் செய்து, பிறந்த இத்தம்பதியினரின் அருந்தவப் புதல்வன்தான் ஐங்கரன், தற்பொழுது பல்கலைக்கழகத்தில் இறுதி ஆண்டு மருத்துவப்படிப்பு பரீட்சையும் எழுதப்போகிறான்.

இன்னமும் சில மாதங்களில் அவன் வைத்திய கலாநிதி ஆகிவிடுவான். டீச்சர் அம்மாவின் மூளை மேலும் வேலை செய்தது. மகன் டாக்டர் ஆனவுடன் தாங்களும் ஓய்வு பெற்று தங்கள் பெரிய வீட்டையும் நல்ல வாடகைக்குக் கொடுத்துவிட்டு, காரையும் விற்றுவிட்டு அப்படியே நல்லபடியாக இங்கிலாந்து சென்று மகள்- மருமகனுடன் சேர்ந்து குடியேறி நிம்மதியாக வாழலாம் என்று கற்பனை சிறகடித்துப் பறந்தது.

பரமேஸ்வரி டீச்சருக்கு நிம்மதியான பெருமூச்சு பிறந்தது. 'அப்பாடா... அந்த மானிப்பாய் மருதடி விநாயகப் பெருமானின் அருளாலே ஏதோ நிம்மதியாகவும் சிறப்பாகவும் வாழ்கிறேன், என்று மருதடிப் பிள்ளையாரை மனதில் நினைத்து வணங்கிக் கொண்டாள். இந்தப் பக்திப்பரவச நிலையிலும் டீச்சர் பெரிதாக புன்முறுவல் பூத்து, தன் இளமைக்கால நினைவுகளையும் திருமணத்தையும் யோசித்து, சிரிப்புடன் அசைபோட்டுக் கொண்டாள்.

கந்தசாமியார், பரமேஸ்வரியார் திருமணப்பேச்சும், கலியாண வைபோகமும் அபூர்வமாகவும் அதிசயிக்கத்தக்க நிலையிலும் தான் நடைபெற்றது.



இளவயதில் மானிப்பாய் கல்லூரி ஒன்றில் கற்பிக்கத் தொடங்கிய பரமேஸ்வரி விரைவில் விஞ்ஞான பயிற்சியையும் முடித்துக் கொண்டு அங்கேயே விஞ்ஞான ஆசிரியையாக சேவையாற்றிக் கொண்டிருந்தார்.

கந்தசாமியாரும் இந்தியா சென்று பட்டப் படிப்பை முடித்து மானிப்பாயில் ஆண்கள் கல்லூரியில் உயர் வகுப்புகளுக்கு கற்பித்துக் கொண்டிருந்தார். எப்படியோ கலியாணத் தரகர் ஒருவர் இவர்களை மோப்பம் பிடித்து பெற்றோர் காதில் போட்டுவிட்டார்.

கலியாணப் பேச்சுக் கதையும் எப்படியோ இவர்கள் காதிலும் எட்டிவிட்டது. கல்லூரிகள் இரண்டும் ஒரே பிரதேசத்தில் அமைந்திருப்பதால் கந்தசாமி மாஸ்டரும் பரமேஸ்வரி டீச்சரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள், சிரித்துக்கொண்டனர், பின்னர் மனமொத்து பேசிக்கொண்டனர்...

இருவர் மனங்களும் ஒருமித்துக் கொண்டு, இல்வாழ்வில் ஐக்கியமாகிவிடுவது என்று தீர்மானித்துக்கொண்டனர்.

கலியாணத்தரகர் நவரத்தினமும் இரு தரப்பு பெற்றோர் வீடுகளுக்கும் சென்று மாஸ்டர்- டீச்சர் விடயத்தை எடுத்துச் சொல்லி, திருமணத்தையும் விரைவில் முடிக்க வேண்டும்; அல்லது தேவர்களுக்குரிய காந்தர்வ மணமும் நடைபெற்றுவிடும் என்று ஒரு போடும் போட்டுவிட்டார். இனி என்ன செய்வது? பெற்றோரும் செயலில் இறங்கினர்.

அடுத்து முக்கிய வேலையாக நல்ல நாளாக சுபநேரம் பார்த்து இருபகுதியாரும், மாப்பிள்ளை- பெண்பிள்ளை திருமண ஜாதகப் பொருத்தம் பார்ப்பதற்கு பிரபல சோதிடரிடம் சென்றனர். இங்கேதான் இரு பகுதியினருக்கும் பேரிடி பலமாக விழுந்தது.

அந்தப் பிரபல ஜோதிட மணியும் மணமக்களுக்கு விவாகப் பொருத்தம் கிடையாது, என்று அடித்தே சொல்லிவிட்டார். வேறு பல சோதிட வித்துவசிரோன்மணிகளிடமும் அணுகிப்பார்த்தார்கள்.

அவர்களும் எந்த வகையிலும் பொருத்தமில்லை.... இல்லை.. இல்லை என்றே சொல்லிவிட்டார்கள். ஒருவர் சொன்னார், "தாலிப் பொருத்தமில்லை... நீண்டகாலம் தம்பதியர்களாக வாழமாட்டார்கள்." என்று மற்றவர் மொழிந்தார், புத்திரபாக்கியம் இல்லை என்று... இப்படியே பலவித கணிப்புகள்.

**அந்தப் பிரபல ஜோதிடமணி விவாகப் பொருத்தம் கிடையாது என்று அடித்துச் சொல்லிவிட்டார்.**

இளவயது பரமேஸ் டீச்சர், இடிந்து போய், செய்வதறியாது திகைத்துப்போய் எல்லாப் பாரத்தையும் மருதடிப்பிள்ளையார் மேல் போட்டுவிட்டாள். முற்று முழு மனத்தால் கந்தசாமி மாஸ்டரை வரித்துவிட்ட அவள், வேறு எவரையும்- எக்காரணத்தினாலும் திருமணம் செய்வதில்லை என்று தீர்மானித்துவிட்டாள். இந்த நிலைப்பாட்டில் தான் கந்தசாமி மாஸ்டரும் மனதில் மிக்க உறுதியுடன் இருந்தார்.

தமிழ்நாடு சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதுமானி கலைப்பட்டம் பெற்றதுடன், அப்போதைய பகுத்தறிவுவாதக் கருத்துக்களினால் மிகவும் கவரப்பெற்றவர்.

இளம் துடிப்பான வாலிப உள்ளம். மேலும் சொல்லவும் வேண்டுமோ? பெற்றோர் மறுப்பிலும் உற்றார் உறவினர் வீண் பேச்சுகளிலும் அதிபர், ஆசிரியர்கள் ஒத்தாசை கைகொடுப்பிலும் கந்தசாமியார்-பரமேஸ்வரியார் திருமணம் இனிதாக சிறப்பாக நடந்து முடிந்துவிட்டது.

"டீச்சர்... டீச்சர்.. உங்களைக் கூட்டிக் கொண்டு போவதற்கு அவர் வந்து காரில் காத்திருக்கிறார்!" என்று சக ஆசிரியை வந்து சொன்னவுடன்தான் பரமேஸ்வரி டீச்சர் சுயஞாபகம் வரப்பெற்றாள். கல்லூரி மணி அடித்ததும் டீச்சர் அம்மா உல்லாசமாக கணவனின் பக்கத்தில் ஏறி, இனிய நினைவுகளுடன் வீடு திரும்பிக்கொண்டிருக்கிறாள். ■

# சூட்சுமம்

"அம்மா"

"என்னவாம்"

"எனக்கு வேண்டாம்மா இப்ப. அப்பா கிட்ட சொல்லும்மா."

"ஏண்டி இப்பிடி அடம் பிடிக்கிறாய், முதலில் வரும் சீதேவியை வேண்டாம் போன்னு துரத்தினா அப்புறம் அதை நாம தேடியலையுறபோது சண்டித்தனம் பண்ணி நம்மை உதைச்சுடும்!"

"துரத்தலை, இப்ப வேணாம் என்கிறன் அவ்வளவுதான். பிரண்ட்ஸெல்லாம் கேலி பண்ணுறாங்க. என்ன அப்பிடி வயசாகிப் போச்சு. பதினெட்டு தானே. படிக்கணும், முடிச்சதும் கல்யாணம் பண்ணிக்கலாம்."

'பாடும் பறவையின் எதேச்சையான பருவம். அதை வெறும் கல்யாணக் கூண்டுக்குள் சிறைப்படுத்தி, அநுபவிக்கவென்று விரிந்துகிடக்கும் குதூகலங்களையெல்லாம் எப்போ அநுபவிப்பது.?'

அப்புறம் குழந்தையைத் தாலாட்டவே நேரம் போதாது. சிண்டும், சிடுக்குமாக சிடுசிடுத்து, சிரமம் பாராமல் கடமை கடமையென அடித்துக்கொண்டு, வாழ்வின் இறுதிவரை அந்தந்தக் கட்டங்களில் ஒவ்வொருத்தருக்காகவும் தன்னை மறந்து வாழ்ந்து.... சே... அற்பம். முடிந்தவரை சுதந்திரமான சுகங்களை, பெற்றவர்களுடன் இருக்கும் போதுதான் பெற்றுக்கொள்ளலாம். அதை இத்தனை விரைவில் இழப்பதா? சிநேகிதிகள் சேர்ந்து முடிவெடுத்துவிட்டபோதுதான் வெளிநாட்டு மாப்பிள்ளையொன்று தகைந்தது. தள்ளிப் போடப் பார்த்து முடியாமல் தவித்தாள் ரஜிதா. தந்தையின் கண்டிப்பின் முன்னால் வாயடைத்து நின்றவள் அன்னையிடம் முறைப்பட்டாள்.

"இந்தா எதையும் அப்பாவைக் கேட்டுக் கொள்!" அம்மா முற்றுப்புள்ளி இட்டுவிட்டாள்.

மாப்பிள்ளை வந்து தடல்புடலாக திருமணம் முடிந்தது. இரண்டு வாரங்களில் மறுபடியும் போயாச்சுது. இப்போதெல்லாம் அவள் சிநேகிதிகளை அடிக்கடி சந்திச்சுப் பேசுவதில்லை. அரட்டை- ஊகும், கிடையாது.

தனிமை, தனிமை,

கற்பனையில் உலவி, கனவுகளில் தன்னை மறந்து; இனிமை, தனிமையில் இனிமைகாணும் சுகம் நிறைய.

"அம்மா"

'என்னவாம்?'

"அப்பா என்ன சொன்னார்?"

"எதைப்பற்றி?"

"வந்து.. வ..ந்து. வி.. விசாபற்றி!"

"ஓ.....!"

"என்னம்மா நீ, கேலி பண்ணுமாப் போல.-"

**"...இப்ப வேணாம் என்கிறன், என்ன அப்பிடி வயசாகிப் போச்சு பதினெட்டுத்தானே... படிக்கணும்..."**

"இல்லை, கல்யாணமே வேண்டாம். எங்களுக்குள் நிறைய ஒப்பந்தங்கள், எதிர்பார்ப்புக்கள் உண்டு. பிரண்ட்ஸை விட்டு எப்பிடிப் போறது என்றெல்லாம் சொல்லி மறுத்து ஒதுக்கிய நீ.. நீ பதினைந்து நாட்களில்.. ம்.."

"விசாவுக்கு ஒழுங்கு படுத்திவிட்டு அப்பாவுக்கு சொல்லுகிறேன் என்றவர் அதுதாம்மா..." இழுவையுடன் நின்ற மகளை கேலி இழைய கேட்டாள்,

"உனக்கு சொல்லமாட்டாராக்கும்...!"

அந்த நேரம் பார்த்து டெலிஃபோன் அலற ரஜிதா ஆவலுடன் பாய்ந்தாள். அங்கிருந்தே அம்மாவுக்குச் சொன்னாள், "அம்மா இன்னும் சில நாட்களில் ஓகேயாம்."



ஜெயமணி

பூரிப்பில் முகம் பூத்துப் பொலிந்தது, 'இத்தனை விரைவாக மாப்பிள்ளை செயல்பட்டாரா? ம்.... வாழ்வின் சூட்சுமம் புரிந்து கொள்ளாதவரை என்னென்னவோ சித்தாந்தங்கள். புரிபட்டுவிட்டால் அதுவே வேதமாகிவிடும், இல்லையென்றால் உலகம் அது ஏது.?' ரஜிதாவின் அம்மா தனக்குள் சிரித்துக் கொண்டாள். ■

# பிள்ளை குட்டிகள்

நேரம் பகல் பத்துமணியை நெருங்கிக் கொண்டிருந்தது. நேற்று முழுவதும் பெய்த மழையால் தூசி தட்டப்பட்டிருந்த தாவரங்களிடம் சூரியக்கதிர் சுகம் விசாரித்துக் கொண்டிருந்தது. சீனியப்பு அந்தக் குடிசையின் ஓரமாக இருந்த திண்ணையில் இருந்தபடியே காலை உணவை உட்செலுத்திக் கொண்டிருந்தார். சாப்பிட்டுக் கொண்டிருந்தவருக்கு திடீரென உணவு புரைக்கேறியது. சாப்பாட்டை அப்படியே திண்ணையில் வைத்துவிட்டு மண்பானையில் இருந்த தண்ணீரை மடமடவெனக் குடித்தார்.

'உம்.. என்னை யார் நினைக்கிறது? கந்தப்பராய் தானிருக்கும். இன்டைக்கு ஞாயிற்றுக்கிழமை, காலமை வந்து சந்திக்கிறேன் எண்டு சொன்னனான். எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். என்ன அவசரம், பின்னேரம் போய் சந்திக்கலாம்.' என்று வாய்க்குள் முணுமுணுத்தார் சீனியப்பு.

★★★

சீனியப்புக்கு வயது எழுபது இருக்கும். ஆனாலும் பழைய கால குரக்கன் மாவுக்கும் ஒடியல் மாவுக்கும் ஒத்தாசையாக பறைசாற்றுகின்ற உடம்பு. இனம்- சனம் என்று கூறிக்கொள்ளுமளவிற்கு யாருமில்லை. திருமணம் செய்யாத தனிக்கட்டை. ஆனாலும் ஊரில் உள்ளவர்களின் பற்றுக்காரணமாக எல்லோருக்கும் இவர் சீனியப்பு.

**"என்ரை பிள்ளையள் எனக்குத் தந்த நன்கொடை– இதை யாரும் மாற்றேலாது."**

கந்தப்பர், சீனியப்புவின் உற்ற நண்பர். அதே ஊரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவருக்கு, வளர்த்து ஆளாக்கிய தொண்டுக்காய் பிள்ளைகள் கொடுத்த உபகாரம் வயோதிபர் இல்லம். மூன்று பிள்ளைகளும் மனைவியும் வெளிநாட்டில் சுகபோகமாக வாழ்ந்து கொண்டிருக்க, சொந்த மண்ணை தன் சொத்தாக மதித்து இங்கேயே தங்கிவிட்டார் கந்தப்பர். வயது ஏற, நடை தள்ளாட அயல் ஊரில் இருந்த வயோதிபர் இல்லத்தை தன் வசிப்பிடமாக மாற்றிக் கொண்டார். இப்போது உறவுமுறை சொல்லிக் கொள்வதற்குக்கூட கடிதமோ, பணமோ பிள்ளைகளிடமிருந்து வருவதில்லை.



யாழ். ஞானகணேசன்

சீனியப்பு எத்தனையோ தடவைகள் கந்தப்பரிடம் கேட்டுப் பார்த்தார்,

"நீ என்னோடை வந்திரேன்."

கந்தப்பர் சொன்னார்: "நீயே உன்னைப் பாக்கமுடியாமல் இருக்கிறாய். நான் இன்னொரு பாரம் உனக்கு?" சீனியப்புவுக்கு கோபம் வந்தது. தாறுமாறாகப் பேசினார். முடிவாக கந்தப்பர் சொன்னார்: "என்ரை பிள்ளையள் எனக்குத் தந்த நன்கொடை– இதையாரும் மாற்ற முடியாது."

▫▫▫

மணி பிற்பகல் மூன்றை அண்மித்துக் கொண்டிருந்தது. சீனியப்பு கந்தப்பரை பார்க்கப் போவதற்காய் புறப்பட்டார்.

"சீனியப்பு! சீனியப்பு!" கூப்பிட்டவாறே அயல்வீட்டுப்பையன் ஓடிவந்தான்.

"என்னடா?" பதைபதைத்தவாறே கேட்டார் சீனியப்பு.

"கந்தப்பு செத்துப்போனாராம். எங்கடை விதானையார் ஒவ்வொரு வீடு- வீடாய் காசு சேர்க்கிறார்."

சீனியப்பு ஓடினார். "விதானையார், என்னட்டை காசு இருக்கு. நான் தாறேன்."

விதானையார் சொன்னார்: "இல்லை சீனியப்பு. இது இந்த ஊரார் கந்தப்பருக்கு செய்கிற கடைசி உதவி."

சீனியப்புவின் கண்களில் இருந்து நீர் கசிந்தது. நண்பனின் மரணச் செய்தி அவரின் தலையில் இடியைப் போட்டது.

சீனியப்புவின் கையைப் பிடித்தபடி விதானையார் கேட்டார்: "அப்பு, கந்தப்பரின்ரை பெண்டாட்டி பிள்ளைகுட்டியளுக்கு அறிவிக்கவேணும். விலாசம் இருக்கோ?"

சீனியப்புவின் முகம் கோபத்தால் சிவந்தது. "ஒரு நாய்க்கும் அறிவிக்க வேண்டாம். அதுகள் பிள்ளையள் இல்லை. பிசாசுகள்."

●●●

கந்தப்பரின் பிரேத ஊர்வலம் மெதுவாக சுடலை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. சீனியப்பு கண்கள் குளமானபடி கொள்ளிப்பானையுடன் ஊர்வலத்தின் முன்னால் நடந்துகொண்டிருக்கிறார். ■

# மீண்டுமொரு காதல் கதை

கவிதை எழுதித்தரச் சொன்ன ரகுவைப்பார்க்க சஹானாவுக்கும் சிரிப்பு அலை மோதியது. அடக்கிக் கொண்டாள். "காதலித்தால் கவிதை வரும்னு சொல்வாங்க; உங்க விஷயத்துல அது சரிவரல்லியே. ம்... போகட்டும். நாளைக்கு எழுதிட்டு வர்றேன். அதப் பார்த்துட்டு உங்க காதலி சிரிப்பாளோ இல்ல நீங்க அழுவீங்களோ.. பின் வர்றதுக்கு நான் பொறுப்பில்லை. சரியா?" அவன் அவசர அவசரமாகத் தலையாட்டினான். வந்த பஸ்ஸில் ஏறிப்போனாள் சஹானா.

"என்ன ரகு ஒரு மாதிரியா இருக்கீங்க?" மேசையில் தலை கவிழ்ந்திருந்தவனைக் கேட்டாள் சஹானா. நிமிர்ந்தவன் கண்களில் நீர். "கவிதை கேட்டவள் காணாமலே போய் விட்டாள் சஹானா!"

"என்ன, சொல்றீங்க?" சஹானா அதிர்ந்தாள்.

"ஆமா. சஹானா.. அவளுக்கு கல்யாணமாம். மறந்திடச் சொல்லி எழுதிவிட்டு மாயமா போயிட்டா.." ரகு உதடுகளைக் கடித்தவாறு கண் கலங்கினான். என்ன சொல்வதென்று வார்த்தைகள் தடுமாற திகைத்து நின்றாள் சஹானா.

காலங்கள் காயங்களைக் கழுவி மருந்திடும் என்பார்கள். அது போல ரகுவின் மனக்காயங்கள் மெதுவாக மறைய பழையபடி உற்சாகமாய் வளைய வந்தான் அவன். அவனை சிரிக்க வைப்பதில், கவலைகளை மறந்து களிக்க வைப்பதில் சஹானாவின் பங்கும் இருந்தது.

"இந்தாங்க.. சஹா.. இதைப் படிச்சுப் பாருங்க!"

ஒரு இதமான காலைப் பொழுதில் அவன் நீட்டிய வெள்ளைக் கடதாசியைப் பிரித்தாள் சஹானா.

"முட்களின் மேல்
இதழ் விரித்திருக்கும்
ரோஜாவைப் போலே என்
துக்கங்களின் மேலும் ஒரு புன்னகையை
இருத்தி வைத்துள்ளேன்– எதற்காக?
அடிதோழி.. உனக்காக.."

இப்படி ஆரம்பித்த வரிகள் தொடர்ந்தன.

"கவிதையா? நல்லாருக்கு ரகு. நீங்களா எழுதினதா? இல்லை இரவல் தானா?"



புன்னகைத்தவாறே கேட்டாள்.

பேசாமல் சிரித்தான். "காதலிச்சு தோற்றுப் போ. கவிதை தானா வரும்னு ஒரு கவிஞர் சொல்லியிருக்கிறார்."

"சரி தான். இப்படியே தொடர்ந்து எழுதுங்க. உங்களால முடியும், இல்லியா?" சஹானாவே தொடர்ந்து பேசினாள்.

அவன் அமைதியாகவே இருந்தான். பெருமூச்சொன்று வெளிப்பட்டது. பின்னர் மெதுவாகப் பேசினான். "இவ்வளவு பேசிப் பழகுறோம் சஹானா; நாம ரெண்டு பேரும் ஏன் காதலிச்சிருக்கக்கூடாது? இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடல்ல. நீங்க மட்டும் சரின்னு சொன்னா...."

"ரகு.!" அவன் பேச்சை முடிக்கு முன்னரே சஹானா குறுக்கிட்டாள். குரலில் கோபமும் கேலியும் ஒருங்கே இழையோடின. "தலை எங்காவது வர்ற வழில அடிபட்டிருச்சா? ஒரு பெண்ணால கைவிடப்பட்டு இன்னும் காயம் கூட ஆறல்ல. இடையில இன்னொரு காதலா? அதுவும் ஒரு நல்ல ஃப்ரெண்டா மட்டுமே உங்களோட இதுவரை பழகிய என்னோடயா? என்னவோ நல்லவரு, நான் நட்பா பழகுறத தவறா எடுத்துக்கமாட்டாரு அப்படின்னு நினைச்சேன். நினைச்சதே தவறாப்போயிட்டுது. வருத்தமாத்தானிருக்கு. அதுமட்டுமல்ல இன்னொரு பெண்ண மனசார விரும்பி காதலிச்ச உங்களை என்னோட காதலரா ஏற்றுக்கொள்ற பரந்த மனப்பான்மை எனக்கில்ல ரகு. மன்னிச்சிடுங்க."

ஷர்மிளா இஸ்மாயில்

சஹானா போய் பல மணிநேரம் ஆகியும் ரகு பிரமையிலிருப்பது போல் புரியாத மோன நிலையிலிருந்தான். மனதுக்குள் கோபமும் ஆத்திரமும் கொப்பளித்தன. பின் அமைதியாயிருந்து யோசித்ததில் அவள் வார்த்தைகளில் இருந்த உண்மை புலப்பட்டது. யதார்த்தத்தை மறைக்காமல் சொல்லிவிட்டாள். நல்லது தான். ஆறுதல் பட்டுக் கொண்டான். அடுத்து வந்த காலவோட்டத்தில் சஹானா வேறொரு அலுவலகத்துக்கு மாற்றல் கேட்டுச் சென்றுவிட, காதலை மட்டுமல்ல இதமான நட்பையும் இழந்த வேதனையில் ரகு வாழ்வைத் தொடர்ந்தான். ■



படிப்பகம்

www.padippakam.com

# மாலையில் மலரும் பூ

இலக்கிய நயம்

நினைவுகள் நெஞ்சுக்குள் தேரோட்டம்
நினைத்ததும் நெஞ்சில் களியாட்டம்

எட்டிநின்று பார்த்தால் அச்சம் வரும்
கட்டிக் கொண்டு பார்த்தால் ஆசை வரும்
எட்டி நின்று பார்த்தால் இரும்புதான்
கட்டிக் கொண்டு பார்த்தால் கரும்புதான்

வெட்டரிவாள் மீசையது மிரட்டும்தான்
தொட்டுவிளையாடினால் அது மயக்கும்தான்.
கொத்தும் அணிலாக அவன் மாறினால்
குத்தும் அந்த மீசை குறும்புதான்!

வாளேந்தும் கைகள் அவை வலிமைதான்
வளைத்துக் கொள்ளும் போது கடுமைதான்
இடை உடைந்ததோ என்று ஐயம்தான்
படை எடுக்கும் வேகம் கொடுமைதான்

கொடுமைதான் எனினும் இனிமைதான்
இம்சைதான் எனினும் புதுமைதான்
வதைபட்டாலும் மனது ரசிக்கும்தான்
கதை சொல்லும் கரங்களை அழைக்கும்தான்!

மென்மைக்கு புதுமை வன்மைதான்
மெலியது ரசிக்கும் வலிமையை
பெண்ணுக்கு ஆண் நேர் எதிர்
வேற்றுமையில் மலர்வதே இனிமையாம்!

நினைத்ததும் மனதில் களியாட்டம்
நினைவுதான் மனதில் காவியம்

கன்னத்தில் பதிந்த உதடுகள்
எண்ணத்தில் எழுந்த மோகத்தில்
வண்ணமாய் காயம் பதித்திடும்
காலையில் கண்ணாடி காட்டிடும்
ஐயோ என்று வெட்கம் எழுந்திடும்

கண்டவர் தோழியர் நகைத்திட
உண்டவர் யாரென்று கேட்டிட
ஓடியே ஒளிப்பது தொடர்கதை!

"கண்டது காயம் பாதிதான்
காணாத காயம் மீதிதான்
கனியென்று நினைத்தாரோ உன்னையே
விருந்தென்று மகிழ்ந்தாரோ சொல்லடி?"
தோழியர் கேலியால் துரத்துவர்.

"இதழினில் என்னடி பற்குறி?
போரினில் எத்தனை காயமோ?
பதிலடி நீயும் தொடுத்தாயோ
கள்வனும் காயம் கண்டானோ?"

கேள்விகள்-கேலிகள் யாவுமே
நேரினில் வெட்கம் சூழ்ந்தாலும்
நினைத்துப் பார்க்கையில் இனிமைதான்!
தோழிகள் மலைத்ததும் பெருமைதான்!

'என்னவர் இனிய மன்னவர்
என்னிலே விழுந்த வண்டவர்
கள்ளிலே நீந்தும் காளையா
கண்ணிலே என்னை கொண்டவர்'
என்று சொல்லாமல் சொல்லும் பெருமைதான்!

காலையில் வந்த தோழியரில்
மாலையில் வந்தாள் ஒருத்தி.



"காலையில் மதிமுகம் துள்ளுவதேன்?
மாலையில் மெல்ல வாடுவதேன்?"
கேட்டாள் குரலில் வியப்புடனே.

"மாலையில் மனது துடிக்கிறது
தணலிடைப் புழுவாய் தவிக்கிறது!"

"அதுதான் ஏனடி விடை சொல்லு
காலைக்கும்-மாலைக்கும் இடையினிலே
என்னடி நடந்தது அதைச் சொல்லு?"

"உண்டது செரித்தால்
பசி கிள்ளும்!
இன்பம் கண்டது செரித்தால்
மனம் கிள்ளும்!
கிள்ளும் மனதால்
ஆசை அழும்!
தாலாட்ட மன்னனின்
கரம் தேடும்!"

விடையை ரசித்து அவள் சொல்ல
தோழி நகைத்தாள் சலங்கையைப்போல்!

மாலை மயக்கம் மதி மயக்கம்
காளையை தேடும் மது மயக்கம்"
கேலி எறிந்தாள் தோழியவள்.

"காலை மயக்கம் கண்மயக்கம்
மாலை மயக்கம் பெண் மயக்கம்!"

"அது என்ன புதிதாய்
இரு மயக்கம்?"

"விழித்ததால் கண் கெஞ்சுவது
காலையில் வரும் கண்மயக்கம்!

"ஆஹா கொஞ்சியது நீங்கள்
கெஞ்சுவது பாவம் விழிகள்!"

"விழித்ததால் படித்த புதுக்கதையை
தொடர்ந்து படித்திடும் மோகத்தில்
மனது மயங்குவது பெண் மயக்கம்!"

"கூடிக் களித்ததும்
ஆடிக் களைத்ததும்
தேடித் தேடி புதிர் அறிந்ததும்
நாடி இன்பக் கடலில் விழுந்ததும்
காலையில் எழுந்ததும் மறைந்திடுமோ?
மாலையில் மட்டும்தான் உதித்திடுமோ?"
தோழி கேட்டாள் விழி விரித்து!

"அனுபவம் தானே வரவேண்டும்
நான் அதை எப்படி புரியவைப்பேன்?
பொய்யென்று நீயும் நினைத்திடுவாய்
புதிர்க் கதைபோல கேட்டிடுவாய்
மெய்யென்று நீயும் அறிவதற்கு
அனுபவம் தோன்றும் பொறுத்திடுவாய்!"

"மாற்றிய மாலை வாடவில்லை
மஞ்சத்து விரிப்பும் மாற்றவில்லை
நாளது ஒன்று ஆகுமுன்பே
ஞானியாய் மாறியது எப்படியோ?"

தோழி கேட்க முகம் சிவந்தாள்
"போடி" என்று மொழி உதிர்த்தாள்.

"தனிமையில் இனிமை கறப்பதற்கு
தடையென என்னை நினைத்தாயோ?"
தோழி போலியாய் கவலையுற்றாள்.

"பேசிப் பேசி நீயும்தான்
ஆசைத்தீயை தூண்டுகிறாய்!
அதனால் இன்பம் உள்ளத்தில்
உன்னை ஏனடி ஒதுக்குகிறேன்?"

## தருவது — ரசிகன்

"அப்படியானால் விடை சொல்லு
காலையில் ஆசை மறந்திடுமோ
மாலையில் மட்டும் மலர்ந்திடுமோ?
ஆசை என்ன பனித்திரையா
சூரியன் வந்ததும் கரைவதற்கு?"

விடாமல் துளைத்தாள் தோழியவள்
வாடாமல் நகைத்தாள் தோழியவள்.

"மறையும் என்று யார் சொன்னார்
காலையில் தான் அது கண்மலரும்
மாலையில் அதன் கால் நடக்கும்
கைவீசி நடந்து தினவெடுக்கும்!
அதன் பெயர் ஆசை அடிதோழி
அதுதான் இரகசியம் அடி போடி!"

அட இவ்வளவுதானா என்பதுபோல்
தோழி உடனே இதைச் சொன்னாள்;
"ஆசை ஒரு பூவாகும்.
காலையில் அரும்பாய் கண்சிமிட்டி
பகலில் பேரரும்பாய் நெஞ்சுயர்த்தி
மாலையில் பூவாய் மலர்ந்திருக்கும்
பூவது வண்டை தேடி நிற்கும்"

தோழியின் விளக்கம் வியப்பாக
"அடியே கள்ளி யார் சொன்னார்?"

"திருவள்ளுவர் சொன்னார்
குறளாக"
என்றாள் தோழி ஓடிவிட்டாள்.

**"காலை அரும்பிப் பகலெல்லாம்**
**—போதாகி**
**மாலை மலரும் இந்நோய்"**

குறள்-1227. அதிகாரம்-123

## ஸ்போர்ட்ஸ்

# இந்திய அணியின் புதிய நாயகன்

## போட்டிகள் 14~ஓட்டங்கள் 1039

உள்ளூர் பிட்ச்களில் சிறப்பாக விளையாடி எதிர் அணிகளைப் புறமுதுகிடச் செய்யும் வீரர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றால் மட்டும் பூச்சியங்களை நேசிக்கும் நிலை மாறாதா, என்றும் இந்திய அணிக்கு கவாஸ்கர் போன்ற ஒரு பேட்ஸ்மேன் மீண்டும் கிடைக்க மாட்டாரா, என்றும் இந்திய கிரிக்கெட் இரசிகர்கள் கடந்த பல ஆண்டுகளாக ஏங்கிக் கொண்டிருந்தனர். அந்த ஏக்கத்தைத் தீர்க்கும் வகையில் இந்திய கிரிக்கெட் உலகத்திற்கு ஆபத்பாந்தவனாக வந்தவர்தான் 24 வயதான ராகுல் ட்ராவிட்.

சித்து, மஞ்ச்ரேக்கர், காம்ளி, பிரபாகர் போன்ற பிரபலங்களால் நிறைந்திருந்த இந்திய கிரிக்கெட் அணியில் ட்ராவிட் பட்ட கஷ்டங்கள் எண்ணிலடங்காதவை.

இந்தியாவில் நடக்கும் உள்ளூர்ப் போட்டிகள் அனைத்திலும் உயிரைக் கொடுத்து விளையாடும் ட்ராவிட், சர்வதேச போட்டிக்கான இந்திய அணியை அறிவிக்கும் ஒவ்வொரு முறையும் தன்னுடைய பெயர் அணியில் இடம்பெறாதா, என்று ஏக்கத்துடன் எதிர்பார்ப்பார். ஆனால் அவருடைய பெயர், வீரர்களின் பட்டியலில் இருக்காது. ட்ராவிட் சிறப்பாக ஆடும் வீரர்தான். அவரை விடச் சிறந்த வீரர்கள் அணியில் இருப்பதால் அவர் பெயர், தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்களின் பட்டியலில் இடம்பெறவில்லை என்று தேர்வுக் குழு உறுப்பினர்கள் கூறுவார்கள். ட்ராவிட்டும் அடுத்த முறை தனக்கும் வாய்ப்புக் கிட்டும் என்று நம்புவார்.

'நம்பினார் கெடுவதில்லை' என்னும் பழமொழிக்கேற்ப, இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் இந்தியாவுக்காக விளையாட அவர் அழைக்கப்பட்டார். சர்வதேச கிரிக்கெட் போட்டி என்னும் சக்கரவியூகத்திற்குள்ளே நுழைந்த ட்ராவிட், செஞ்சரிக் கனவுகளுடன் இங்கிலாந்து சென்றார். ஆனால் துரதிஷ்டம் அவரை அங்கேயும் விடவில்லை. முதல் சில போட்டிகளில் இவர் 14வது வீரராகவே இருந்தார். இங்கிலாந்து டெஸ்ட் தொடரின் பாதியிலேயே அசாருதீனுடன் பகைத்துக் கொண்டு சித்து இந்தியா திரும்பியதன் காரணமாக ட்ராவிட்டிற்கு டெஸ்ட் போட்டியில் விளையாடும் வாய்ப்புக் கிடைத்தது.

தனக்குக் கிடைத்த வாய்ப்பை மிகச் சரியாகப் பயன் படுத்திக்கொண்ட ட்ராவிட் 96 ஓட்டங்களை எடுத்து உலகத்தின் பார்வையைத் தன் பக்கம் திருப்பினார். அன்று தன் பக்கம் பார்வையைத் திருப்பச் செய்த ட்ராவிட் தன்னுடைய சிறப்பான ஆட்டத்தின் மூலமாக இன்னும் அந்தப் பார்வையை எடுக்க விடாமல் செய்து விடுகிறார்.

தென்னாபிரிக்க மண்ணில் இந்திய அணியால் தலைதூக்க முடியாது என்ற எண்ணத்தைத் தவிடு பொடியாக்கிய ட்ராவிட்



தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஜோகானஸ்பேர்க் டெஸ்ட் போட்டியில் 148 ஓட்டங்களைக் குவித்து இந்திய அணியை வெற்றியின் விளிம்பிற்கு அழைத்து வந்தார். அவருடைய ஆட்டத்தைப் பார்த்து வியந்த கிரிக்கெட் விமர்சகர்கள் அனைவரும் கவாஸ்கர், வெங்சர்கார் ஆகியோருக்கு இணையான ஒரு வீரரை இந்தியா பெற்றுவிட்டதாக ட்ராவிட்டிற்குப் புகழாரம் சூட்டினார்கள்.

இதுவரை 14 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ள ட்ராவிட், 1039 ஓட்டங்களை அடித்துள்ளார். 1 சதத்தையும், 8 அரைச்சதத்தையும் அவர் எடுத்துள்ள ஓட்டங்களின் சராசரி 51.95 ஆக இருக்கிறது. இந்திய வீரர்களிலேயே மிக அதிகமான ஓட்டங்களின் சராசரி இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

ட்ராவிட்டிற்குப் பிடித்ததெல்லாம் 3வது பேட்ஸ்மேனாகக் களம் இறங்குவது. 3வது பேட்ஸ்மேனாகக் களத்தில் இறங்கினால் தான் முழுத்திறமையையும் காட்டி ஆட முடியும் என்று கூறும் ட்ராவிட், "வெளிநாடுகளில் நடக்கும் போட்டிகளில் இந்திய அணியை வெற்றி பெறச் செய்வதே என்னுடைய இலட்சியம்,' என்று கூறுகிறார்.

## சிந்தியா பதில்கள்

★ கின்னஸில் பதியப்படாத ஒரு விடயத்தைப் பற்றிக் கூறமுடியுமா?
எம். ஜமாநுல்லா அன்வர் அலி, காத்தான்குடி-05.

அரசியல்வாதிகளின் பொய்கள்.

★ பிரிட்டன் தேர்தலில் ஆளும்கட்சி தோல்வி கண்டால் திரு லியாம் பொக்ஸ் என்ன செய்வார்?
கே. ரவீந்திரன், கொழும்பு-06.

வெற்றிக்கு வழிவகுக்கத் தவறிய பிரசாரங்களில் 'இலங்கைப் பிரச்சனையில் வெறுத்துவாங்கிய'தாக மார்தட்டிய தன்னுடைய பிரசார உத்தியும் ஒன்று என நினைப்பார்.

★ டியர் சிந்தியா! சமீபத்திய உள்ளூராட்சித் தேர்தலில் உமக்குப் பிடித்தது...?
செல்வன் நா. ஜெயகணேஷ், பொகவந்தலாவ.

ஏதோ கொழும்பில் உள்ள தமிழர்கள் எல்லாம் தம் கட்டுப்பாட்டில் இருப்பது போல கூட்டணியினர் விடுத்த அறிக்கையும், தேர்தல் முடிவின்பின்னர் அம்மையாரைச் சந்திக்கவும் முடியாமல் அய்யாமார் முகத்தில் வழிந்த அசடும்!

★ மூப்பனார் பிரதமராவதை கருணாநிதிதான் கெடுத்தார் என்று கூறியிருந்தீரே? மூப்பனார் அப்படிச் சொல்லவில்லையே?
சி. டேனியல், கொழும்பு-09.

மூப்பனார் பிடிகொடாமல் பேட்டியளித்திருக்கிறார். அதேநேரம், கலைஞர் கருணாநிதிக்கு கண்டனம் தெரிவித்து தனது கட்சிக்காரர்கள் சுவரொட்டி ஒட்டியதையும் கண்டுகொள்ளாத மாதிரி நடிக்கிறார் மூப்பனார். இதன்பெயர்தானுங்க பனிப்போர்.

★ கமலஹாசன் அடுத்துச் செய்யப்போகும் புதுமை என்ன சிந்தியா?
செல்வி எஸ். சுதர்ஷினி, மட்டக்களப்பு.

வெகு சமீபத்தில் வெளியான செய்திப்படி ஒரு இனிப்பான சமாச்சாரம்: கமலின் அடுத்த படமான 'மருதநாயகத்தில்' ரஜினியும் நடிக்கப்போகிறாராம். ரஜினிக்குரிய பாத்திரத்தை கமல் ஏற்கனவே விளக்க, டபிள் ஓ.கே சொல்லிவிட்டாராம் ரஜினி. சரித்திரப் படமான மருதநாயகத்தில் தாடி சகிதம் தோன்றும் கமலுடன் சத்யராஜ், கார்த்திக், அமிதாப், அர்ஜுன் ஆகியோரும் சில காட்சிகளில் தோன்றப்போவது மற்றொரு இனிப்பு நியூஸ். என்ன தகவல் போதுமா சுதர்ஷினி?

★ டியர் சிந்தியா! இன்றைய நாகரிகம் உயர்ந்திருக்கிறதா? தாழ்ந்திருக்கிறதா?
ஆர். விஜயா, அவிசாவளை.

உதாரணத்திற்காக ஒரு புகைப்படம் இங்கே பிரசுரமாகியுள்ளது. அமெரிக்கா-நியூயோர்க்கில் அண்மையில் நடந்த உடையலங்காரக் கண்காட்சியில் பார்வையாளர்களைப் பரவசப்படுத்தியவர் இந்த மினுமினுக் அழகிதானாம். இப்போது நடப்பது வேக யுகம். ஒரு சாப்பாட்டுப் பார்சல் கையில் கிடைத்த உடனேயே சட்டுப் புட்டென்று பார்சலைப் பிரித்து விறுக் விறுக் என்று சாப்பிட்டுவிட்டுப் போகும் அவசரம். நிதானமாகப் பிரித்து, உள்ளே இருக்கும் நாலு வகை கறிவகையின் நயம் புரிந்து, இரசித்துச் சுவைத்து முழுத் திருப்தியாய் பசியாறும் நிதானம், நேரம் யாருக்கு இருக்கிறது?! எல்லாவற்றிலுமே அப்படித்தான்! ஆக, வேக யுகத்திற்கு ஏற்ப நாகரிகமும் மாறிக்கொண்டிருக்கிறது. (என்ன ஒரு தத்துவமான விளக்கம் பார்த்தீர்களா?)

★ எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதியும் உடன்பாடு கண்டதும் ஏற்பட்ட மகிழ்ச்சியும், எதிர்பார்ப்பும் இப்படிக் கானல் நீராகி விட்டதே?
கோ. விஜயகுமார், திருமலை.

நடக்கக்கூடாததையெல்லாம் கற்பனை பண்ண வேண்டியது; பின்னர் கானல்நீர், காணாதநீர் என்று புலம்பவேண்டியது. நீங்கள் திருந்த மாட்டீர்கள் விஜயகுமார்!

★ ஒரு கடி ஜோக் எடுத்துவிடும் பார்க்கலாம்?
செல்வி எம். நவமலர், வவுனியா.

"'பார்த்தசாரதி வந்தான்' இது இறந்த காலம். இதனை நிகழ்காலத்தில் எப்படிச் சொல்லலாம்?"

"பார்த்தசாரதி வருகிறான்!"

"தப்பு!"

"ஏன் தப்புடா முண்டம்? சரிநீயே சொல்லு?"

"பார்க்கிறசாரதி வருகிறான்!"

★ டியர் சிந்தியா! உங்களுக்கு கோலம் போடத் தெரியுமா?
ஏ. சித்திரா, ஜாஎல.

வானத்தில் பார்த்த நட்சத்திரங்களை வாசலில் வரைந்து எனக்குப் பழக்கமும் இல்லை, பயிற்சியும் இல்லை.




★ வல்லவனுக்கு வல்லவன் இந்த வையகத்தில் உண்டு என்று எங்கள் வகுப்பாசிரியர் சொல்கிறார். அதற்கு ஓர் உதாரணமான கதை சொல்லுங்கள் சிந்தியா?
வி. ராகவன், காரைதீவு.

ஒரு கிராமவாசி ஒரு சட்டத்தரணியிடம் அவசரமாக ஓடிப் போனான்.

"ஐயா, என் வயலில் ஒரு மாடு இறங்கி எல்லாம் மேய்ந்துவிட்டது. சட்டப்படி இதற்கு என்ன செய்யலாம் ஐயா?" என்று கேட்டான்.

"சட்டப்படி பார்த்தா உனக்கு ஐநூறு ரூபாயாவது தரத்தான் வேண்டும். தரா விட்டால் சொல்லப்பா, வழக்குப் போடலாம்" என்றார் சட்டத்தரணி.

"சேச்சே வழக்கெல்லாம் வேண்டாம் ஐயா. அந்த நஷ்டஈட்டை நீங்களே கொடுத்து விடுங்கள். மேய்ந்தது உங்கள் மாடுதான்!" என்று ஒரே போடாய்ப் போட்டான் கிராமவாசி.

ஆனால் சட்டத்தரணி அசரவேயில்லை! என்ன சொன்னார் தெரியுமா?

"அதற்கென்னப்பா நஷ்டஈடு? ஐநூறை எடுத்துக்கொண்டு மீதி ஐநூறைத் தந்துவிடு. உனக்கு யோசனை சொன்னதுக்கான என்னுடைய பீஸ் ஆயிரம் ரூபாய்!"

★ தேர்தலில் கள்ளவாக்குப்போட்டு வெற்றி பெறுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?
எம். சித்திபரீனா, நீர்கொழும்பு.

அவர்கள் பெர்னாட்ஷா சொன்னதை நம்புகிறவர்கள். பெர்னாட்ஷா என்ன சொன்னார்? "வெற்றி என்பது ஏராளமான தவறுகளை மறைத்துவிடும்!"

★ விளம்பரங்கள் மலிந்துவிட்டன. நாம் எப்படி நல்லது கெட்டதைக் கண்டுபிடிப்பது?
திருமதி சுலோசனா ரஞ்சித், சிலாபம்.

கஷ்டம்தான். விளம்பரம் என்று தெரியாமலே விளம்பரம் செய்பவர்களும் இருக்கிறார்கள். ஒரு குட்டிக் கதை:

அமெரிக்காவில் உள்ள ஒரு பெண்ணுக்கு அடிக்கடி உடல் நலக் குறைவு ஏற்படும். தன் அபிமான எழுத்தாளருக்கு குறையை எழுதி நிவாரண யோசனை கேட்டாள்.

"உங்களுக்கு உடல் நலம் அடிக்கடி கெடுவதை நினைத்து வருந்துகிறேன். எனக்குத் தெரிந்த மின்காந்த பெல்ட் ஒன்று இருக்கிறது. அதை முயற்சித்துப் பாருங்கள்" என்று பதில் போட்டிருந்தார் எழுத்தாளர்.

அந்தப் பெண்ணும் அவர் குறிப்பிட்ட மின்காந்த பெல்ட்டை வாங்கிப் பயன்படுத்திப் பார்த்தாள். வியாதி குணமாகவில்லை.

"நீங்கள் குறிப்பிட்ட மின்காந்த பெல்ட்டை பயன்படுத்தியும் பயன் கிடைக்கவில்லை," என்று மறுபடி கடிதம் போட்டாள்.

அதற்கு எழுத்தாளர் எழுதியிருந்த பதில்: "உங்களுக்கு நன்மை கிடைக்காமல் இருக்கலாம். ஆனால் எனக்கு நன்மை கிடைத்துள்ளது. அந்த மின்காந்த பெல்ட் கம்பனியில் நானும் ஒரு பங்குதாரர். உங்கள் ஆதரவுக்கு நன்றி".

★ ஹாய் சிந்தியா! சொர்ணவாகினி 'தர்மரட்சகன்' எப்படி?
செ. வின்சன், கொழும்பு-13.

கரும ரட்சகன்.

★ பாகிஸ்தான்-இலங்கை இரண்டாவது டெஸ்ட்டில் முதல் இன்னிங்ஸில் ரணதுங்காவுக்கு அவுட்கொடுத்தது சரியா?
என். சுலைமான், தெகிவளை.

மெத்தப்பிழை. என்ன செய்வது நடுவர்களை தண்டிக்க விதிகள் இல்லையே!



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 81

## அயோத்தி இராமனிடம் அடைக்கலம் புகுந்த விபீடணன்

இராமபிரான் சாட்சாத் திருமாலின் அவதாரம் என்றும் அறநெறி பிறழ்ந்து கொடுமைகள் தலையெடுக்கும் காலங்களில் திருமால் அவதாரம் எடுத்து அறத்தை நிலை நிறுத்துவார் என்றும் பலவாறான கதைகளை விபீடணன் இராவணனிடத்தில் எடுத்துரைத்தான். அரக்கர்குலத்து முன்னோனான இரணியனின் கொடுமைகளை ஒழித் துக்கட்ட நரசிம்ம அவதாரம் எடுத்து அவனை வதம் செய்தார் மகாவிஷ்ணு என்றும் கூறினான். இக்கூற்றுகளில் புதைந்து கிடந்த உண்மைகள் எவற்றையும் இராவணனால் புரிந்து கொள்ளமுடியவில்லை. அகங்காரம் இலங் காதிபதியின் அறிவை மறைத் தது. ஆணவம்தான் தலைக் கேறியது. இதனால், தன் தம்பியே தனக்கு விரோதியாகி விட்டான் என்று கருதத் தலைப்பட்டான்.

### "ஓடிப்போய்விடு!"

"நீ என் கூடப் பிறந்தவன்; ஆனால் என் முன்னாலேயே எனது எதிரியைப் புகழ்ந்து, அவனிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கோரும்படி துணிந்து கூறிவிட்டாய். 'தம்பியைக் கொன்றவன்' என்ற பழிச் சொல் எனக்கு ஏற்படலாகாது என்பதற்காக உன்னை உயிருடன் விட்டுவிட்டேன்-என் கண்முன் நில்லாதே! எங்காவது ஓடிப்போய் விடு!" என்று விபீடணனை விரட்டியடித்தான்.

அண்ணன் இராவணனுக்கு எந்த அறநெறியும் இப்போது ஏறப்போவதில்லை என்பதை உணர்ந்து கொண்ட விபீடணன் மந்திராலோசனை மண்டபத்தைவிட்டு வெளியேறினான். விபீடணனுடன் வேறுபலரும் வெளியேறினர். அவர்கள் அனைவரும் அறவழி நடப்பவர்களேயாவர். இவர்களில் அனலன், அனிலம், அரன் மற்றும் சம்பாதி என்ற நான்கு அறவழி நாடும் அரக்கர்களும் அடங்குவர். இவர்கள் நால்வரும் விபீடணரின் மாளிகைக்கு வந்து சேர்ந்தனர். பல நாளிகைகள்-அடுத்து எவ்வாறு நடந்து கொள்வது என்பதை ஒட்டி விவாதித்தனர்.

இராவணன் இன்றுள்ள நிலையில் எத்தகைய தார்மீக மார்க்கத்திலும் நாட்டம் கொள்ளப்போவதில்லை. நாட்டுக்கும் நாட்டுமக்களின் கேட்டுக்குமே இராவணன் வழி அமைத்துவிட்டான் என்பதனால் நாட்டைவிட்டு வெளியேறுவதே உசிதம் என்று முடிவெடுத்தனர். அதர்மத்தை அழித்து தர்மநெறி தழைத்தோங்கச் செய்யும் பணிக்காக அவதரித்த திருமாலின் அவதாரமான இராமபிரானிடம் அடைக்கலம் புகுவதே மேலான செயல் என்ற முடிவுக்கு வந்தனர். உடனடியாகவே அவர்கள் அனைவரும் இலங்கையின் வடமேற்குக் கடற்கரை சென்று வான்வழி விமானத்தில் தாவி இராமபிரானும் வானரப் படைகளும் தங்கியிருந்த பாரதத்தின் தென்கரையை அடைந்தனர்.

இராமபிரான், இலக்குவன், சுக்கிரீவன், அனுமன், அங்கதன், ஜாம்பவன் மற்றும் சுக்கிரீவனின் அமைச்சரவையைச் சேர்ந்தோர், பிரதானிகள் ஆகியோர் மலையடிவாரத்தில் ஆலோசனை கலந்திருந்தனர், ஏனைய வானரப் படைவீரர்கள் அனைவரும் கடற்கரை மணற்பரப்பிலும் அண்டையிலுள்ள மரங்களிலும் பரந்திருந்தனர். சற்றுத் தூரத்தில் இலங்கையிலிருந்து வான் மார்க்கமாக வந்திறங்கிய விபீடணனும் அவனுடன் வந்த நால்வரும் தங்களை நோக்கி வருவதைக் கண்ட வானரங்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது, வந்தவர்கள் அரக்கர்கள் தான் என்பதை வானரவீரர்கள் உறுதிசெய்து கொண்டனர். இராமபிரான், சுக்கிரீவன் முதலானோரிடம் தகவல் சொல்ல சில வீரர்கள் விரைந்தனர். ஏனைய பலவீரர்கள் வந்தவர்களைச் சூழ்ந்து கொண்டனர்.

விபீடணர் கிரீடம் தரித்து அரசனைப் போல் தென்பட்டமையினால் இராவணனே தனது சுய ரூபமான- பத்துத் தலைகளைத் தவிர்த்து- ஒரு தலையுடன் வருகின்றானோ என்று சந்தேகித்தனர். உடனடியாகவே அவர்களைப் பிடித்துக் கட்டிவிட வேண்டும் என்றும், தயவுதாட்சணியமின்றி அவர்களைக் கொன்றுவிடவேண்டும் என்றும் சிலர் திட்டமிட்டனர், இவ்வாறு பலரும் பலவிதமாகக் குசுகுசுக்க ஆரம்பித்ததும், விபீடணர் இரு கைகளையும் மேலே உயர்த்திவிட்டு, "இராமபிரானின் உத்தமபணிக்காக அவருடன் இணைந்து திரண்டு வந்துள்ள வானர வீரர்களாகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நாங்கள் இங்கு எந்தக் கெட்ட நோக்கத்துடனும் வந்தவர்களல்ல; நான் இலங்காதிபதி இராவணனின் சொந்தத் தம்பி. விபீடணன் என் பெயர், எனது அண்ணனின் நோக்கம் தவறு என்று சுட்டிக் காட்டியமையினால் நாட்டைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று. இராமபிரானிடம் அடைக்கலம் புகவே வந்தோம்!" என்று கூறினார்.

### சந்தேகம் தீரவில்லை

அப்போதும் வானரப்படையினர் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இதனால் விபீடணரையும் அவர் குழுவினரையும் மேலும் நகரவிடாமல் சுற்றி வளைத்துக் கொண்டு நின்றனர். இராமபிரானிடம் தகவல் தெரிவிக்கச் சென்றவர்கள் திரும்பி வரும் வரை விபீடணரையும் தோழர்களையும் அதே நிலையில் நிறுத்தி வைத்திருந்தனர்.

இதேவேளையில் விபீடணர் வருகை பற்றிய தகவல் கிடைத்ததும் இராமபிரானுடன் இருந்தவர்களும் சற்றுப் பதற்றமடைந்தனர். இராமபிரானும் ஆஞ்சநேயரும் எதுவித பதற்றமும் இன்றிக் காணப்பட்டனர். இராமபிரானைப் பார்த்து ஆஞ்சநேயர் பொருள் பொதிந்த புன்னகையை உதிர்த்தார்.

கடற்கரையிலிருந்து மற்றுமொரு குழுவினர் புறப்பட்டுவந்து, வந்திருப்பவர் இராவணனன் தம்பி விபீடணர் என்பதைக் கூறினார். விபீடணர் என்ன நோக்கத்துடன் வந்திருக்கிறார் என்பதையும் அவர்கள் கூறினார்கள். இராமபிரான் தன்னைச் சூழ்ந்துள்ளவர்களைப் பார்த்து, "நமது எதிரியான

### இராஜகுமாரன்

இலங்கை வேந்தன் இராவணனின் சொந்தத் தம்பி விபீடணன் எம்மிடம் அடைக்கலம் கோரி வந்திருக்கும் இத்தருணத்தில் நாம் எவ்வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்று உங்கள் கருத்துக்களைக் கூறுங்கள்!" என்று கேட்டார்.

இராமபிரானுடைய வினாவுக்கு முதலில் விடையிறுத்தவன் வானரர் வேந்தனான சுக்கிரீவனே. "அரக்கர்களில் நேர்மையானவன் என்று எவரையும் குறிப்பிட முடியாது. அவர்கள் அனைவருமே மூர்க்க குணமுடையவரே! விபீடணன் தன் தமையனைப் பகைத்துக் கொண்டு இங்கு வந்திருக்கிறான் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது. ஓர் இக்கட்டான நிலையில் தனது அண்ணன் சிக்கப்போகிறான் என்பதை முன்கூட்டியே அறிந்து அவனைவிட்டு நீங்கி பகைவரிடத்தில் அடைக்கலம் புகுவதானது ஒரு வீரனுக்குரிய செயல் அல்ல; தன் அண்ணனோ ஆசிரியனோ அல்லது அன்னை தந்தையரோ அறவழி தவறினால் அவர்களை விட்டுப் பிரிய எண்ணும் ஒருவன் தவ வாழ்க்கையை மேற்கொள்வானேயல்லாமல் எதிரியின் பக்கம் செல்ல என்றுமே நினைக்க மாட்டான். அப்பேற்பட்ட ஒருவன் உண்மையிலேயே தங்களிடம் அடைக்கலம் தேடி வந்தாலும், அவ்வாறு அடைக்கலம் தருவது- சகல அறங்களையும் தெளிவாக அறிந்த தங்களுக்கு ஏற்புடையதாகாது!"

இவ்வாறு சூரியன் மகனான சுக்கிரீவன் இராமபிரானிடத்தில் அறநெறிகளையிட்டு விபரமாக எடுத்துரைத்தான். இக்கருத்துக்கமைவாகவே ஏனையோரும் கருத்துரை வழங்கினான், இராமபிரான் அனுமனின் கருத்தினை அறிவதற்காக அவருடைய முகத்தைப் பார்த்தார். தன் தலைவனின் பார்வைக் குறிப்பின் உட் பொருளை உணர்ந்த அனுமன் உடனடியாக இராம பிரானைத் தொழுதவண்ணம் தன் கருத்தினைக் கூறலானார்:

### "விபீடணன் ஒரு மா மேதை!"

"ஐயனே! வஞ்சனைக்குணமுடைய ஒருவரின் முகத்தையும் அங்க லட்சணங்களையும் பார்த்தவுடனே அவர்களை அறிந்துவிடலாம். விபீடனரை இராவணனின் கொலுமண்டபத்திலேயே நான் பார்த்தேன். நல்லறங்களனைத்தையும் தெரிந்து வைத்திருக்கும் ஒரு. மா மேதை விபீடணன். தூதனாக இலங்கை சென்றிருந்த என்னைக் கொன்று விடுமாறு இராவணன் கட்டளையிட்டபோது, "தூதுவனைக் கொல்லுவது அரச நீதிக்குகந்ததல்ல" என்று தடுத்த ஒரே ஒரு அறநெறியாளர் அவர்தான். அரக்கர்கள் எல்லோருமே அறத்தை மறந்தவர்கள் என்று கணக்கிட்டு விடலாகாது. இலங்கையில் பிராட்டியாரைத் தேடி இரவு வேளையில் மாளிகைகளைச் சுற்றிப் வந்தபோது, விபீடணரின் மாளிகையையும் பார்க்க நேர்ந்தது.

அரக்கர்கள் பெரும்பாலும் மது அருந்தும் பழக்கமுடையவர்கள்; மாமிச உணவு புசிப்பவர்கள், ஆனால் விபீடணரின் இல்லத்தில் இத்தீய பழக்கங்கள் எவற்றுக்கும் இடமில்லை என்பதனை உறுதியாக்கிக் கொண்டேன். தெய்வீகக் களையுடன் ஓர் அந்தணரின் இல்லம் போல் காட்சி அளித்தது அந்த மாளிகை. எனவே என்னிடம் தாங்கள் கேட்ட வினாவுக்குரிய பதிலை அளித்து விட்டேன். மேற்கொண்டு தேவரீர் எத்தகைய முடிவை எடுக்கிறீர்களோ அதற்குக் கட்டுப்பட்டு நடக்கச் சித்தமாயிருக்கிறேன்!"

பயபக்தியுடன், மாருதியான ஆஞ்சநேயர் தமது கருத்துக்களைக் கூறி இராமபிரானின் தாள் தொட்டு வணங்கினார்.

அனுமனின் கூற்றை கம்பர் பெருமான் இவ்வாறு தருகிறார்:



**திந்தனை நறவமும் நெறியில் ஊன்களும்**
**தந்தன கண்டிலேன்; தரும தானமும்**
**வந்தனை நீதியும் பிறவும் மாண்பு அமைந்து**
**அந்தணர் மனை எனப் பொலிந்ததாம் அரோ.**

(யுத்த காண்டம்-402)

**பொருள்:**
கேடு விளைவிக்கின்ற சுரபானமான மதுவும், நல்ல நெறியில் செல்ல வொட்டாமல் தடுக்கும் மாமிச உணவும் விபீடணனுடைய மாளிகையில் காணப்படவில்லை. தான தருமங்கள் தழைத்தோங்கும் இடமாகவும் தெய்வத்தை பயபக்தியுடன் பூசனை செய்தல் போன்ற நீதி நெறிகளும் ஏனைய நன்மைகளும் நின்றந்த அந்தணருடைய இல்லம் போலவும் அம்மாளிகை இருந்ததைக் கண்டேன்.

* * *

அனுமன் கூறிய கருத்துக்களே விபீடணனின் உண்மையான தோற்றத்தை இராமபிரானுக்குக் காட்டியது. அங்கு குழுமியிருந்த சுக்கிரீவன் முதலானோருக்கு தன் கருத்துக்களை இராமபிரான் எடுத்துக் கூறினார்:

"விபீடணன் மாபெரும் தவசிருந்து பல வரங்களைப் பெற்றவன். 'ஐயிரண்டு திசை முகுத்தும் தன் புகழை வைத்தோ'னான இராவணேசனிடம் குற்றங்கண்டு எம்மிடம் நாடிவந்ததிலிருந்தே விபீடணனின் நல்ல குணம் தெளிவாகத் தெரிந்துவிட்டது. அத்தகைய மேலோனை அணைப்பதனால் தீங்குற்றாலும் கவலையில்லை. அவனை எம்முடன் அணைப்பதனால் நன்மையே விளையும் என்றே எனக்குப் படுகிறது," என்று வேறு பல கருத்துக்களையும் கூறினார்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 79
### சரியானவிடை:-கும்பகர்ணன், விபீடணன்.

1. சித்தி ஜெலீமா முகம்மட் தம்பி. 230, தைக்கா வீதி, வாழைச்சேனை.04.
2. சி. வீணா தேவி. இல.57 ஆரியபுர, பொகவந்தலாவ.
3. கே. லக்னேஸ்வரி. இல 122, பூம்புகார் வீதி, பாலையூற்று, திருமலை.
4. ச. உமாகாந்தன். 21, கோவில் வீதி, இருதயபுரம், மட்டக்களப்பு.
5. ஆ. இலங்கராசா., மே/பா கிருபாகரன், உக்குளான் குளம், பிள்ளையார் கோவிலடி, வவுனியா.

போட்டி இலக்கங்கள் 78 மற்றும் 79 ஆகியவற்றுக்கு ஒரே கேள்வியே இடம்பெற்றுள்ளது. சரியான பதில் அனுப்பியவர்களுக்கான பரிசுகள் இரண்டு இலக்கங்களுக்கும் வழங்கப்படும். (ஆ-ர்)

**போட்டி இல. 81** கேள்வி:- அரக்கர்களுக்குரிய இரு தீய பழக்கங்கள் எவை?

மே. 10 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
இராமாயணப் போட்டி-இல.81, தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

---


# காலத்துக்கு ஏற்ற கலகல போட்டிகள்

## காதிலை பூ கந்தசாமி

யாழ்ப்பாணத்தில் அழகுராணிப் போட்டி நடந்த செய்தி கேட்டதும் புல்லரித்துவிட்டது போங்கோ. மேலும் என்னவிதமான போட்டிகளை நடத்தினால் கல கலப்பாக இருக்கும் என்று சில ஐடியாக்களை உலுப்பிக் கொட்டுகிறோம்.

### சிரிப்புப் போட்டி

சிலர் சிரிப்பார், சிலர் அழுவார், சிலர் சிரித்துக் கொண்டே அழுவார், சிலர் சிரிப்பது போல நடிப்பார். இவை சோதனைச் சாவடிகளில் தினம் காணும் காட்சியாகும். ஆகவே உண்மையான சிரிப்பு எதுவென்று கண்டறிய இப் போட்டி உபயோகப்படும். துன்பம் வரும்போது சிரிக்கவும் என்று திருவள்ளுவரே சொல்லியிருக்கிறார். (யாழில் உடைந்து தலை தொலைந்த தன் சிலையைப் பார்த்து வானுலகில் இருந்து வள்ளுவர் சிரித்தபடி உள்ளாராம்) ஆகவே அநேகமாக யாழ் குடா நாட்டு மக்களில் அநேகமாக எல்லோருமே நன்கு சிரிக்கக்கூடும். ஆகவே சிரிப்புப் போட்டி அமோகமாக நடத்தலாம்.



### தடை தாண்டும் ஓட்டம்

யாழ்ப்பாணத்தில் நீக்கமற நிறைந்திருப்பது சென்றிப் பொயிண்ட். சென்றிப் பொயிண்டுகளில் இறங்கி இறங்கியே வாழ்க்கை வெறுக்கிறது, கால் வலிக்கிறது, கடுப்பாக இருக்கிறது என்றெல்லாம் கிசு கிசு போல முணு முணுப்போர் இருக்கிறார்கள். (ஒரு மரியாதை காரணமாக சத்தம் போட்டுக் கதைப்பதில்லை) அவ்வாறு முணு முணுப்போரான இரண்டு சக்கர வாகனக்காரர்களுக்கு (சைக்கிள் உட்பட) தடை தாண்டும் ஓட்டம் சிறந்த பயிற்சியாக இருக்கும். பாதசாரிகளும் இதில் கண்டிப்பாக கலந்து கொள்ளலாம். சென்றிப் பொயிண்டுகளில் தொடர் சோதனைகளை வெற்றிகரமாக தாண்டிச் செல்ல உபயோகமாக இருக்கும்.

### சுழல் கால் ஓட்டம்

வளைந்தும், குனிந்தும், நெளிந்தும் இலாவகமாக ஓடும் கலையில் வல்லவர்களுக்கே பரிசுகள் வழங்கப்படும் என்று நிபந்தனை விதிக்கலாம். விதிக்கலாம் என்ன விதிக்கலாம் விதிக்க வேண்டும்.

சென்றிப் பொயின்ட்டுகளில் சோதனைகளுக்காக நிற்கும் தருணங்களில் வெடிச் சத்தம் கேட்டால் (தப்பித்தவறி சைக்கிள் டயர் வெடித்தாலும்) பாதுகாப்பு கருதி சீருடையினரும் பதிலுக்கு சுட்டுத் தள்ள வேண்டியது தவிர்க்க முடியாதது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் தங்கள் பாதுகாப்பை தாங்களே தேடிக் கொள்ளும் பொருட்டு தலைதெறிக்க ஓட வேண்டும். அப்படி ஓடும் போது உடலின் பாகங்களில் துப்பாக்கி ரவைகள் பாயாதவிதமாக வளைந்தும், நெளிந்தும், நாலு பல்டி அடித்தும் கால்களை சுழற்றி ஓடவேண்டும். அவ்வாறான உயிர் தப்பும் ஓட்டத்துக்கு சிறப்புப் பயிற்சியாக சுழல் கால் ஓட்டப் போட்டி நடத்தலாம்.

வழக்கமான ஓட்டப் போட்டிகளில் வன், ரூ, திறீ என்று சொல்லிவிட்டு சுடுவார்கள். ஓட்டம் ஆரம்பமாகும். ஆனால் இப் போட்டிகள் எதிலுமே வன், ரூ, திறீ சொல்லப்பட மாட்டாது, எல்லாமே திடீர் அட்டாக்தான். விதி நன்றாக இருந்தால் ஓடி முடிக்கலாம்.

### பழகு ராணிகள், பழகு ராஜாக்கள் போட்டி

இதுதான் ஒரு முக்கியமான.. மிகமிக முக்கியமான போட்டி.

யாருடைய கையில் அதிகாரம் இருக்கிறதோ அவர்களுடன் ஒட்டி உறவாடுவது தொன்று தொட்டு இன்றுவரை பொத்திப் பாதுகாக்கப்பட்டு வரும் ஒரு.. கலையாகும்.

யாழ்ப்பாணத்திலும் இக்கலை ஒரு சாராரிடம் பாரம்பரியமாக நிலவுவதைக் காணலாம்.

முன்னர் ஒரு காலத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருடன் சந்தியில் நின்று நாலுபேர் பார்க்கக் கூடியதாக சிரித்துப் பேசுவது ஒரு கெளரவமாக கருதப்பட்டது. அப்படிக் கதைக்கும் நபர்கள் ஆண்கள் என்றால் ஏனையோர் பார்க்கும்போது சேட் கொலரைத் தூக்கிவிட்டுக் கொள்வர். பெண்கள் என்றால் கண்களில் ஒரு கர்வத்தை தொங்கவிட்டிருப்பர்.

அதுவே பின்னர் இயக்கங்கள் வளர்ந்த கட்டத்தில் இயக்க உறுப்பினர்களை கைக்குள் போடும் கலையாகவும், பின்னர் இயக்கங்கள் ஓட புலிகளுக்கு ஐஸ் வைக்கும் அபார கலையாகவும், இந்தியப்படை வந்த பின்னர் நாலு ஹிந்தி வார்த்தைகளை பொறுக்கோ பொறுக்கென்று பொறுக்கிக் கொண்டு இந்தியப் படையினரை தடவிக் கொடுக்கும் கலையாகவும் அசுர வளர்ச்சி பெற்றதை யாவரும் அறிவர்.

இக் கலை, ஜால்ராபோடுதல், வால் பிடித்தல், பந்தம் பிடித்தல், பல்லிளித்தல், முதுகு சொறிதல் போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வருகிறது.

இக் கலையில் தேர்ச்சி பெற்ற ஆண்கள் என்றால் நாவன்மை, முன்னால் உள்ளவரின் முகக் குறிப்பு அறிந்து முதுகுசொறியும் திறமை, ஐஸ் தயாரிப்பில் புலமை போன்றவற்றில் கண்டிப்பாக கைதேர்ந்து இருக்க வேண்டும். இவர்களே பழகு ராஜாக்கள் போட்டியில் பங்கு பெற அடிப்படை தகுதி படைத்தவர்கள். (இவர்கள் முன்னர் யாருக்கு முதுகு சொறிந்திருந்தாலும் அது தகுதியின்மையாக கருதப்படமாட்டாது)

பெண்களாக இருந்தால் கொஞ்சம் அழகு, கொஞ்சம் பேச்சு நளினம், கொஞ்சம் தாராளம், கோள் சொல்லும் குணம் தெரிந்திருக்க வேண்டும். இவர்களே பழகு ராணிப் போட்டியில் கலந்து கொள்ளும் அடிப்படை தகுதி பெற்றவர்களாவர்.

*"அதிகாரம் உள்ளவன் நினைக்கிறான் இந்த அடிமை அதை முடிக்கிறான்"*

என்று இட்ட பணியை மட்டுமல்லாமல், இடாதபணியையும் செய்து முடிக்கும் பக்குவம் தெரிந்தோர் மத்தியில்தான் இறுதிச் சுற்றுப் போட்டி நடைபெறவேண்டும்.

இறுதியாக பழகுராஜாக்கள் மூவரும், பழகு ராணிகள் மூவரும் தெரிவுசெய்யப்படுவர்.

இவ்வாறான போட்டிகள் மேலும் பல பழகுராஜாக்களையும், பழகு ராணிகளையும் உருவாக்கவும், ஊக்குவிக்கவும் உபயோகப்படும்.

### மொட்டைக் கடிதப் போட்டி

இதுவும் நீண்டகாலமாக தலைமுறை தலைமுறையாக ஒரு சாராரிடம் புதைந்து கிடக்கும் மிக அரிய சொறிய.. மன்னிக்கவும்.. பெரிய கலையாகும்.

பல விதமான வடிவங்களில் எழுத்துகளை வடிக்கத் தெரிந்தவர்களாக இருப்பதே இப் போட்டியில் பங்கு கொள்ளும் அடிப்படைத் தகுதியாகும்.

கண்டிப்பாக சொந்தக் கையெழுத்து போடக்கூடாது. (இக் கலையில் தேர்ச்சி இருப்பின் சொந்தக் கையெழுத்தே மறந்து போய்விடும்) பல விதமான கையெழுத்துக்கள் போடத் தெரிந்திருக்க வேண்டும்.

மொட்டைக் கடிதம் போட்டவர்கள் யாருக்காவது தப்பித் தவறி மனச்சாட்சி உறுத்துமானால் இவ்வாறான போட்டிகள் அந்த உறுத்தலைப் போக்கிவிடும்.

### வயது எல்லை

இத்தால் சகலமானவருக்கும் அறிவிப்பது யாதெனில், நடைபெறும் போட்டிகள் எதற்கும் பால், வயது வேறுபாடுகள் கிடையாது.

குண்டெறிதல், குறிபார்த்துச் சுடுதல், மாறுவேடப் போட்டிகள் போன்றவை மட்டும் கண்டிப்பாக அனுமதிக்கப்படமாட்டாது.


*மேலதிக விபரங்களுக்கு*
*காதிலை பூ கந்தசாமி*
*ஏமாந்தபுரம்.*

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
580230
பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06


# பாயும் பந்து பாயும்







ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
323657
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


↓ இந்த இளைஞனின் வழித்துணைபோல அசைந்து செல்வதுதான் நீர்யானை. சாதாரணமாக நினைத்து விடாதீர்கள். உலகில் மூன்றாவது பெரிய மிருகம் நீர்யானைதான். முதலாவது யானை. இரண்டாவது காண்டாமிருகம், மூன்றாவது இடத்தில் வருகிறது நீர்யானை.

நீர்யானைகளின் சராசரி எடை என்ன தெரியுமா? 2 ஆயிரத்தி 500 கிலோ. தமது எடையை இவற்றால் தாங்க முடியாது. ஏனெனில் இவற்றின் கால்கள் சிறியவை. அதனால்தான் எடை கூடிய நீர்யானைகள் அனேகமாக நீரிலேயே வாழ்கின்றன. 'காட்டாறுகளை சந்திப்போம்' என்று அரசியல்வாதிகள் மேடைகளில்தான் பேசுவார்கள். ஆனால் நீர்யானைகள் காட்டாறுகளிலும் வாழக்கூடியவை. நீர்யானைகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று காட்டாறுகளில் வாழ்பவை. இன்னொரு வகை, அடர் காடுகளில் வாழ்பவை. படத்தில் ஹாயாக செல்வது குட்டி நீர்யானை. காட்டில் இருந்து திசைமாறி வந்துவிட்டது. எடுத்து வளர்த்து பராமரிக்கிறார்கள். ■

↑ கூடைப்பந்து விளையாட்டில் முன்வரிசையில் இருப்பது அமெரிக்கா. அமெரிக்க கூடைப்பந்து வீரர்களில் கறுப்பு வைரங்கள் என்று அழைக்கப்படும் இரண்டு சாதனையாளர்கள் இருக்கின்றார்கள். ஒருவர் மைக்கேல் ஜோர்டான். இன்னொருவர் மஜிக் ஜோன்சன். (படத்தில் சிகப்பு அங்கியுடன் மைக்கேல் ஜோர்டான், மஞ்சள் அங்கியுடன் மஜிக் ஜோன்சன்)

கூடைப்பந்து விளையாட்டில் பழம் தின்று கொட்டை போட்டவர் மைக்கேல் ஜோர்டான். 10 ஆயிரம் புள்ளிகளைத் தாண்டிய சாதனையாளர்களில் ஒருவர். மொத்தம் 24 ஆயிரத்தி 489 புள்ளிகள் பெற்றிருக்கிறார். 766 போட்டிகளில் பங்கேற்றுள்ளார். சராசரி புள்ளிகள் 31.9. 1984 முதல் 1996 வரை கணக்கெடுக்கப்பட்ட சாதனைப் பட்டியல்தான் இவை.

1994 செப்டம்பர் 18ம் திகதி அமெரிக்க ஒக்லஹோமா மாநிலத்தில் பெத்தனி என்னும் இடத்தில் நடைபெற்ற போட்டியில் உலக சாதனை ஒன்றினை படைத்து அசத்தினார். ஒரு நிமிடத்தில் முக்கிய புள்ளிகள் பெறும் ஏழு நிலைகளில் நின்று 29 தடவை பந்து வீசி, அதில் 25 பந்துகளை லாவகமாக கூடைக்குள் செலுத்தியதுதான் சாதனை.

மற்றொரு கறுப்பு வைரம் மஜிக் ஜோன்சன். 'எய்ட்ஸ்' இருப்பதாக பரவிய செய்தியால் பெரிதும் பாதிக்கப்பட்டவர். மஜிக் ஜோன்சனுக்கு 'எய்ட்ஸ்' இருப்பதால் அவருடன் விளையாடமாட்டோம் என்றெல்லாம் சக வீரர்களே பயந்து அலறினார்கள். அவ்வாறு இருந்தும் ஒலிம்பிக் கழகம் மஜிக் ஜோன்சனை 1992ல் பார்சிலோனா ஒலிம்பிக்கில் விளையாட அனுமதித்தது.

அமெரிக்க கூடைப்பந்து விளையாட்டு வரலாற்றில் இரண்டு கறுப்பு வைரங்களும் என்றென்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கும். ■

# நீரும் – நிலமும்



↑ நிலத்தில் மட்டும்தான் நாய் இருக்கிறதா என்ன, கடலிலும் இருக்கிறது நாய். படத்தில் கடலுக்கடியில் காணப்படுவதுதான் கடல்நாய். இதனை 'சீல்' என்று அழைப்பர்.

நிலத்தில் வாழும் நாய்களை கடலில் தூக்கிப்போட்டால் நீந்தி கரைக்கு வந்துவிடும். கடலில் அவற்றால் சீவிக்க முடியாது. ஆனால் கடல் நாய்கள் நீரில் மட்டுமல்ல நிலத்திலும் வாழக்கூடியவை என்பதுதான் விசேஷம். கடல்நாய்களுக்கு தனியாக சீவிப்பது என்றால் போர் அடிக்குமாம். அதனால் கூட்டம் கூட்டமாகவே காணப்படும். சிலவகையான கடல் நாய்கள் மட்டும் தனிமை விரும்பிகள்.

கடல் மீன்கள்தான் பிடித்த உணவு. கடல்நாய்களுக்கு பரமவிரோதிகள் மனிதர்கள்தான். மிகப் பெரிய கடல்நாயின் நீளம் 2.5 மீட்டர். எடை 300 கிலோ. கடல்நாய்களை மனிதர்கள் வேட்டையாடுவதால் பலநாடுகளில் கடல் நாய்களை வேட்டையாடுவதற்கு கடும் தடை உள்ளது. வட-தென் துருவக் கடலில்தான் இவை அதிகளவில் சீவிக்கின்றன. வித்தியாச நாய்! ■

# வழித்துணை




# ஆபத்தும் உண்டு

→ இங்கே வட்ட வட்ட வடிவத்தில் இருப்பவை ஒக்டோபஸின் உறிஞ்சிகள். முதலில் ஒக்டோபஸ் பற்றி குட்டி விளக்கம். மென்மையான உடல்கொண்ட, பெரிய கண்களை உடைய கடல் விலங்கினம். கிட்டத்தட்ட பார்வைக்கு கணவாய் மாதிரித் தெரியும். ஒக்டோபஸ்சுக்கு எட்டுக் கைகள் இருக்கின்றன. அந்தக் கைகளில் இருக்கிறது சூட்சமம். கைகளின் அடிப்பாகத்தில் உணவை உறிஞ்சும் உறுப்புக் காணப்படும். அதன்மூலம்தான் சாப்பாடு. சுமார் நூறுவகை ஒக்டோபஸ்சுக்கள் உலகில் உள்ளன. பசுபிக் சமுத்திரத்தில்தான் இராட்சத ஒக்டோபஸ்சுக்கள் சீவிக்கின்றன. இவற்றின் எடை சராசரியாக 50 கிலோ. நீளம் 5 மீட்டர்.

படத்தில் இருப்பது 10 மீட்டர் நீளமான இராட்சத ஒக்டோபஸ்சின் கைகளில் உள்ள உறிஞ்சிகளில் ஒரு பகுதி. கடல்நாய், திமிங்கிலம், பெரிய மீன்கள் போன்றவைதான் ஒக்டோபஸ்சுக்கு பிடித்த உணவு. மனிதன் மாட்டினாலும் தொலைந்தான். 5 கிலோ எடையுள்ள ஒக்டோபஸ்கூட மனிதனைக் கொல்லும் வலிமையுடையது. எல்லாம் கைகளில் உள்ள சூட்சமம்தான். தன்னால் கைப்பற்றப்படும் விலங்கின் உடலில் தன் உடலிலுள்ள நஞ்சைச் செலுத்தி செயலற்றதாகச் செய்துவிட்டுத்தான் உறிஞ்சிகள் மூலமாக சாப்பிடும். இதற்கு நிறம் மாறும் குணமும் உண்டு. கில்லாடி ஒக்டோபஸ்.

**இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட ஒக்டோபஸ்சில் 10 மீட்டர் நீள ஒக்டோபஸ்தான் பெரியது. அதன் உறிஞ்சிதான் இது.** ■



# 1 வது பிறந்தநாள் வாழ்த்து



சுவீறஜன் (றஜன்)

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த இந்திரன்-சக்தி தம்பதியினரின், செல்வப் புதல்வன், சுவீறஜன், தனது 1வது பிறந்தநாளை 01-05-1997 அன்று ஜேர்மனியில் வசிக்கும், தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா (சுவிஸ்), தாத்தா, அம்மம்மா (இலங்கை), மற்றும் இலங்கையிலும், ஜேர்மனியிலும், சுவிஸிலும் வசிக்கும் பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், தம்பிமார், தங்கைமார், உற்றார், உறவினர், நண்பர்கள், பல்கலைகளும் பெற்று பாலையடி வைரவர் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*தகவல்: அப்பம்மா (சுவிஸ்), தாத்தா-அம்மம்மா (இலங்கை)*




# சுழல் வீச்சு

→ இந்திய அணியில் அனில் கும்ளே இடம்பிடித்துக் கொண்டது 1990ல் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில். ஆனாலும் உள்ளூர் போட்டியான இராணி கோப்பைப் போட்டியில்தான் (1992ல்) கும்ளேயின் திறமை பளிச்சிட்டது. அதன்பின்னர் தென்னாபிரிக்கச் சுற்றுப்பயணத்தில் தன் வித்தையைக் காட்டினார். தென்னாபிரிக்க, ஜோகனஸ் பேர்க்கில் நடைபெற்ற ஒரு போட்டியில் ஆறு விக்கெட்டுக்களைச் சாய்த்தபோது கிரிக்கெட் ரசிகர்களின் பார்வை கும்ளேமீது திரும்பியது.

டெஸ்ட் போட்டிகளில் நூறு விக்கெட்டுக்களை கைப்பற்றிய இந்திய வீரர்கள் பட்டியலில் 1995ல் இணைந்து கொண்டார் கும்ளே. இங்கிலாந்தின் நோர்த்தாம்ப்டன்ஷயர் கிளப் அணிக்காக விளையாடிய கும்ளே அங்கும் 100 விக்கெட்டுக்களை சாய்த்தார். இங்கிலாந்து கிளப் போட்டிகளில் விளையாடிய வீரர்களில் நூறுவிக்கெட்டுக்களை சாய்த்த முதல் இந்திய வீரர் கும்ளேதான்.

அது மட்டுமல்ல சர்வதேச ரீதியில் தரம் வாய்ந்த பிரபல விளையாட்டு நிர்வாக நிறுவனமான இன்டர் நாஷனல் மனேஜ்மென்ட் குருப் (ஐ.எம்.ஜி) இவரை ஒப்பந்தம் செய்துள்ளது. இனிப் பணம் குவியும்.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை (14) சாய்த்த வீரர் என்பது கும்ளேயின் மற்றொரு அசத்தல். சமீபத்தில் மேற்கிந்திய தீவில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இரண்டு டெஸ்ட்டுக்களில் இருமுறை ஒரே இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார். முதல் டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் 120/5, இரண்டாவது டெஸ்ட் முதல் இன்னிங்ஸில் 104/5, கும்ளேயின் சாதனைகள் இன்னும் உச்சத்தை எட்டப்போவது நிச்சயம். ■



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சுவீந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் [illegible] சாலையில் உள்ள சமலை அச்சகத்தில் மே 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது
படிப்பகம்